யாழ்ப்பாண தென்மோடி கூத்துமரபு

# இசை மெட்டுக்கள்

யாழ்ப்பாணத்தில் மரபுவழியாகப் பேணப்பட்டு வரும் தென்மோடி (கத்தோலிக்க) கூத்துமரபுப் பாடல்களுக்கான மூல மெட்டுக்களின் தொகுப்பு





JPL
C8518



தொகுப்பு
ாவியர் அ. பேக்மன் ஜெயராஜா
ா. யோண்சன் ராஜ்குமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

KOHA
JPL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண தென்மோடி கூத்து மரபு

# இசை மெட்டுக்கள்

யாழ்ப்பாணத்தில் மரபுவழியாகப் பேணப்பட்டு வரும் தென்மோடி
(கத்தோலிக்க) கூத்துமரபுப் பாடல்களுக்கான மூல மெட்டுக்களின் தொகுப்பு

200519

KOHA-JPL

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்;
விசேட சேர்க்கைப் பகுதி

தொகுப்பு

அண்ணாவியார் அ. பேக்மன் ஜெயராஜா

யோ. யோண்சன் ராஜ்குமார்

31 OCT 2008
மாநகரசபை யாழ்ப்பாணம்

வெளியீடு:

**திருமறைக் கலாமன்றம்**

238 பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
Tel. & Fax: 021-222 2393
E-mail:cpateam@sltnet.lk
Website: www.cpartsteam.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் : யாழ்ப்பாண தென்மோடி கூத்து மரபு
இசைமெட்டுக்கள்
விடயம் : நாட்டுக்கூத்துப் பாடல்களின் தொகுப்பு
தொகுப்பு : அண்ணாவியார் அ. பேக்மன் ஜெயராஜா
யோ. யோண்சன் ராஜ்குமார்
பக்கங்கள் : XXIV + 132 = 156
முதற்பதிப்பு : டிசெம்பர் 2007
பதிப்புரிமை / வெளியீடு : திருமறைக் கலாமன்றம்
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
அச்சுப்பதிப்பு : சுரபி பதிப்பகம்
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
கணினி சார்ந்தவை : ஜெயந்த் சென்ரர்
28 , மாட்டின் வீதி, யாழ்ப்பாணம்.
வடிவமைப்பு : கி. செல்மர் எமில்
அட்டைப்படம் : அ. ஜுட்சன்

398.2

*இந்நூலுடன் யாழ்ப்பாண தென்மோடி கூத்து மரபின் 153 பாடல் மெட்டுகளின் இறுவட்டும் (MP3) இணைக்கப்பட்டுள்ளது.*

*விலை :*

இறுவட்டு - 300/=

நூல் - 200/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை

கலைகள் என்பன விண்ணிலிருந்து மலர்பவைகள் அல்ல. அவை மக்களது வாழ்வியலுடன் பின்னிப் பிணைந்து அவர்கள் வாழ்வின் வளத்திலிருந்தும் வளர்ச்சியிலிருந்தும் நெறிமுறைகளிலிருந்தும் முகிழ்பவை. அவைகளின் இயல்புக்கும் செறிவுக்கும் சூழலின் பங்களிப்பு இன்றியமையாதது.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தமட்டில் ஆடல், பாடல், நாடகம், நடனம் என்று பார்க்கின்ற பொழுது, தனித்துவமான தனி இடத்தைப் பிடிக்கின்ற கலை கூத்து. கிராமங்களின் உயிர்த்துடிப்பாக விளங்கிய இக்கலை, அன்னியரின் ஆட்சியின் கீழ் 'நாகரிகத்தின்' பெயரால் நலிவு பெறத் தொடங்கியது. ஆயின், தமிழ்த் தேசியம் தன்னை இனங்கண்டு விழித்தெழுந்த பொழுது, இக்கலையே தனது பூர்வீக வேர் என்பதை பற்றுணர்வுடன் ஏற்று அதைப் போற்றி வளர்க்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் முன் வைத்தது.

திருமறைக் கலாமன்றம் என்ற கலை இலக்கிய இயக்கம் எந்த மண்ணில் இயங்கினும், அந்த மண்வாசனையுடன் இணைந்து, அம்மண்ணின் வேர்களிலிருந்து விலகாது அவை களைக் கட்டிக்காத்து மெருகூட்டி வளர்க்க முனைகின்றது. யாழ். திருமறைக் கலாமன்றம் ஈழத்தமிழர்களின் சிறப்புக் கலைவடிவ மாக விளங்கும் கூத்தினை அறுபதுகளிலிருந்து ஏதோ ஒரு வகையில் வளர்த்து வந்துள்ளது. அதனால் 2003 இல்



KOHA-JPL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்தப்பட்ட கூத்துவிழாவில் இக் கலைசார்ந்த அறிஞர்கள் பலர் கலந்துகொண்ட அரங்கில் நான் ஒரு எண்ணத்தை முன் வைத்தேன். அது ஒரு கருத்துமட்டுமல்ல, செயற்திட்டமும் கூட. கூத்துக் கலைப்பணி மூன்று தளங்களில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

முதற்கண், இயலுமானவரை அதனது 'தூய்மையில்' அதாவது, பூர்வீக வடிவங்களுடன் அவ்வப் பிரதேசங்களில் பேணிக் காக்கப் பட்டு ஊக்குவிக்கப்பட்டு வளர்க்கப்படவேண்டும்.

அடுத்து,

கூத்துக்கள் பற்றிய பதிவுகள் (எ+டு: வரலாற்றுத் தகவல்கள், பொருள்கள், பனுவல்கள், இசைமெட்டுக்கள்) பல்துறைகளில் ஆவணப்படுத்தப்படல் வேண்டும்.

ஈற்றில்,

தேர்வாய்வு முறையில் இன்றைய நவீன சுவைக்குப் பொருந்தியதான புத்தாக்கங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

இவைமூன்றையும் யாழ். திருமறைக் கலாமன்றம் நடைமுறைப் படுத்தியும் வந்துள்ளது.

தொண்ணூறுகளுக்குப் பின்னர் திட்டமிட்ட வகையில் தாயகத்தின் பல இடங்களிலிருந்து கூத்துக்கள் வர வழைக்கப்பட்டு மன்ற அரங்கில் மேடையேற்றப்பட்டன. கூத்துக் கலைஞர்கள் பலர் மன்றத்தினால் கௌரவிக்கப்பட்டனர். தேவை ஏற்பட்டபொழுது மன்றக் கலைஞர்கள் வெவ்வேறு இடங்களுக்கு சென்று கூத்துக் கலை சார்ந்த பட்டறைகளை நடத்தினர்.

கூத்து நூல் என்ற பிரசுர வரிசை ஒன்று யாழ். திருமறைக் கலாமன்ற வெளியீட்டுப் பிரிவினால் ஆரம்பிக்கப்பட்டு, அவ் வரிசையில் ஒரு சில கூத்துக்கள் - பழையனவும், புதியவையும் - அச்சேறின. கூத்து இசை நாடாக்கள் மன்றத்தின் கூத்துப்பிரிவுக் கலைஞர்களினால் வெளியிடப்பட்டன.

அறுபதுகளில் இருந்து இற்றைவரைக்கும் தேர்வாய்வு முறையில் பற்பல கூத்துக்கள் மேடையேற்றப்பட்டு இருக்கின்றன. **மூவேந்தர்** என்பதுடன் ஆரம்பமாகி, **சிங்ககுலச் செங்கோல்** எனும் புத்தாக்கப் படைப்பையும் தாண்டி, இவ்வாண்டு வடமாகாணக் கல்வி பண்பாட் டலுவல்கள் அமைச்சின் இலக்கிய நூல் பரிசுப் போட்டியில் நாடகத் துறையில் பரிசுபெற்ற **கொல் ஈனுங் கொற்றம்** எனும் கூத்துருவ நாடகத்தினையும் படைத்து திருமறைக் கலாமன்றம் வரலாற்றுப் பதிவை உறுதிசெய்திருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்முயற்சிக்கு உந்துசக்தியாக விளங்குவன: திருமறைக் கலாமன்றக் கலைஞர்களின் புத்தம் புது எண்ணக்கருக்கள், கடின முயற்சி, வியத்தகு கலை ஆற்றல்கள், அளப்பரிய அர்ப்பணம்.

இப்பின்னணியில் யாழ். திருமறைக் கலாமன்றம் நடத்தும் 2007 கூத்துவிழாவும் முக்கியத்துவத்தை பெறுகின்றது. இவ்விழாவில் ஒலிப்பேழையாகவும் - நூலாகவும் வெளியிடப்படுகின்ற 'தென்மோடி இசை மெட்டுக்கள்' என்னும் தொகுப்பு சில ஆண்டுகளாக எமது மன்றக்கலைஞர்கள் மேற்கொண்ட பல்வேறு தேடல் முயற்சிகள், அண்ணாவிமார்களுடனான சந்திப்புக்கள், கருத்தமர்வுகள் போன்றவை களினூடாக உருவம் பெற்று பல கலைஞர்களின் பங்களிப்பின் வடிவமாக வந்துள்ளது. இம் முயற்சியின் மூலம் அழிவின் விளிம்பில் நின்ற தென்மோடிக்கூத்து மரபின் பாடல் மெட்டுக்கள் ஆவணமாகியுள்ளன. கூத்தின் எதிர்காலப்பேணுகைக்கும் விரிவான ஆய்வுக்கும் இவ் ஆவணம் ஒரு மூலாதாரமாய் அமையும் என்று நம்புகின்றேன்.

**பேராசிரியர் நீ. மரிய சேவியர் அடிகள்**
இயக்குநர்
திருமறைக் கலாமன்றம்.

பொதுசன நூலக
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரை

நாட்டுக்கூத்துப்பாடல் மெட்டுக்களின் பதிகையொன்றினை திருமறைக் கலாமன்றம் வெளியிடுவது மிகவும் பயனுள்ள முயற்சியாகும். நாட்டுக்கூத்துக்களில் குறிப்பாக, யாழ்ப்பாண தென்மோடிக்கூத்துக்களில் பாடல்களே முதன்மையானவை. இப்பாடல்கள் பல்வேறு மெட்டுக்களில் அமைவன. இவற்றை பேணுவதற்கும், எதிர்கால சந்ததிக்குக் கையளிப்பதற்கும் இத்தகைய ஆவணமாக்கல்கள் மிகமிக அவசியமானவை. அத்துடன் கூத்துப்பாடல்களை தனியாகக் கேட்பதற்கும், அளிக்கை செய்வதற்கும் இத்தகைய பதிகை நன்கு உதவுமென்பதில் ஐயமில்லை.

இதில் இருபத்திரண்டு நாட்டுக்கூத்துப் பிரதிகளில் இருந்து நூற்றி ஐம்பத்து மூன்று பாடல்கள் தெரிந்தெடுக்கப் பட்டு, ஒலிப்பதிவாக்கம் செய்யப்பட்டிருப்பதுடன் அப்பாடல்கள் நூல்வடிவத்திலும் தொகுக்கப் பட்டுள்ளது. காப்புப்பாடல்கள், வரவுதருக்கள், கட்டியகாரன் வரவு, அரசன் வரவு, மந்திரிவரவு, சேனாதிபதிவரவு, நாடகக்காரன் வரவு, பேய் வரவு, கள்ளர்தரு, சம்மனசுதரு, சாம்புவன் தரு, நாட்டுவளப்பம், உரையாடல் தரு, தனிப்பாடல்கள், வேட்டைப்பாடல்கள், சிறப்புத்தருக்கள், பின்னிணைப்பு, மங்களத்தரு என ஒரு ஒழுங்கு முறையில் நாடகப் பாடல்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பாடல் மெட்டினையும் நிரற்படுத்தும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாடலின் கீழ் சில குறிப்புக்கள் தரப்படுகின்றன. அவை பயனுள்ள குறிப்புக்களாக அமைகின்றன. எடுத்துக்காட்டாக பத்தொன்பதாவது பாடல் மெட்டாக அமையும் "சீர்மையதிபதி..."(பக்கம் - 14) என்னும் சேனாதிபதி வரவுப்பாடலின் முடிவில்

- ✶ இம்மெட்டு கீரவாணி இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டுள்ளது.
- ✶ இத்தரு பெருவழக்காக பாஷையூர் பகுதியிலேயே காணப்படுகிறது.
- ✶ பதிகைக்கான மூலபாடம் : கண்டி அரசன், பக்கம் - 68

என்னும் குறிப்புகள் காணப்படுகின்றன. இதுமிகவும் வேண்டத் தக்க ஒரு நல்ல முயற்சியாகும். அத்துடன் பாடல்களுக்கான சரியான, இராக தாளங்கள், ஆய்வுக்குட்படுத்தப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ளன.

இத்தகைய முக்கியத்துவம்மிக்கதான 'தென்மோடி கூத்துமரபு இசைமெட்டுக்கள்' என்ற இத்தொகுப்பு பலருடைய வரவேற்பையும் பெறும் என்பதில் ஐயமில்லை. இத்தொகுப்பு முயற்சியை மேற்கொண்ட, அண்ணாவியார் பேக்மன் ஜெயராஜா, யோண்சன் ராஜ்குமார் ஆகியோருக்கு என்பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்வடைகின்றேன். பயனுள்ள இந்நூலுக்கு இச்சிறு அணிந்துரையை எழுதுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

**பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ்**
தகைசார் வாழ்நாட் பேராசிரியர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிப்புரை

பல்வேறுபட்ட நெருக்கடிகளும், இடர்களும் இம் மண்ணைச் சூழ்ந்து நிற்கும் இக்காலத்தில், மற்றுமொரு பாரிய முயற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளோம் என்பதையிட்டு மனநிறைவு அடைகின்றோம்.

பல தளங்களில் விரிந்து, பரந்து நிற்கும் திருமறைக் கலாமன்றத்தின் பணிகளில் ஒன்றாக, ஈழத்தமிழர்களின் கலைத்துறை மேம்பாட்டிற்காக அது ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் மேற்கொண்டு வரும் பல வகையான செயற்பாடுகளையும் அனைவரும் அறிவர். அவற்றில்; குறிப்பாக, ஈழத்தமிழர்களின் மரபு வழிக் கலை வடிவமாக நிலைபெற்றுள்ள நாட்டுக்கூத்துக் கலையை அழியவிடாது பேணுவதற்காக எமது மன்றம் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது.

இவை, நாட்டுக்கூத்து மேடையேற்றங்கள், நூல் வெளியீடுகள், அண்ணாவிமார்களுடனான தொடர்ச்சியான சந்திப்புக்கள், கலந்துரையடல்கள், கருத்தரங்குகள் என பலவாறாக நீண்டு செல்கின்றது. இதன் தொடர்ச்சியில், கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்பு, பாரம்பரியக் கலைகளை ஆவணப்படுத்தும் செயற்பாடாக, 2002 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் திகதி உலக நாடகத் தினத்தன்று 'பதிகை' எனும் பெயரில் மன்றம் ஆரம்பித்த பாரிய முயற்சியில் ஒன்று, இப்போது பல்வேறு செயற்பாடுகளுக்கூடாக நிறைவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துள்ளது.

போர், அதனால் ஏற்படும் புலப்பெயர்வு, நவீனத்துவத்தின் ஆக்கிரமிப்பு, நாட்டுக்கூத்துக் கலையை உயிர்ப்புடன் காவி வந்த கிராமங்களின் மறைவு, அண்ணாவிமார்களின் இறப்பு உட்பட பல்வேறு காரணங்களால் இக்கலை நலிவடைந்து, அழிவடைந்து சென்று கொண்டிருக்கும் இக்காலத்தில், இந்நிலையில் இருந்து அதனை மீட்டெடுப்பதற்கான செயற்பாடுகளின் அவசியம் உணரப்பட்டுள்ள வேளையில், யாழ்ப்பாணத்தில் மரபு வழியாகப் பேணப்பட்டுவரும் தென்மோடி (கத்தோலிக்க) கூத்து மரபின் பாடல்களுக்கான மூல மெட்டுக்களையாவது முடிந்தவரை அவற்றின் மூலத் தன்மை மாறுபடாது, இனங்கண்டு ஒழுங்குபடுத்தி இசைப் பேழை வடிவிலும், நூல் வடிவிலும் ஆவணப்படுத்த வேண்டும் என்ற முனைப்புடன் இச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. எனினும் இதனை நிறைவுக்கு கொண்டு வர ஐந்து ஆண்டுகளை செலவழிக்க வேண்டியவர்களானோம். இம் முயற்சி நூறு வீதம் முழுமையாகி விட்டதென்று சொல்ல முடியா விட்டாலும், முடிந்தவரை முழுமைப்படுத்தியுள்ளோம் என்பதையிட்டு மகிழ்வடைகின்றோம்.

நூறு வீதம் முழுமை என்பது எவ்வளவு தான் முயன்றாலும் முடியாது என்னும் அளவுக்கு பல காரணங்கள் உண்டு. அவற்றில் முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியது, மூலமெட்டுகள் பலவற்றைப் பாடுவதற்கு அவற்றுக்கான இராகங்கள் தெரிந்த அண்ணாவிமார்கள் பலரும் காலமாகிவிட்டார்கள் என்பது தான். மற்றையது, மேற்குறிப்பிட்டது போல் அண்ணாவிமார்கள் பலர் இடம் பெயர்ந்தும், புலம் பெயர்ந்தும் சென்றுள்ளமை காரணமாக அவர்களில் பலரை இச் செயற்பாட்டில் இணைக்க முடியாது போனமையுமாகும்.

நாம் இச் செயற்பாட்டிற்கு அடித்தளம் இட்ட 2002 ஆம் ஆண்டுக் காலம் இம் மண்ணில் போர் ஓய்ந்து, அமைதி நிலவிய காலமாக இருந்தது. ஆனால், இதனை நிறைவுக்கு கொண்டு வந்து வெளியிடும் இக்காலம் மீளவும் யுத்தத்தின் கொடூரம் இம் மண்ணை பெரும் அவலத்திற்குள் தள்ளி நிற்கின்ற காலமாக இருக்கின்றது. இந்த இடைப்பட்ட காலத்தில் இம் முயற்சியை முன்னெடுப்பதில் நாம் சந்தித்த சவால்கள், இடர்கள் எண்ணிலடங்காதவை. அவற்றை எல்லாம் விலாவாரியாக இங்கு வரி வடிவம் கொடுப்பதற்கு அவகாசம் போதாது. எனினும் ஒன்றைக் குறிப்பிடலாம். நாம் இம் முயற்சியை ஆரம்பித்த காலத்தில் அதன் ஆரம்பகட்டச் செயற்பாடுகளில் இணைந்து செயற்பட்ட பல கலைஞர்களைக்கூட மீளவும் வந்த யுத்தம் திசைக் கொன்றாக தள்ளிக் கொண்டு போய் விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் முயற்சியில் தளராது தொடர்ந்து செயற்பட்டதன் பயனாக ஏறத்தாழ 153 வரையிலான மெட்டுக்களை இனங்கண்டு அவற்றுக்கு இசைவடிவம் கொடுத்து அதனை இறுவட்டு **(MP3)** வடிவில் வெளியிடும் சம நேரத்தில் நூல் வடிவிலும் வெளியிடுகின்றோம். இப் பாடல்களுக்கான ஒலிப்பதிவுகள் இவ்வாண்டில் பல நாள்கள் 90 மணித்தியாலங்கள்வரை இடம்பெற்றது. இதன் முழுமைக்காக எம்மோடு இணைந்து நின்ற ஒவ்வொரு துறை சார்ந்த கலைஞர்களுமே இதனை தமது வேலையாகக் கருதாமல் காலத்தில் மிக அவசியமான இப் பணியை நாம் நிறைவாகச் செய்து முடிக்க வேண்டும் என்ற உந்துதலுடன் தம்மை முழுமையாக அர்ப்பணித்து நின்றார்கள். அவர்கள் ஒவ்வொருவரையும் மிகுந்த பற்றுதலுடன் நெஞ்சமதில் கொள்ளுகின்றோம்.

நிறைவாக, இதனை நூல் வடிவில் வெளியிடும் முயற்சி குறைந்தளவு கால அவகாசத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது. இறுதி நேரத்தில் கேட்ட போதிலும் ஒப்புதல் தந்து இயன்றவரை அழகாக அச்சிட்டுத்தந்த யாழ். சுரபி பதிப்பகத்தினர். நேர காலம் பாராது தன்னை முழுமையாக அர்ப்பணித்து கணனி வேலைகளைச் செய்து தந்த ஜெயந்த் சென்ரர் உரிமையாளர் கு. இராயப்பு அவர்கள், அட்டைப் படத்தை அழகுற வடிவமைத்து, அச்சிட்டுத் தந்த ஜே. எஸ். கிராபிக்ஸ் உரிமையாளர் அ. ஜுட்சன் அவர்கள் மற்றும், எமது மன்ற நண்பர்கள் அனைவருக்கும் மனப்பூர்வமான நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

தொடர்ந்தும் எமது மன்றத்தின் செயற்பாடுகள் தொடர அனைவரது ஆதரவினையும் எதிர்பார்த்து நிற்கின்றோம்.

**கி. செல்மர் எமில்**
இணைப்பாளர்,
ஊடக - வெளியீட்டுப்பிரிவு,
திருமறைக்கலாமன்றம்,
யாழ்ப்பாணம்

*21.12.2007*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

# தொகுப்புரை

ஈழத்தமிழரின் மரபுவழிக் கலைவடிவமான நாட்டுக் கூத்து, எமது பண்பாட்டின் மறுதலிக்க முடியாத அடையா ளங்களிலொன்று. இது எமது மரபின் வேர்களுக்குள் உறைந்து மண்ணின் கலாசார கூறுகளில் ஒன்றாக எஞ்சி நிற்பது 'எங்களுடையது' என நாம் இனங்காணும் பலவற்றுள் இதுவும் ஒன்று இதனை, இதன் வேர் கெடாது புதியவை துளிர்க்கும் பசுமரம்போல் மாற்ற வேண்டியது எமது பாரிய பொறுப்பு ஆகும். திருமறைக் கலாமன்றம் இப்பொறுப்பினை தன்னால் இயன்றளவில் ஏற்று செயற்பட்டு வருகின்றது. அப்பணியின் ஒரு அம்சமாகவே 'யாழ்ப்பாணத்தென்மோடிக்கூத்துமரபு 'இசை மெட்டுக்கள்' என்னும் இவ்வெளியீடு அமைகிறது.

## கூத்துக்கள் பேணப்படுவதன் அவசியம்

ஒரு காலகட்டத்தில் எமது மக்களின், வாழ்வியல் அம்சங்களிலொன்றாக அமைந்திருந்த கூத்துக்கள், இன்று அவ்வாறு இல்லை. நாகரீக வளர்ச்சி, போர், அழிவுகள், இடப்பெயர்வுகள், பல்வேறு இரசனை மாற்றங்கள், புதிய ஊடகங்களின் வருகை என எத்தனையோ காரணிக்கூறுகளி னால் இந்த நிலை அடையப்பட்டிருக்கின்றது. இத்தகைய விளைவுகளினால், பாரம்பரியம்மிக்க பல கிராமங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியற்கோலங்கள் மாறிவிட்டன; பலகிராமங்கள் யுத்த அனர்த்தத்தினால் அழிந்தேபோயின; மூத்த 'அண்ணாவிமார்', கூத்துக்கலைஞர்கள் போன்ற பலரும் இறப்படைந்தனர்; கூத்தொலி கேட்ட கிராமங்கள் பலவற்றில் அவற்றின் நாமமே இல்லாது ஒழிந்து விட்டது. இத்தகைய சூழலில் 'கூத்துக்களின் எதிர்காலம்' என்ன என்ற கேள்வி எழுகின்றது.

தமிழ்த்தேசியம் பற்றிய விழிப்புணர்வு, புலப்பெயர்வு வாழ்வியலில் எமது அடையாளங்கள் தக்கவைக்கப்பட வேண்டிய அவசியமுணரப்படல் போன்றதான சூழல்களில் நின்று நோக்கும்போது, கூத்துக்கள் பேணப்படவேண்டுமென்ற அவசியமும் அவசரமும் உணரப்படுகின்றன. இன்று எஞ்சி நிற்கின்ற, விரல்விட்டு எண்ணத்தக்க அண்ணாவிமார், கூத்துக்கலைஞர்களைக்கொண்டு, கூத்தின் ஆன்மாவைக் காப்பாற்றவேண்டிய கட்டாயமுள்ளது. இதற்குப்பல பண்பாட்டுக்கலைவடிவங்கள் எமக்கு முன்னுதாரணமானவையாக நிற்கின்றன. யப்பானியர்கள் நாகரீகத்திலும், தொழில்நுட்பத்திலும் உயர வளர்ந்தாலும் தமது மரபுவழி நாடகக்கலைகளான 'நோ', 'கபுக்கி' போன்றவற்றை, பேணுவதற்கும் அதனை சாஸ்திரியமாக்கிப் பயில் வதிலும் தீவிர அக்கறை காட்டுகின்றனர். இந்தியாவில் 'கதகளி' போன்ற வடிவங்கள் இவ்வாறான பேணுகை, பயில்வுக்குட்பட்டுள்ளது. ஏன் சிங்களப் பாரம்பரியக்கலைவடிவமாகக் கொள்ளப்படும் 'கண்டிய' நடனம் உள்ளிட்ட பல கலைவடிவங்கள் இவ்வாறு பேணப்படுகின்றன. எனவே எமது கூத்துக்கலையும் பேணப்படுதல், சாஸ்திரியமாக்கப்படுதல், புத்தாக்கம் செய்யப்படுதல் என்று பல்வேறு படிமுறையாக்கச் செயற்பாடுகளின் தேவையை கொண்டுள்ள கலைவடிவம். இவை எல்லாவற்றுக்குமாக முதலில் செய்யப்பட வேண்டியது; இன்று எஞ்சிநிற்கும் இவ்வடிவத்தின் பாடல்கள், ஆடல்கள், அளிக்கைப் பண்புகள், காண்பிய மூலகங்கள், எழுத்துருக்கள் என்பவை ஆவணமாக்கப்பட வேண்டும். இத்தகைய தேவையின் ஒரு கூறை செயற்படுத்தும் நோக்கோடே **தென்மோடிக்கூத்துமரபின் இசைமெட்டுக் கள்** என்ற இந்நூல் தொகுப்பும், இறுவட்டும் வெளியிடப்படுகின்றது.

## தென்மோடிக்கூத்து மரபு

கூத்துக்களை அதன் இயல்பு சார்ந்து பல்வேறு வகைகளாகப் பிரிப்பர். அதில் வடமோடி தென்மோடி என்ற வகைப்பாடு மிக முக்கியமானதொன்றாகும். மட்டக்களப்பில் இவ்விரண்டு வடிவங்களும் துல்லியமான வேறுபாடுகளுடன் காணப்படுகின்றன. ஆனால், யாழ்ப்பாணப்பிரதேசம் காலத்துக்குக்காலம், படையெடுப்புக்களாலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலணித்துவத்தின் பன்முகங்களை முழுமையாக சந்தித்ததன் விளைவாகவும் பலவற்றை இழந்தும் வகைத்தூய்மைகளை கைநெகிழ்ந்தும், புதிய மாற்றங்களை உள்வாங்கியும் வந்திருந்த பிரதேசம் என்பதை யாவரும் அறிவர். இந்தவகையில் வடமோடிக்கூத்துக்கள், வட்டுக்கோட்டை சிந்துபுரக் கிராம மக்களால் மட்டுமே இன்று பேணப்படுகிறது. பூர்வீகத் தென்மோடிக் கூத்துவடிவம் முற்றாக அழிவடைந்து விட்டது.இத்தென்மோடியில் இருந்து வடிவமாற்றம் பெற்ற 'கத்தோலிக்கக் கூத்துமரபு' மட்டுமே யாழ்ப்பாணத்தில் 'தென்மோடிக் கூத்தாக' உயிர்வாழ்கின்றது. மரபுவழியாக கத்தோலிக்க கூத்தர்கள், தமது கூத்தினை 'தென்மோடி' என்றே வழங்கிவந்துள்ளனர். ஆனால் பலர், இது 'தென்மோடி' இல்லை என்றும் 'விலாசமென்றும்' பல்வேறு விமர்சனங்களை இன்றும் முன்வைக்கின்றனர். அதற்குக்காரணம் இக்கூத்துமரபு இற்றைக்கு, இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னரே கத்தோலிக்கர்களின் கையாளுகையினால் வடிவ மீளுயிர்ப்பு பெற்றுவிட்டது. இது உள்வாங்கிக் கொண்ட பின்வரும் விடயங்கள் இக்கூத்துமரபை தனித்துவப்படுத்துகின்றன.

* கதைப்பொருள் மாற்றமடைந்தது. கத்தோலிக்க, புனிதர்கள் வேதசாட்சிகளின் வரலாறு இதன் பிரதான கதைப்பொருளாகியது.
* அவலச்சுவை அறிமுகம் செய்யப்பட்டது.
* நெறிமுறைப்படுத்தப்பட்ட ஆடல்கள் கைவிடப்பட்டன.
* பாடல்கள் செம்மைத்தன்மை மிக்கவையாகவும், முதன்மையானவை யாகவும் மாறின.
* வட்டக்களரியில் இருந்து ஒருமுகம் நோக்கிய அரங்கும் அளிக்கை முறையும் வழக்கம் பெற்றன.
* மத்தியகால ஐரோப்பிய அரங்கில் இருந்த பெருங்காட்சி, வேடஉடை ஒப்பனை போன்ற சில நுட்பங்கள் உள்வாங்கப்பட்டன.

இவ்வாறு மாற்றங்கள் பலவற்றை உள்வாங்கி மரபின் வேர்களில் நின்று 'மீள்பிறவி' எடுத்தவடிவமே கத்தோலிக்க தென்மோடிக்கூத்து ஆகும். கத்தோலிக்கர்களின் கையாள்கை, மேற்கூறிய மாற்றங்களை உள்வாங்கிய அதேவேளை, கத்தோலிக்க கிராமங்களெங்கும் இம்மரபை வன்மையாகப் பேணும் வழக்காறை தோற்றுவித்தது. குடாநாட்டின் கரையோர பிரதேசங்கள் எங்கும் இக்கூத்துக்கள் எண்பதுகள் வரை சிறப்பாக ஆடப்பட்டுவந்தன. இன்றுவரை இக்கூத்துமரபு நிலைப்பதற்கு இதன் 'மீள்பிறவி' மிக முக்கியமான காரணமாகும்.

எனவே எமது பூர்வீக தென்மோடி கூத்துமரபுமுற்றாக அழிந்த நிலையில், கத்தோலிக்க கூத்துக்களே தென்மோடி எனக் கூறப்படு வதற்குரியதாக எம்மிடமுள்ளது. இக்கூத்துமரபின் பாடல் மெட்டுக்களே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பதிகையில் தொகுக்கப்பட்டுள்ளன.

## பதிவாக்க முயற்சியும் எதிர் கொண்ட சவால்களும்

யாழ்ப்பாண கத்தோலிக்க தென்மோடிக்கூத்து மரபின் பிரதான மூலமாக இருந்ததான அதன் இசைமரபு காப்பாற்றப்பட வேண்டுமென்ற உந்துதல் எழுந்தபோது இந்த எண்ணத்தை, எமது மன்ற இயக்குநர் மரியசேவியர் அவர்களிடமும், அண்ணாவியார் பேக்மன் ஜெயராஜா விடமும் தெரிவித்தபோது, அவர்கள் மகிழ்வடைந்தது மட்டுமன்றி ஊக்கமும் அளித்தனர். இவ்வெண்ணத்தை ஏற்கெனவே கொண்டிருந்த பேக்மன் ஜெயராஜா, தனது பூரண ஒத்துழைப்பை வழங்குவதற்கும், இச்செயற்பாட்டை தானே முன்னெடுத்துச் செல்வதற்கும் ஒப்புதல் அளித்தார். இப்பணிக்கு அண்ணாவியார் பேக்மன் ஜெயராஜா மிகவும் பொருத்தமானவ்ராக இருந்தார். காரணம் இக்கூத்துமரபின் தொண்ணூறு வீதமான மெட்டுகளை பாடவல்லவராக இருந்தது மட்டுமன்றி, அண்ணாவியார் பூந்தான் யோசேப்புவின் மாணவனாக இருந்து பல மூத்த அண்ணாவிமாருடனும், இளைய அண்ணாவிமா ருடனும், தொடர்புடையவராகவும், நெகிழ்வுத்தன்மையுடன், காய்தல் - உவத்தல் முறையில் 'கூத்து' வாழ வேண்டுமென்பதில் தீவிர ஆர்வங் கொண்டவராகவும் விளங்கினார். எனவே அவரது ஆளுமை இப்பணிக்கு முழுமையைக் கொடுத்தது.

இதன் முதற்கட்டமாக, 2002 ஆம் ஆண்டு மார்ச் மாதம், 27 ஆம் திகதி அண்ணாவிமார்கள் பலரையும் அழைத்து எமது எண்ணத்தை வெளிப்படுத்தியதுடன், பாடல்களை சரியாக மரபுவழி பிசகாத வகைத் தூய்மையுடன் இனங்காண்பதற்கு அவர்களின் ஒத்துழைப்பினை நாடினோம். அவர்கள் இதனை மகிழ்வுடன் ஏற்றதுடன் தமது ஒத்துழைப்பினை வழங்குவதற்கும் ஒப்புதல் அளித்தனர். அதனைத் தொடர்ந்து சில தினங்கள் அவர்களை ஒன்றிணைத்து பாடல் மெட்டுக்களை இனங்காணும் இம்முயற்சியை செயற்படுத்தினோம். அண்ணாவியார் பேக்மன் ஜெயராஜாவின் தலைமையில் அண்ணாவியார் களான அல்பிரட் (பாஷையூர்) மனோகரன் (குருநகர்) பாலதாஸ் (பாஷையூர்) வண்ணமணி (ஆனைக்கோட்டை) யேசுதாசன் (கரம்பொன்) அருட்பிரகாசம் (பாஷையூர்) மரியதாஸ் (குருநகர்) பபூன் அலைக்சாண்டர் (பாஷையூர்) போன்ற பலரும் ஒன்றிணைந்து பாடல்களை மரபுவழியில் தூய்மைபடுத்த முனைந்தோம். அண்ணாவியார் பபூன் அலைக்சாண்டார் மூத்த கூத்துக்கலைஞானாக இருந்த காரணத்தினால் அவர் பழைமையான மெட்டுக்களின் இசைப்பு முறையை நினைவுபடுத்தினார். இவ்வாறு மெட்டுக்களை இனங்கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பப் பதிவாக்கம் செய்துகொண்டு, பொருத்தமான பாடல்களை தொகுக்க முயற்சித்தோம். அதற்கான எழுத்துருக்களையும் தெரிவு செய்தோம். இதனைவிட சந்தேகமான சில பாடல் மெட்டுக்களை அண்ணாவியார் வின்சன்டிபோல், அண்ணாவியார் பெலிக்கான் போன்ற பலருடனும் சென்று கலந்துரையாடி இறுதி முடிவெடுத்தோம்.

இவ்வாறு நாம் பல்வேறு முயற்சிகளை தொடர்ந்த போது எமது கலந்துரையாடலில் கலந்து கொண்ட அண்ணாவியார் ஒருவர் ஒருசாராருடன் இணைந்து இம்முயற்சியை தாமே தனித்துப்பாடி ஒலிப்பதிவு செய்து வெளிநாடுகளுக்கும் அனுப்பினார். இது எமக்கு சற்று ஏமாற்றத்தை அளித்தாலும், நாம் எமது முயற்சியை இயலுமான வரை சிறப்பாக மேற்கொள்ள வேண்டுமென்று உந்துதலுடன் செயற்பாட்டைத் தொடர்ந்தோம். ஒரு படிமுறைப்பட்ட ஒழுங்கில் எமது பதிவாக்க முயற்சி நகர்ந்து முழுமை பெற்றது. இம்முயற்சியின் வெற்றிக்கு பலரது பங்களிப்புக் காரணமாக இருந்தது.

எமது செயலாக்கத்தில் பின்வரும் விடயங்கள் சவால்களாக எதிர்கொள்ளப்பட்டன.

- சில பாடல் மெட்டுக்கள் இசைக்கப்படுவதில் கிராமத்துக்கு கிராமம் வேறுபாடு காணப்பட்டது.
- மெட்டுக்களின் பூரணத்துவத்தினை கண்டறிவதற்குச் சவாலாக, பாடுபவர்களின் தன்னெழுச்சியான பாடும் இயல்புகள் சிக்கல்களைத் தோற்றுவித்தன.
- எல்லா மெட்டுக்களையும் வெவ்வேறு கலைஞர்களைக் கொண்டு பாடவைப்பதிலும், அவற்றில் மூலத்துவ நேர்த்தியைக் காண்பதிலும் சவால்கள் எதிர்நோக்கப்பட்டன.
- ஒரே மெட்டுக்கள், அவற்றின் பிற்பகுதிகளில் சிற்சில மாறுபாடுகளுடன் சில கிராமங்களில் பாடப்பட்டதால் அவற்றினை ஒன்றுபடுத்து வதில் சிக்கல்கள் ஏற்பட்டன.
- சில அண்ணாவிமார்கள் பிற்பட்டகாலங்களில் 'வாலாயம்' பண்ணிப் பாடும் முறைகளில் இருந்து, மரபுவழிக்குள் உள்ளிறங்குவதற்கு சிரமப்பட்டதனால் வடிவத்தூய்மையை கொண்டுவருவதில் சிரமம் இருந்தது.
- பாடல்களின் இராகங்கள், தாளங்கள் போன்றவற்றை ஒழுங்கு படுத்துவதில் பல்வேறு சிரமங்கள் தோன்றின.
- சில கலைஞர்களால் மூலபாடத்திலுள்ள வரிகளை செம்மையாக உச்சரித்து பாடமுடியாமல் போனதால் சரியான வார்த்தைப் பிரயோகங்களை வெளிப்படுத்த முடியாதுபோனமை,

போன்றதான பல்வேறு சவால்களை இப்பதிவாக்கத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்கொண்டே ஒலிப்பதிவுகளை மேற்கொண்டோம். இப்பிரச்சினைகளை அண்ணாவிமார்களுடன் கலந்துரையாடி பொது முடிவுக்கு வந்து பதிவாக்கங்களைச் செய்தோம். யாழ். பல்கலைக்கழக, இசைத்துறை விரிவுரையாளர் த. றொபேட் அவர்கள் ஹார்மோனியம் வாசித்து மட்டுமன்றி, இசையில் எழுந்த பல்வேறு சிக்கல்களுக்கும் ஆலோசனைகளை வழங்கினார். அவ்வாறே, ஒலிப்பதிவு செய்த இசையமைப்பாளரான சத்தியன் அவர்கள் பல்வேறு பிரச்சினைகளில் தனது ஆலோசனையை வழங்கி இப்பணியை பூரணத்துவப்படுத்தினார்.

இவர்கள் பலரின் ஒத்துழைப்புக்களுடன் பலநாட்கள் ஒத்திகைகளை மேற்கொண்டு, இவ்வருடம் பெப்ரவரி மாதம் ஒலிப்பதிவினை ஆரம்பித்தோம். ஏறத்தாழ 90மணித்தியாலங்கள் ஒலிப்பதிவுக்காக செலவிடப்பட்டது.

## பயன்படுத்தப்பட்ட மூலபாடங்கள்

இப்பதிகைக்கு 23 நாடகபாடங்களிலுள்ள பாடல்கள் பயன்படுத்தப்பட்டன. ஆனால் இக்கூத்துமரபின் 'மூலமாக' கொள்ளப்படும் நூல், 'தேவசகாயம்பிள்ளை' நாட்டுக்கூத்து ஆகும். இதுவே கிடைக்கப்பெறும் நூல்களிலும் பழமையானது. எனவே பெரும்பாலான பாடல்களை இந்நூலில் இருந்தே தெரிவு செய்தோம். அதனைவிட எஸ்தாக்கியார், மரியதாசன், விசயமனோகரன், கண்டி அரசன் ஆகிய நூல்களில் இருந்தும் அதிக பாடல்களை தெரிவு செய்தோம். சில பாடல்கள் தேவசகாயம்பிள்ளையில் இருந்து மேலும் தெரிவு செய்யப்படகூடியதாக இருந்ததாயினும், பாடுவதில் ஏற்பட்ட சிரமங்களால் வேறு பாடல்களை தெரிவு செய்ய வேண்டி ஏற்பட்டது. இந்நூல்களின் விபரங்கள் மெட்டுக்களின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளன. அத்துடன் மூலபாடங்களில் எடுக்கப்படும் பாடல்களின் முழுவரிகளும் படிக்கப்படவில்லை என்பதுடன், மெட்டினை அடையாளப்படுத்துவதற்கென, ஒன்று தொடக்கம் நான்கு பாட்டு அடிகள் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மெட்டுக்கள்

கூத்துக்களின் பாடல்கள் அவற்றின் மெட்டின் பெயராலேயே மிக நீண்டகாலமாக அழைக்கப்பட்டு வந்துள்ளன. அதில் பெரும்பாலானவை 'தேவசகாயம்பிள்ளை' கூத்தை மூலபாடமாகக் கொண்டே கூறப்பட்டு வந்துள்ளன. எனவே நாமும் மெட்டுக்களையே, இவ்விசைமரபினை அடையாளஞ் செய்யும் வகையில் முதன்மைப்படுத்தி இட்டுள்ளளோம். 'பதிகையில்' பதியப்பட்ட மெட்டின் பெயரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு பாடல்களிலும் சேர்த்துள்ளோம். ஆயினும் எல்லா மெட்டுக்களுக்குமான 'மூல மெட்டுக்களையும்' எம்மால் இனங்காண முடியவில்லை.

## இசைப்பிரிப்பு

கூத்து நூல்களில் இராகம் தாளம் போடும் வழக்கம் முதன் முதலில் கத்தோலிக்ககூத்து மரபிலேயே ஏற்பட்டிருக்க வேண்டும். 1926 ஆம் ஆண்டு பதிப்பு செய்யப்பட்ட 'தேவசகாயம்பிள்ளை' முதலாவது பதிப்பு நூலிலேயே முதன்முதலில் இராக தாளங்கள் இடப்பட்டுள்ளன. இசைநாடகத்தின் வருகையின் பின்னரே இவ்வழக்கம் ஏற்பட்டிருக்க வேண்டும். ஆனால் கூத்தின் மெட்டுக்கள் கிராமியத்தின் வழிவந்த அடையாளங்களாலேயே இனங்காட்டப்பட வேண்டுமென்பது இன்றைய ஆய்வாளரின் கருத்தாகும். நாமும் அக்கருத்துடன் உடன்பட்டு நின்றாலும், இதன் எதிர்காலப்பேணுகைக்கு சாஸ்திரிய வகைப்பிரிப்பு தேவையான ஒன்றாக உணரப்படுகிறது. இதனால் இராக, தாள அமைவுகளை இசைத்துறை விரிவுரையாளர் த. றொபேட் அவர்களைக் கொண்டு ஆய்வு செய்து இட்டுள்ளோம்.

ஆனால், ஆச்சரியமான விடயம் என்னவென்றால் கூத்து நூல்களில் போடப்பட்டுள்ள இராக தாளங்களில் 90 வீதமானவை தவறானவைகளாகவே உள்ளன. எடுத்துக்காட்டாக, மெட்டு இலக்கம் - 09 'அதியுக்ரம கோலன்', மூலபாடமாகிய தேவசகாயம்பிள்ளை நாட்டுக்கூத்தில் இராகம் : நாத நாமக்கிரியை என்றும் தாளம் : ஆதி என்றும் இடப்பட்டுள்ளது. ஆனால் உண்மையில் அதன் இராகம் கீரவாணியை அடிப்படையாகக் கொண்டது என்பதுடன் தாளம் சதுஸ்ர ஏகமாகவுமுள்ளது. இது எமக்குப் பெருங்கேள்வியை எழுப்புகின்றது. அதாவது பாடல்மெட்டுகள் மருவி, மருவி காலத்தால் மாற்றமடைந்து வந்திருக்க வேண்டும்; அல்லது முதன்முதலாக இராக தாளங்கள் இட்டவர்கள் பூரண இசை அறிவுடன் அவற்றை இடவில்லை. இவ்விரண்டு காரணங்களும் நடைபெறக்கூடியவை. அதுமட்டுமன்றி பெரும்பாலான மெட்டுக்கள் சாஸ்திரிய இராகத் தூய்மையை கொண்டவையல்ல. குறிப்பிட்ட இராகத்தின் அடிப்படையை கொண்டவை என்றே தான் கூறவேண்டும். எனவே நாம், இன்று எமது கையில் எஞ்சியுள்ள பாடல் மெட்டுக்களின் சரியான இராக, தாளங்களை ஆய்வு செய்து தற்போதுள்ள நிலையில் உள்ள இராக தாளங்களை இதில் இட்டுள்ளோம். இசைக்குறிப்புக்களையும் இணைப்பதற்குத் திட்டமிட்டிருந்தோம், ஆனால் குறுகிய காலத்தில் இவ்விடயம் கைகூடவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வகைப்பிரிப்பு

நாம் இனங்கண்ட பாடல் மெட்டுக்களை ஒரு ஒழுங்கு முறைப்படுத்த முனைந்தோம். காப்புப்பாடல்கள், வரவுதருக்கள், நாட்டுவளப்பம், உரையாடல்தருக்கள்... என வகைப்படுத்தினோம். இவ்வகைப்பிரிப்பு பெருமளவில் பொருத்தமான பாடல்களை உள்ளடக்கி நின்றாலும், விலகல் தன்மை அதிகமாவுள்ளது. அதாவது இன்ன இன்ன பாடல் மெட்டினை இன்ன இன்ன தேவைக்குத்தான் பயன்படுத்த வேண்டும் என்ற விதிமுறை கூத்தில் இறுக்கமாகப் பின்பற்றப்பட்டிருக்கவில்லை உதாரணமாகக் கூறின் உரையாடல் தருவாக இடப்பட்ட சில மெட்டுக்கள், தனிப்பாடலாக பயன் படுத்தப்பட்டுள்ளன. சேனாதிபதி வரவுத் தருக்கள், சண்டைத் தருக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. எனவே இதனை ஒரு விதிமுறையாக நாம் வலியுறுத்தவில்லை. பெருவழக்காக கொள்ளப்பட்ட மெட்டுக்களை இவ்வொழுங்கு முறைக்குள் வகைப்படுத்தியுள்ளோம். அத்தோடு இம்மெட்டுக்களை ஆய்வுநோக்கில் பார்க்கும்போது பெரும்பாலானவை மரபுவழிக் கூத்துப்பாடல்களாக இருப்பினும், சில தேவாலயப் பயன்பாட்டுடன் தொடர்புபட்ட துக்கராகங்கள், நடசாரி போன்ற வையும், விலாச மெட்டுக்களும் இணைந்துள்ளதை அவதானிக்க கூடியதாகவுள்ளது. எனினும் இது ஆய்வுக்குரிய விடயமாகும்.

### நன்றியுடன்

எமது மரபுவழிக்கலைச் சொத்தான கூத்து மரபின் கைக்கெட் டிய 153 பாடல் மெட்டுக்களை ஆவணமாக்கியுள்ளோம் என்பது மனதில் நிறைவைத்தந்தாலும், இவை இன்னமும் தூய்மையாக்கப்படவும், சாஸ்திரிய முறைமையுடன் பயிலப்படவும், பேணப்படவும் தக்கவகையில் பலபடிகளில் செம்மையாக்கம் செய்யப்படவேண்டும் என்ற உண்மை எம்மால் உணரப்படுகிறது. ஆனால் இது ஒரு முதல் ஆதாரமாக அமையும் என்பதில் எமக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு.

இப்பாரிய முயற்சி வெற்றி பெறுவதற்கு பலரின் உழைப்புக் காரணமாக இருந்துள்ளது. அவர்கள் அனைவரையும் நெஞ்சார்ந்த நன்றியுடன் நினைவிற்கொள்ளுகின்றோம். குறிப்பாக, எமது இந்த முயற்சிக்கு ஆதாரமாக நின்றவர்கள் அண்ணவிமார்கள். அவர்களின்றி இப்பணியை நாம் நிறைவேற்றி இருக்க முடியாது. எனவே எமது முயற்சிக்குக் கைகொடுத்த அண்ணாவிமார்கள், கூத்துக்கலைஞர்கள், பாடல்களைப் பாடியவர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகள். அத்துடன் ஹார்மோனியம் வாசித்ததுடன், இராக - தாள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வை செய்தும், ஆலோசனைகளைத் தந்தும் இம்முயற்சியின் பக்கபலமாக நின்ற விரிவுரையாளர் தவநாதன் றொபேட் அவர்களும், அதன் ஒலிப்பதிவினை மிகுந்த சகிப்புத்தன்மையுடன் மேற்கொண்டும் இப்பாடலை கலைத்துவமாக கொண்டுவருவதற்கும் துணைபுரிந்த 'சப்தமி' கலையக தொழில்நுட்பவியலாளரும், இசைக்கலைஞருமான சத்தியன் அவர்களும், மிருதங்கம் இசைத்த இசைக்கலைஞன் பெகின் அவர்களும் எமது நன்றிக்குரியவர்கள்.

அதேவேளை, ஒலிப்பதிவு செய்த இசை மெட்டுக்களை ஒரே நேரத்தில் நூலாக வெளியிட விரும்பியபோது மிகக் குறுகிய கால அவகாசத்தில் அர்ப்பணிப்புடனும், சகிப்புத்தன்மையுடனும் செய்து தந்த ஜெயந்த் சென்ரர் உரிமையாளர் கலையார்வன் கு. இராயப்பு அவர்களும், இறுவட்டு மற்றும் நூலிற்கான அட்டைப்படத்தை வடிவமைத்தும் அச்சிட்டும் தந்த அ. ஜுட்சன் அவர்களும், இந்நூற் தொகுப்பினை முழுமையாகப் பொறுப்பெடுத்து தனது அயராத முயற்சியினால் செயற்படுத்திய எமது வெளியீட்டுப் பிரிவுப் பொறுப்பாளர் கி. செல்மர் எமில் அவர்களும் நன்றிக்குரியவர்கள்.

அத்துடன் இந்நூலாக்கத்திற்கு 'அணிந்துரை' தந்த பேராசிரியர் சண்முகதாஸ், அவர்களும், இம்முயற்சிக்கு உந்து சக்தியாக நின்று எம்மை ஊக்கப்படுத்தியதுடன், தனது வாழ்த்துரையையும் தந்த எமது இயக்குநர் தந்தை நீ. மரியசேவியர் அடிகளும் எமது விசேட நன்றிக்குரியவர்கள்.

இவர்களுடன் எமது பதிவாக்க முயற்சிக்கு ஒத்துழைப்பு நல்கிய ரூலிங்ஸ் நிறுவன முகாமையாளர் உருத்திரலிங்கம், எமது மன்றத்தின், மூத்தகலைஞர்கள், இளையோர்கள், மன்ற அலுவலகப் பணியாளர்கள் அனைவரும் எமது மன நெகிழ்வின் நன்றிக்குரியவர்கள்.

நன்றி.

"நாமும் நமக்கோர் நலியாக் கலையுடையோம்
நாமும் நிலத்தினது நாகரீக வாழ்வுக்கு நம்மால் இயன்ற பணிகள்
நடத்திடுவோம்" *(மஹாகவி)*

*19.12.2007*

**யோ. யோண்சன் ராஜ்குமார்**
(தொகுப்பாளர் சார்பாக)
திருமறைக்கலாமன்றம்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


மெ. இல. மெட்டு பக்கம்

## காப்புப் பாடல்

01. காப்பு விருத்தம் (ஏராரும்) .................... 01
02. வெண்பா (சற்பத்தலை) .................... 01
03. தோடயம் (ஆதிபிதா) .................... 02

## வரவுத் தருக்கள்

(அ) கட்டியகாரன் வரவு

04. பொங்கொளி செறிந்த (சித்திர மகுடம்) .................... 03
05. மாட்சிமை மிகு (ஆரண பூரணம்) .................... 04
06. கட்டியகாரனும் வந்தேன் .................... 05
07. கட்டியங்கூறல் (பொன்னொடிகலும்) .................... 05
08. வந்தானே கட்டியகாரன் .................... 06

(ஆ) அரச வரவுகள்

09. அதி உக்ரம கோலன் .................... 07
10. சகல அரசர் பணியும் .................... 08
11. அகிலமும் புகழும் .................... 08
12. உதய திசை எழு .................... 09

(இ) மந்திரி வரவுத் தருக்கள்

13. மதி மெத்திய சூரன் .................... 10
14. மன்னர் சபை (சொல்லமுடியாது) .................... 10
15. தேசமயமாயிலங்கும் (நித்திலமணி ) .................... 11
16. சுபகுண சூரன் .................... 12

(ஈ) சேனாதிபதி தருக்கள்

17. தண்டார்மணி (துணிவோடே வருமடை) .................... 12
18. கிரிடத்தரசர் முடி .................... 13
19. சீர்மையதிபதி .................... 14

(உ) நாடகக்காரன் வரவுத் தருக்கள்

20. வான நாதா .................... 15
21. உயராதிபகத்தனே .................... 16
22. மாசில்லா சுந்தர (வண்ணத்தரு) .................... 17
23. அத்தனருளாளி .................... 17
24. ஆதிபிதாவின் (செப்பரிய பூவில்) .................... 18





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. வாளனையே (பொன்னொளியும்) ..................... 19
26. செங்கமலமே (பொன்னின் நிறம்) ..................... 20
27. செந்தூருறை ..................... 21
28. பூவுலகெல்லாம் விளங்க ..................... 22
29. சிறுகுமதி இதளி ..................... 22
30. பொன்னொளிர் ..................... 23

(ஊ) பேய் வரவு

31. ஆதிபரனாருரை (அந்தரவயி ) ..................... 24
32. கனலொடு முந்திய செந்தீ ..................... 24
33. நடந்திடுவேன் ..................... 25

(எ) கள்ளர் வரவு

34. இத்தரை மீதினில் (தாயெனவே) ..................... 26
35. மெல்லச் செல்லுவேன் (அன்னலம்) ..................... 27

(ஏ) சம்மனசு தரு

36. பூசித உசிதராச (கத்தனை நிதம்) ..................... 29
37. தர்ப்பரர்க்காய் ..................... 29

(ஐ) நந்தவனப்பாடல்

38. மானே மட வஞ்சியே ..................... 30
39. பூரண சந்திர ..................... 31
40. அங்கேபாராய்(அந்தரத்திலே) ..................... 32

(ஒ) வீரர் பாடல்கள்

41. வெற்றி வீரன் நானையா ..................... 33
42. சுற்றாத தேசமெல்லாம் ..................... 34
43. தேடுவோமே நாமே (மந்திரியே) ..................... 34
44. வணங்கிலர் சிரமும் ..................... 35
45. சங்கரா சிவ சம்புவே ..................... 36
46. பாகுடன் பால்தேன் ..................... 37

(ஓ) சாம்புவன் வரவு

47. வந்தேன் நானாண்டே (சொல்வேன்) ..................... 37
48. பூண்டேன் சிர நமஸ்காரம் ..................... 38
49. வாரும் நண்பரே ..................... 39

*நாட்டு வளப்பம்*

50. சுந்தர இந்தரை ..................... 40
51. இங்கிர்தலங்கிர்த (அப்பனே அப்பனே) ..................... 41
52. சந்திர நேர் முகத்தானே ..................... 42



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

53. சரணமென்றோதிய (மிண்டமர்) ..................... 43
54. ஏடாகிய பதுமாமணி ..................... 44
55. கலைமதி நிகரான (பூவும்வானதும்) ..................... 45
56. வெற்புயம் விளங்குமணி ..................... 45
57. நீசனாமென் ..................... 46
58. நாட்டுமக்கள் நலம் பெறவே ..................... 47
59. மாற்றருந்சேர் ..................... 48

## உரையாடல் தருக்கள்

60. ஆச்சிகனிவாச்சி (அன்னமே) ..................... 49
61. வந்ததிந்த மாயமென்னவோ ..................... 50
62. ஆவியுடலதொன்றே ..................... 51
63. சித்திரானந்தா ..................... 52
64. இங்கெமைநாடியே ..................... 52
65. எந்தன் சேனா நாயகமே (எந்தன்மதி) ..................... 53
66. வண்டலம் பூங்குழல் சரிய ..................... 54
67. வாராய் பசுங்கிளியே (ஆதிதற்பரனே) ..................... 55
68. பன்னீராசகுல் (கண்ணாரும்) ..................... 56
69. அஞ்சுகமே ..................... 57
70. கன்னி மின்னாளே (கன்னல் வில்லானே) ..................... 57
71. சொல்லவரும் (அன்னையே தந்தையே) ..................... 58
72. சொன்ன பற்பநாத புரம் ..................... 59
73. தேங்குபுனல் காட்டிடை (அஞ்சுகமே) ..................... 60
74. செகமேவும் (வரையாருங் குங்குமம்) ..................... 61
75. வாராய் என் வஞ்சகியே ..................... 61
76. என்னவிச்சதிவந்தே (கார்முகில்) - ஏணித்தரு ..................... 62
77. கொன்னஞ்சேர்ரோமை (மெய்ப்பற்றாவது) ..................... 63
78. அன்பு உள்ள தந்தை (எல்லையற்று) ..................... 64
79. ஆகமமாய் ..................... 65
80. இகழ்ந்துள்ளோர்கள் ..................... 65
81. செல்லுவோமே ..................... 66
82. காருண்யனே கதிர்காமா ..................... 67
83. மன்னவன் முன் (ஆனையொன்று) ..................... 68
84. மன்னரே பாதகம் ..................... 68
85. கருணை நிறை நிருபா ..................... 69
86. பொன்னிற் சிறந்திடு ..................... 70
87. ஓடுது பாராய் ..................... 71

## தர்க்கத்தருக்கள்

88. வாரும் வாரும் நீலம்பிள்ளாய் ..................... 72
89. கூனற்ற வளைச்சங்க ..................... 73
90. வானத்தால் ரிடியொலி (ஆழிப்பார்) ..................... 74



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 91. | சந்து நத்தம் சொரிந்தே (சங்கைபொங்கிடு) | 75 |
| 92. | பேடிகளாகிய மூடர்கள் | 76 |
| 93. | உன்பத்தா எங்குற்றானோ (மறையோன்) | 77 |
| 94. | ஓகோ நீலகண்டா | 78 |
| 95. | மாகருணாகர | 79 |
| 96. | என்மனம் நிறைந்த வடிவம் | 80 |
| 97. | பெருமை பெருமை என்று | 81 |
| 98. | அன்னையல்லோ | 82 |
| 99. | ஆழிகடல் சூழுலகை | 82 |
| 100. | அநியாயம் செய்திட்ட மூடனே | 83 |
| 101. | ஏந்தலுடை கட்டளை போல் | 84 |
| 102. | இந்தச் சிலம்புனது | 85 |
| 103. | தந்தாரே தேவன் | 86 |
| 104. | காறுக்காதே | 87 |


## வேட்டைத் தருக்கள்


| | | |
|---|---|---|
| 105. | வாரும் சேரும் (வாரும் வாரும்) | 88 |
| 106. | வீரசூரரான வேடரே | 89 |


## தனிப்பாடல்கள்


| | | |
|---|---|---|
| 107. | கனகமயமொளிர் | 90 |
| 108. | மிகவும் இரக்கமுள்ள | 90 |
| 109. | புத்திரரே என்தவ புத்திரரே (ஆத்தமியா) | 91 |
| 110. | தேவன் செயலிதுவாமோ (காவின் - கொச்சதரு) | 92 |
| 111. | அள்ளிக் கொள்ளை | 92 |
| 112. | மின்னு ஞாயிறு திங்கள் | 93 |
| 113. | ஆகா இவள் என்ன ரூபமோ | 94 |
| 114. | திக்கெற்றெனைப்பிடித்தே | 94 |
| 115. | பூரண சந்திரோதயம் | 95 |
| 116. | பத்தரை மாற்றுயர் தங்கம் | 96 |
| 117. | பதிநிகர் தந்திரியே | 96 |


## சிறப்புத் தருக்கள்


| | | |
|---|---|---|
| 118. | வண்டலம் (எண்சீர் விருத்தம்) | 98 |
| 119. | வாள்கரம் (விருத்தம்) | 98 |
| 120. | நடிக்கிறேன் (கவி) | 99 |
| 121. | நிச்சய மென்றுள (சந்தத விருத்தம்) | 99 |
| 122. | அந்த நாளில் நான் வணங்கி (சந்தத தாழிசை) | 100 |
| 123. | நீர்வளம் பொழிந்து (அகவல்) | 100 |
| 124. | காவலனெனது (ஆசிரியம் - வகை I) | 101 |
| 125. | மறுதலியாதே (ஆசிரியம் - வகை II) | 102 |
| 126. | சகலதிவ்யவாறு (சீட்டு வாசகம்) | 103 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

127. கத்தனை தந்திடு (கலித்துறை) .................... 103
128. புலரி வந்திட (கலிப்பா) .................... 104
129. எனதன்பு நேச (இசலி) .................... 104
130. உருகுதே (தாழிசை) .................... 105
131. முடிசூடி படியாளும் (பரணி தரு) .................... 105
132. பூவார் பூவில் (கொச்சகம்) .................... 106
133. முல்லையர் (இன்னிசை - I) .................... 106
134. வாட்டியும்மை (இன்னிசை - II) .................... 107
135. மன்னவனும் நீயோ (வசனகவி) .................... 107
136. நிலை தளர்ந்திட்ட (தேவாரம்) .................... 108
137. வானத்தையும் லோகத்தையும் (ஒரிசம்) .................... 108
138. அரிய நேசதலைவன் (ஒப்பாரி) .................... 109
139. சுயம்வரத்தை வென்றவன் (காதல்) .................... 110
140. சோதிச்சுடரொளியே (உலா) .................... 110
141. மாசுற்ற அகிலகுல (கல்வெட்டுச் சிந்து - I) .................... 111
142. ஓராயிரம் (கல்வெட்டுச் சிந்து - II) .................... 113
143. சீரேறும் (கல்வெட்டுச் சிந்து - III) .................... 115
144. அண்டபகிரண்ட (கல்வெட்டுச் சிந்து - IV) .................... 116
145. ஏலயேலோம் (கப்பற் பாட்டு) .................... 118

## சபைத்தருக்கள்

146. இராசமகா ராசனும் வந்தான் .................... 120
147. கனகங்கள் ஒளிதங்கு .................... 121
148. நவ சங்க சபை தங்கு .................... 121

## பின்னிணைப்புக்கள்

149. பத்தினிக்கற்பகமே .................... 123
150. அழகினொளியே .................... 124
151. தென்றலு மெந்தனை .................... 124
152. ஞான குருவே தலைவா .................... 125

## மங்களத்தரு

153. தேவதிரீத்துவ (மங்களம்) .................... 126

பயன்படுத்தப்பட்ட கூத்து நூல்கள் .................... 127
இசைப் பேழையில் பங்குபற்றியோர் .................... 130



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காப்புப் பாடல்கள்

எல்லாக்கூத்து மரபுகளிலும், இறைவணக்கப் பாடல்களே கூத்தின் தொடக்கப் பாடல்களாக அமைகின்றன. இவை 'காப்பு' அல்லது 'காப்புப்பாடல்' என்ற சிறப்புப் பெயரில் அழைக்கப்படுகின்றன. யாழ்ப்பாண தென்மோடி (கத்தோலிக்க) கூத்து மரபிலும் பின்வரும் காப்புப் பாடல்கள் காணப்படுகின்றன.

## மெட்டு இலக்கம் - 01

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

**மெட்டு :- காப்பு விருத்தம்**

*ஏராரும்மணிறோமை தனைமேற்காத்த*
*எளில்திறையான் சேனைகளின் தலைவனாகிப்*
*பாராரும்புகலுபிலா சிதுவோன்பின்னர்*
*பரிசுத்ததமதிரீத் துவத்தினாலே*
*நீராருந்தெளிவடைந்தெஸ் தாக்கிநாமம்*
*நேர்மையாய்ப்பூண்டுபரற் காய்வான் சேர்ந்த*
*பேராருஞ்சரிதையை நாடகமாய்ப்பாடப்*
*பிஞ்சுமதி ஏறுகன்னி சரண்காப்பாமே*

✶ இவ்விருத்தத்தின் இராகம் சங்கராபரணம்
✶ பதிகைக்கான மூலப்பாடம்: எஸ்தாக்கியார், பக்கம் - 01

## மெட்டு இலக்கம் - 02

**மெட்டு :- வெண்பா**

*சர்ப்பத் தலையதனைத் தாளால் மிதித்தவளே*
*தற்பரனைத் தந்த தயாபரியே - அற்புதஞ்சேர்*
*தூயவெஸ் தாக்கிகதை சொல்லவருள் நல்கிடவுன்*
*சேயனைமன் றாடியருள் செய்*

✶ வெண்பா யாப்பில் அமையும் இம்மெட்டு சங்கராபரணம் இராகத்தில் அமைந்துள்ளது.
✶ பதிகைக்கான மூலபாடம்: எஸ்தாக்கியார், பக்கம் - 01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெட்டு இலக்கம் - 03

**மெட்டு :- தோடயம்**

**தாளம் :- சதுஸ்ர ஏகம்**

*ஆதி பிதா சுதன் ஸ்பிரீத்து*
*அமலதிரீத்துவ ஏக பரன்*
*அவரது துணைமன நினைவுகொண்டு*
*அருங்கதையைப் பாட*

*அன்புறு சுத்த சந்தானாள் பெற்ற*
*அற்புதக் கன்னி அடைக்கலத்தாய்*
*நண்புறு மரியதாஸ் அவர் சரிதை*
*நானிலத்தில் பாட*

*இன்பரசாகிய சூசையப்பர்*
*இவருடன் சந்தந் தோனி முனி*
*தன்னருள் நாவின் சுவையிலங்கு*
*தங்கக்கதை பாட*

*தங்குயர் இங்கிர்த மங்களம் சேர்*
*தற்பரணா மவர் காட்சிகொண்ட*
*காட்சியுறும் மரிய தாசென்பவர்*
*தன்கதை பாட*

✶ பொதுவாகவே இறைவணக்கப்பாடல்கள், தாளப்பிரமாணத்தில் பாடப்படும் போது அதனை ‘தோடயம்’ என்றே அழைப்பர்.

✶ இத்தோடயம் சங்கராபரணம் இராகத்தில் அமைந்துள்ளது.

✶ பதிகைக்கான மூலபாடம் : மரியதாசன், பக்கம் - 01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவுத்தருக்கள்

கூத்துக்கள் எடுத்துரைக்கும் பண்பினைக் கொண்டவை. கதாபாத்தி ரங்கள் களரியில் தோன்றும்போது, அப்பாத்திரங்கள் வெளிப்படையாக தருக்கள் மூலம் அறிமுகம் செய்யப்படும். அவை சபையோர் படர்க்கையில் பாடுகின்ற 'சபைத்தருக்களாகவும்' பாத்திரங்கள் தாமே பாடுகின்ற 'வரவுத் தருக்களாகவும்' அமைவன. தென் மோடிக்கூத்து மரபில் காணப்படுகின்ற கையிருப்பு பாத்திரங்களுக்கான பாடல்கள் இப்பகுதியில் அடங்குகின்றன.

## (அ) கட்டிய காரன் பாடல்கள்

கூத்துக்களில் முதலில் வரும் பாத்திரமாக அமைவது 'கட்டியகாரன்' பாத்திரமாகும். கூத்தில் வருவதுரைப்போனாகவும் குறிப்பாக, அரச வரவினை முன்னுரைப்பவனாகவும் அரசின் வாயிற்காப்போனாகவும் இப்பாத்திரம் பயன்படுத்தப்படுகின்றது. இப்பாத்திரத்தின் வரவுத் தருக்களும் கட்டியமுரைக்கும் தருக்களும் இதில் அடங்குகின்றன.

### மெட்டு இலக்கம் - 04

**மெட்டு :- பொங்கொளி செறிந்தமணி**
**மூலமெட்டு :- சித்திர மகுடம்**
**தாளம் :- சதுஸ்ர ஏகம் (மிஸ்ர நடை)**

பொங்கொளி செறிந்தமணி தங்கு முடியோன் - வரப்
பொன்னிழைத் துவசமெங்கும் மின்னவிடுவீர்

செம்பவளத் தூண்நிறுத்தி வெண்பொன்னால் விட்டம் -
இட்டுச்
சேர்தமணி யப்பலகைக் கூரையே கட்டி,

விண்டொளிரும் வண்டரள மாலையே தூக்கி - நேர்
விளங்குநவ ரத்தினக்கு ளோவைக ளேற்றி

நற்பளிங்கா லச்சுவர்கள் நாற்புறந் தீட்டி - ஒளிர்
நனிசருகைத் தோரணங்கள் இனநிரை கூட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூட்டியேவி சித்திரரத்ன பந்தர் மருங்கே - வாச
விரைமலர்ச்செஞ் சாந்துபன்னீர் விரைவிற் றெளிப்பீர்

முருகவிழுங் கனிமதுரக் குழல்மடவீரே - பதின்
மூவிசைப்பண் பாடிநட மாட முன்னுவீர்

* இம்மெட்டு சங்கராபரணம் இராகத்தில் அமைந்துள்ளது.
* இம்மெட்டு, பெருவழக்காக கட்டியகாரருக்குரியதாக பயன்படுத்தப்பட்டாலும் சேவகர்கள் போன்ற பாத்திரங்களுக்கும் பயன்படுத்தப் பட்டுள்ளது.
* பதிகைகான மூலபாடம் : விசயமனோகரன், பக்கம் - 02

## மெட்டு இலக்கம் - 05

**மெட்டு :- மாட்சிமை மிகு மன்னன்**
**மூலமெட்டு :- ஆரண பூரணம்**
**தாளம் :- சதுஸ்ர ஏகம் (மிஸ்ர நடை)**

மாட்சிமை மிகு மன்னன் வருகின்றார் - வன்னி
மணிநாட்டு மகராசன் வருகின்றார்
காட்சியாய் சிகரங்கள் பூட்டுங்கோ - தென்னங்
கமுகோடு வாழைகள் நாட்டுங்கோ.

மணிமுத்து நிரையிட்ட முடிமன்னன் - வான
மதியொத்த முகமன்னன் வருகின்றார்
அணியிட்டு அனைவோரும் வாருங்கோ - வந்து
அதழகாரன் முகச்சோதி பாருங்கோ.

கொடி கம்பு குடைகம்பு சூழவே - எங்கள்
குணபாலன் தனபாலன் வருகின்றார்
இடிகொண்ட வெடிகுண்டு பொழியுங்கோ - உங்கள்
இருகையால் வெகு மானம் அளியுங்கோ.

அடர்கொண்ட படைசேனை அதிரவே - முத்து
அணியிட்ட ரதமீது வருகின்றார்
படமிட்டு மலர்ப்பந்தல் போடுங்கோ - தண்டை
பதமிட்டு நடனங்கள் ஆடுங்கோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* ✶ இம்மெட்டு சங்கராபரணம் இராகத்தில் அமைந்துள்ளது.
* ✶ இப்பாடல் மெட்டு பெருவழக்காக கட்டியகாரர் பாடலாக பயன்படுத்தப்பட்டாலும், சிலகூத்துக்களில் உரையாடல் தருவாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.
* ✶ பதிகைக்கான மூலபாடம் : பண்டாரவன்னியன், பக்கம் - 01

## மெட்டு இலக்கம் - 06

**மெட்டு :- கட்டியகாரனும் வந்தேன்**
**தாளம் :- சதுஸ்ர ஏகம்**

கட்டிய காரனும் வந்தேன் வந்தேன் வந்தேன்
சபைதனில் சரித்திரம் விளக்க வந்தேன்

வணக்கம் வணக்கம் வணக்கம் - இங்கே
கேட்போருக்கும் பார்ப்போருக்கும் வணக்கம் தந்தேன்

புனித வதியின் கதையை - நானும்
சிறிதளவேனுங் கூறிச் செல்ல வந்தேன்

செகனரி யென்னும் ஊரில் - நல்ல
பக்தியில் சிறந்தவளாம் புனிதவதி

துற் குணனாம் அவள் கணவன் - இவர்கள்
தேனும் போலவேதான் வாழ்ந்திருந்தார்கள்.

* ✶ இம்மெட்டு சங்கராபரணம் இராகத்தில் அமைந்துள்ளது.
* ✶ பதிகைக்கான மூலபாடம் : புனிதவதி (கையெழுத்துப்பிரதி)

## மெட்டு இலக்கம் - 07

**மெட்டு :- கட்டியங் கூறல்**
**தாளம் :- சதுஸ்ர ஏகம் (கண்ட நடை)**

பொன்னொடி கலும் பூம்பசுந் தாரை நிழலிலுறை
புரவலர்கள் பரவு முரவோன்
பூச்சக்ர வாள முழுதும் புகழ் பரப்பியே
புவி புரந் தரசு புரிவோன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னொடி கலும் - வேல் நராதிபர்கள் தொழுமதிக
வீர சூராதி தீரன்
விதானிக்க முறுவசன வரிவையர்க ணடனமிட
விரைவினடி வருட வருவோன்

தென்ன தென தென்னவென வரிவண்டு நறையுண்டு
தின மொன்று தெரியல் மாரன்
திசையெட்டு மிசைமுட்ட விருதிட்டு நிலையிட்ட
செயதுங்க ரணசிங்கமால்.

உன்னத மிகுந் தக்ட விகட தட மதகரியி
லுலவி நட மிகுமுதாரி,
உற்பனன் விற்பன்னன் பற்பநாதபுர
வஞ்சி மார்த்தாண்டன்
கொலுவீதி வருகிறார் சமூகம் எச்சரிக்கை வெகுபராக்கு.

✶ அரசவரவை எடுத்துரைக்கும் வசன தருவாக இது காணப்படுகிறது
✶ பதிகைக்கான மூலபாடம் : தேவசகாயம்பிள்ளை, பக்கம் - 05

## மெட்டு இலக்கம் - 08

**மெட்டு :- வந்தோமே கட்டியகாரன்**
**மூலமெட்டு :- வந்தானே கட்டியகாரன்**
**தாளம் :- சதுஸ்ர ஏகம்**

பல்லவி
வந்தோமே கட்டியகாரர் வந்தோமே ஐயா
நீதிக்கோர் சங்கதியை நாம் தந்தோமே ஐயா

சரணம்
அந்நாளில் வாழ்ந்திருந்த
சோழ மன்னன் காதை தன்னை
இந் நாளில் சோதரர்க்கு
சொல்லிப்போக வந்தோமையா

பாசத்தின் உச்சமெல்லாம்
நீதியின் முன் துச்சமான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருக்கும், ஒன்றே நீதி
பாருக்கிதை சொல்ல வந்தோம்
ஆட்சியில் ஏறுவோர்க்கு
ஆதாரமாய் இந்தக் கதை
சாட்சியில்லாத போதும்
நீதி சாயாதிந்தக் கதை

* இம் மெட்டு **மாயா மாளவ கௌளை** இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டது.
* இப்பாடல் பாரம்பரிய தென்மோடிக்கூத்து மரபுக்குரியது என கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை அவர்களால் கூறப்பட்டாலும், கத்தோலிக்க கூத்துக்களில் இது பிற்பட்ட காலத்திலேயே இணைக்கப்பட்டது.
* பதிகைக்கான மூலபாடம் : சோழன் மகன்.

## (ஆ) அரச வரவுத் தருக்கள்

தென் மோடிக் கூத்துமரபில் 'ராஜபாட்' என அழைக்கப்படுகின்ற அரசவரவு தருக்கள் இப்பகுதியில் அடங்குகின்றன. அரசன் தன் வரவை தானே 'தன்மை'யில் பாடுவனவாகவே பெரும்பாலான தருக்கள் அமைகின்றன.

### மெட்டு இலக்கம் - 09

**மெட்டு :- அதி உக்ரம கோலன்**
**தாளம் :- சதுஸ்ர ஏகம்**

அதியுக்ரமகோலன் - பற்பநாத
அவனிப்பரிபாலன் - புரவிகள்
அடரச்சேனைக டொடரக்குடைகொடி
படரக்கொலுவினில் நட விடுவேனே

மதிமந்திரர்சூழ - மறுமன்னர்
துதிதந்தடிதாழ - இலங்கிடு
மணியாடக வொளி தணியழகிய
பணிமேவியகொலு வணிமேவுவனே

அரசைப் போற்றிசெய்யா - தவருடை
சிரசைப் புவியில்வையா - தரிந்திடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடல்பெற்றிடுவசி யிடையிறொடுகட
நடைபெற்றொளிர்கொலு முடுகிச்செல்வேனே

* இம்மெட்டு கீரவாணி இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டது.
* பதிகைக்கான மூலபாடம் : தேவசகாயம்பிள்ளை, பக்கம் - 07

## மெட்டு இலக்கம் - 10

**மெட்டு :- சகல அரசர் பணியும்**
**தாளம் :- சதுஸ்ர ஏகம்**

சகல அரசர் பணியும் ராச
ராசவென்னும் நிறையான் - றோமை
தன்னையாள் மகுட மன்னன் நானெது
சொர்ண வாசமது ஏகிடுவேனே -

மன்னர் மன்னர் தொளவே - மகுடமுடி
சென்னி துள்ளி எழவே - நானும்
இந்த றோமை தன்னைச் சொந்தமாயரசு
முந்தவே புரக்க வந்தனன் பாரில் -
செங்கோல் செலுத்தி அரசாளுவேன்

* இம் மெட்டு கீரவாணி இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டுள்ளது.
* பதிகைக்கான மூலபாடம் :- செனகப்பூ (ஜெனோவா) கையெழுத்துப்பிரதி.

## மெட்டு இலக்கம் - 11

**மெட்டு :- அகிலமும் புகழும்**
**தாளம் :- சதுஸ்ர ஏகம்**

அகிலமும் புகழு மொய்கார உத்தமன்
முகிலமும் அடர் கொடையான தத்துவன்
சிகிவரு பரனடி யான சித்தசன்
எகிநட மாதர்கள் பார்வை பெற்றவன்
எங்கும் தொனிபெருகும் பம்பைக் கொடிகவிய
சங்கை பொங்கு கீர்த்தி சிங்கனும் நானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறையவர் அறை பிறழாது வேதமா
முறை நிறைவாகவே ஒத நாளுமே
பொறையுடன் திறைபகு வேற்றுஇறை யவர்
நிறைவுடன் தந்தரசாள் பராக் கிர்ம
நிருபன் நிதிமணிகள் பெருகும் கண்டிநகரின்
கரும மறியக் கொலுவிடமே செல்வேனே

✶ இம் மெட்டு கீரவாணி இராக சாயலை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

✶ பதிகைக்கான மூலபாடம் : கண்டி அரசன், பக்கம் - 08

## மெட்டு இலக்கம் - 12

**மெட்டு :- உதயத்திசை எழு**

**தாளம் :- சதுஸ்ர ஏகம்**

உதயத்திசையெழு கதிர்பொங்கிய நெடு
நதி சூழ்ந்திடு புவி அதியுற்றிடு முடி
உடை ராசர்களென தடிமண்டிய தொழு
திடுதத்துவ முடி அரசனும் நானே

குடை கொம்புகளணி படைகொண்டு இடிதொனி
எவடி கொண்டு தொனி நிலவும் கனநிதி
குலவும் கன நிதி உலவும் வரிசையில்
மணியாடிடுவரு கொலுவிற் செல்வேனே

✶ இம் மெட்டு சங்கராபரணம், கீரவாணி இராகங்களின் சாயலை அடிப்படை யாகக் கொண்டுள்ளது.

✶ 'அதியுக்ரம கோலன்...' மெட்டின் சாயலைக் கொண்டிருந்தாலும் சிறு வேறுபாட் டோடு பாஷையூர் கிராமப்பகுதியில் வழங்கிவருகிறது.

✶ பதிகைக்கான மூலபாடம் :- ஞானசௌந்தரி (கையெழுத்துப்பிரதி).

## (இ) மந்திரி வரவுத் தருக்கள்

தென்மோடிக்கூத்து மரபில் அரசனின் ஆலோசனைக்குரிய பிரமுகராக மந்திரி சித்திரிக்கப்படுகினறார். இவரை அமைச்சர் எனவும் அழைக்கும் வழக்கமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகிறது. இவரது பாத்திரப் பண்புகளுக்கேற்ப வரவுத் தருக்கள் அமைகின்றன.

## மெட்டு இலக்கம் - 13

**மெட்டு :- மதிமெத்திய சூரன்**
**மூலமெட்டு :- ஆணிப் பொற்பணிவைத்து**
**தாளம் :- சதுஸ்ர ஏகம்**

*மதிமெத்திய சூரன் நிதிமெத்திய தீரன்*
*பதியுத்தம ராசன் அதியுத்தம போசன்*
*பகரரும் சட்ட நிபுணனா யுற்ற*
*பகர்மந்திரி யானுமிச் சபையில் வந்தேனே*

*எடைபெற்ற ஆல இடையுற்ற மாதர்*
*நடைபெற்ற முள்ளிக் கொடையுத்தமன் நானே*
*நவில்கண்டி நீதி முறைமன்ற மேக*
*இதுததி தங்கா தேகிடு வேனே*

- ✶ இம்மெட்டு **ஹம்சத்வனி, கீரவாணி** இராகங்களின் கலப்பாகக்காணப்படுகிறது.
- ✶ பதிகைக்கான மூலபாடம் :- கண்டி அரசன், பக்கம் - 07
- ✶ இத்தரு, மந்திரி வரவுக்கு மட்டுமன்றி சபைத்தருவாகவும், மந்திரியை யொத்த குணச்சித்திர பாத்திரங்களுக்கும் வரவுத் தருவாக பயன்பட்டுள்ளது.

## மெட்டு இலக்கம் - 14

**மெட்டு :- மன்னர் சபை நாடியே**
**மூலமெட்டு :- சொல்ல முடியாது**
**தாளம் :- சதுஸ்ர ஏகம்**

**பல்லவி**

*மன்னர் சபை நாடியே செல்வேன் - மதியே சொல்ல*
*மன்னர் சபை நாடியே செல்வேன்*

**சரணம்**

*மன்னர் சபை நாடியேநல் மந்திரியெ னும்பதவி*
*முன்னதாக நானுமேற்று இன்னலது ஏதுமின்றி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னும்புது ஆட்சிதன்னை நன்னயமு றவேசெய்து
மன்னவனி னன்பதனை இன்பதுறப் பெற்றிடவே
(மன்னர்)

முத்துமணி யேயிலங்கும் சித்திரக் கொலுவிருக்க
மெத்துவிற லேயுடைய வித்தகனா மெந்தன் நண்பன்
குத்திரம தாயரசு இத்தரையே பெற்றதினால்
மெத்திடும் அதிட்டமெனை இத்தினத்த மைச் சனாக்கும்
(மன்னர்)

கண்ணியம தாய்நடந்து எண்ணுகரு மம்முடித்து
நண்ணிடும் நவவரசை மண்ணதில் நிலைநிறுத்த
திண்ணியவென் அன்புடைய அண்ணல்பிர டெறிக்குக்கு
விண்ணுயர் மதியுரைத்து மன்னுபுகழ் ஓங்கவைக்க
(மன்னர்)

✶ இம் மெட்டு சங்கராபரணம், மாயா மாளவ கௌளை இராகங்களின் கலப்பாகக் காணப்படுகின்றது.

✶ பதிகைக்கான மூலபாடம் : மனம்போல் மாங்கல்யம், பக்கம் - 06

✶ இப்பாடல் மெட்டு பெருவழக்காக மந்திரிக்கானதாக இருப்பினும் வர்ணனைப் பாடலாகவும் பயன்பட்டுள்ளது.

## மெட்டு இலக்கம் - 15

**மெட்டு :- தேசமயமாயிலங்கும்**
**மூலமெட்டு :- நித்தில மணி**
**தாளம் :- சதுஸ்ர ஏகம்**

தேச மய மாயிலங்கும்
ராச கிரி தன்னில் தங்கும்
சித்திர ஜெமிந்தார் பட்டம்
பெற்றவன் நான் தானே

வாச மலர் காவில் நிறை
வீசி லங்கா தேச மதை
ஆசையுடன் பார்க்க மன
ஆவல் கொண்டேன் நானே

✶ இம் மெட்டின் இராகம் ஹரஹரப்பிரியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✶ பதிகைக்கான மூலபாடம் : கருங்குயில் குன்றத்துக் கொலை (கையெழுத்துப் பிரதி)

## மெட்டு இலக்கம் - 16

**மெட்டு :- சுபகுண சூரன்**
**தாளம் :- சதுஸ்ர ஏகம் (மிஸ்ரநடை)**

*சுப சுப சுபகுண சூரன் நான் - புவியர்*
*பணிமணி யணியுமுத் தாரன்நான் - கலையுல*
*கனில்மதி மிகுதியுறு மலைபோலபுய விறலோர்துதி*
*கற்பனா மிகுவல்ல விற்பன்னன் நானே*

*திரிலோகமும் புகழும் உயர்திண்ணலன் - ஈழம்*
*திகழும் நாட்டரசனின் பண்ணவன் - ஆலப்*
*புளையென்று உலகினிறு நவில்கொண்டு புகழ்கின்ற*
*தவயுத்தம பிரதமர் எனும்மந்திரி யானே!*

✶ இம் மெட்டு **ஹம்சத்வனி, கீரவாணி** இராகங்களின் சாயலைக் கொண்டுள்ளது.
✶ பதிகைக்கான மூலபாடம் :- கண்டி அரசன், பக்கம் 07
✶ 'வீரசூரரான வேடரே' என்ற மெட்டின் சாயலையும் இது கொண்டுள்ளது.

# (ஈ) சேனாதிபதி வரவுத் தருக்கள்

தென்மேடிக்கூத்துக்களில் தளபதி, சேனாதிபதி, கற்பித்தான் போன்ற பெயர்களில் அழைக்கப்படும். இப்பாத்திரத்திற்கான வரவுத் தருக்கள் பெரும்பாலும் வீரத்தை வெளிப்படுத்தும் தருக்களாக அமைகின்றன. இவை சில கூத்துக்களில் சண்டைத் தருக்களாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மெட்டு இலக்கம் - 17

**மெட்டு :- தண்டார் மணிமாலை**
**மூலமெட்டு :- துணிவோடே வருமடை**
**தாளம் :- சதுஸ்ர ஏகம்**

*தண்டார் மணி மாலை பிணைந்திடு*
*தராதி பாலனை ஏன் அழைத்தவர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றே அதி வேகமதாகவே
எழுந்து பணிகளை அணிந்து துணிவுடன்,
ஏகி அவர் சமூகம் மேவிச் சுறுப்புடனே
சேனை அதிபர் நானும் சென்றிடுவேனே.

குண்டு பீரங்கி நிரை நிரை
கெடாத மாற்றலர் படியில் படி வர
குருதி சொரிய அவர் சிரசு சரிய வெட்டி
கூலி கழுகு, நரி நாயுண்ணப் புரிவேன்

மன்னன் செனபோன் இரு சேவடி
சிறந்த நாள் வகை சிறந்த சேனைகள்
நச்சு நாகம் மது மச்ச வேரெடுத்து
பிச்ச பிதறி வழி தேடிச் செல்வேனே

✶ இம் மெட்டின் இராகம் சங்கராபரணம்
✶ இப்பாடல் சண்டைத்தருவாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.
✶ பதிகைக்கான மூலபாடம் : செனபோன் (கையெழுத்துப்பிரதி)

## மெட்டு இலக்கம் - 18

8518 c.c

**மெட்டு :- கிரிடத்தரசர் முடி**
**தாளம் :- சதுஸ்ர ஏகம் (மிஸ்ர நடை)**

கிரிடத்தரசர் முடி யுருளப்படைதொடுத்து
அரசைத்தனிபுரக்க வருநித்யநேசன்
சரசக்கெறுவிதநா கரிகப்பிரபுடீக
தளகர்த்தனெஸ்தாக்கி யுரைதவறோமே

வளமெத்திடுபற்பனா புரமெய்க்க அணிவைத்து
வரையிற்சமர்கள்செய்ய உரைபெற்றுளோமே
தளமுற்றுக்கெடிகெட்டுப் புகழுற்றுப்பொருதிடுஞ்
சமுகத்தில்வீர ரெங்களுக்கிணையுண்டோ

200519

மணலிற்றைலமதைக் குணமுற்றிட வடிக்க
வகைகற்றிடவறிவோ மதுவுமல்லாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறங்கொண்டு சமர் செய்ய வரும் வீரர்தமைக்கண்டால்
மனைதேடிச்சணமோடி மறைந்துடுவோமே

பார்த்திபன்றளக்கற்பித் தாளெங்கட்குரைத்திடும்
படியொரு நொடியோடிச் சடுதியிற்றானே
நாற்றிசையுலகெங்குந் தோற்றமதுடன் போற்ற
நடம் புரிவீரர்கள் திடம்பெறநாமே.

* இம் மெட்டு ஹம்சத்வனி, கீரவாணி இராகங்களின் கலப்பாகக் காணப் படுகின்றது.
* பதிகைக்கான மூலபாடம் : தேவசகாயம்பிள்ளை, பக்கம் - 15

## மெட்டு இலக்கம் - 19

**மெட்டு :- சீர்மையதிபதி**
**தாளம் :- சதுஸ்ர ஏகம்**

சீர்மையதிபதி யானவிக்ரோறி ராணிவேணி - மிகு
நேர்மை யோடிலங்கா புரிதானி

அடுத்தவிடுத்த கேர்பட் அதிபதிகவர்ணர் எனுந்துரை
அவையிடமாக இப்போது சென்றுமே
நிதிபெறு மிலங்கையின் தளமதின் வரிசையை
மதியுட னோதிடுமதி பதியானுமே

தங்க மாவரியக் குறோணிகளும் தானேநானே
பகுபக்குவ முடனொக்கவே பயிற்றி
பகைவோர் வகைவோர் வந்து பரிவுடனின்று சரிவிடாமலே
நகர்முழுவதும் தளமதையேற்றிப் பாதுசெய்திடு வீரசிங்கேறு
வான அன்ரனிப் போது வந்தேனே

* இம் மெட்டு கீரவாணி இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டுள்ளது.
* இத்தரு பெருவழக்காக பாசையூர் பகுதியிலேயே காணப்படுகிறது.
* பதிகைக்கான மூலபாடம் : கண்டி அரசன், பக்கம் - 68



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (உ) நாடகக்காரன் வரவுத் தருக்கள்

யாழ்ப்பாண தென்மோடிக் கூத்துக்கள் பெரும்பாலும் கத்தோலிக்கக் கூத்துக்களாக இருப்பதனால் இவற்றின் கதாநாயகர்கள் புனிதர்கள், வேதசாட்சிகளாகவே பெரும்பாலும் காணப்பட்டனர். இவர்களையே 'நாடகக்காரர்' என்ற பதத்தினால் அழைத்தனர். குணச்சித்திரப் பண்புடைய இப்பாத்திரங் களுக்கான வரவுத் தருக்கள் இப்பகுதியில் இணைக்கப்பட்டுள்ளன. எனினும் இப்பாடல்கள் முனிவர், குரு, தவசிகள் போன்ற பாத்திரங்களுக்கும் பொருந்துவன. அத்துடன் நாயகன், நாயகி இருவரும் உரையாடியவாறு தோன்றும் தன்மையு டனும் இப்பாடல்கள் அமைவதுடன் இறைவனை தொழும் வணக்கப்பாடலுடன், தோன்றுகின்ற மரபும் இப்பாடல்களில் உள்ளது.

### மெட்டு இலக்கம் - 20

**மெட்டு :- வானநாதா**
**தாளம் :- மிஸ்ரசாபு**

*வானநாதா தான தானநீதா - நன்மை*
*வடிவுள்ளானே என்றும் முடிவில்லானே*
*ஈனனானேன் நீத கீனனானேன் - என்தன்*
*யேசுவே மாசில் லானேசுவாமி*

*அரியதோர் சுவர்க்கநா டரசுநீரே - சுவாமி*
*அமலனார் சுதனோ டவருநீரே*
*உரியதோ ரருள்புரிந் தெமையுநீரே - சுவாமி*
*உதவிசெய் தடிமையா யமையும்நீரே*

*தேவரீர் மானிட னாகினீரே - பூவிற்*
*சிந்திடா வுதிரமுஞ் சிந்தினீரே*
*பாவினா னறிவில்மூ தேவியானேன் - என்னைப்*
*பாதுகாரும் யேசு நாதசாமி*

*முடிவிலே நடுவிலே யான்படாமல் - சுவாமி*
*முனியவுன் நினைவினி லெனைவிடாமல்*
*கடிதிலே உமதுநற் கருணைதாரும் - தூய*
*கன்னிமா மகவெனும் பொன்னினாடா*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✶ இம் மெட்டின் இராகம் நடனபைரவி

✶ பெரும்பாலும் 'குருவானவர்' பாத்திரத்திற்கு இம்மெட்டே அதிகம் பயன் படுத்தப்பட்டுள்ளது.

✶ பதிகைக்கான மூலபாடம் :- தேவசகாயம்பிள்ளை. பக்கம் - 29

## மெட்டு இலக்கம் - 21

**மெட்டு :- உயராதிபகர்த்தனே**
**தாளம் :- மிஸ்ரசாபு**

உயராதிபகர்த்தனே - உலகமுய்ய
உரையாத்தரு மத்தனே கருணைமிகு
செயம் நீடியநித்தனே - உமது பதஞ்
சிரஞ் சூடினேன் பத்தனே

சுடர் வானவர் முடியாய் தொல்பழிதீர்க்க
படியில் மனுவடிவாய் உதித்தநற்
கடிமாமலரடியைத் தொளுகில்
யார்க்கும் பிடிநீங்கிடும் வளியே

புவிவாழ் பரிசேயரே மறையுணராய்
புரை சேர் சதிசேயரே நஞ்சுறையுங் கட்
செவியீன்றிடு சேயரேதேவனின் கோபம்
வருமுன்னீருய்வீரே

சீரோங்கிய பதியில் யோர்தானெனும்
பேர்தாங்கியநதியில் அஞ்ஞான மாங்
கார் நீங்கவே மதியில்
இஸ்னானமே நானீகுவேன் கெதியில்.

✶ இம் மெட்டு **சிந்துபைரவி** இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண் டுள்ளது.

✶ பதிகைக்கான மூலபாடம்:- சஞ்சுவாம் (கையெழுத்துப்பிரதி).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெட்டு இலக்கம் - 22

**மெட்டு :- மாசிலா சுந்ர றோமை**
**மூலமெட்டு :- வண்ணத்தரு**
**தாளம் :- சதுஸ்ர ஏகம்**

*மாசிலா சுந்ரறோமை ராசசே னாபதியாய்*
*வீசுவாள்ரதமுதல் பேசுநால்வகை கொண்டே*
*வந்துற்றோர் சிரமது சரிவுற,*
*பந்தைப்போலு டலது உருளுற*
*இந்தத்தா ரணிதனிலே செய்தே*
*முந்துற்றே பெறுமகா வீரனாய்*
*ஈர்புவனங்களு மேயடி போற்றிட*
*வார்கடலொலியென பேரிகை சாற்றிட*
*சீருலா வாகை புயாசல மேந்தியே*
*பாரிலே மாபிர தாபமே பெற்றே*

*தேசதே சந்துதிக்க ராசர்மே லாய்மதிக்க*
*பூசி தானந்தநிகர் போசனாய் ரணதீர*
*பிரபையா லவனிமுதற் சுரரரோடின்றுவரை*
*கரமதே சிரங்கூப்பிச் செகுனரே றெனத்தொழ*
*சீரியவீர சேனாபதியாயுல கோர்கள் நடுங்க*
*மெய்யாய் ஜெயபேரிகை...*
*யேயொலியாகவே வானதிலுஞ் செல*
*வேயியமன் நிகராகிய நானுமே*

✶ இம் மெட்டின் இராகம் சிந்துபைரவி
✶ பதிகைக்கான மூலபாடம் :- எஸ்தாக்கியார். பக்கம் - 12

## மெட்டு இலக்கம் - 23

**மெட்டு :- அத்தனருளாளி**
**தாளம் :- மிஸ்ரசாபு**

*அத்தனருளாளி நித்தனெமைமீளி*
*சுத்தன்சுதனானக் கத்தன்பதசேவை*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தஞ்செய்துதாவி மெத்தன்பொடுமேவி
சித்தந்தனினாளும் வைத்தஞ்சல்செய்வேனே
சிறந்தம்பரந் துறந்தும்மலை பிறந்துந்தூதர் மகிழ்ந்தும்மூவர்
முழந்தாளினி லிருந்துந்தொழு பதந்தாவினேனானே

இப்போதேனையாண்டு மெய்ப்பார்த்தனை மீண்டு
இன்னுந்திருமேனி சின்னம்படவேதான்
அப்பாரடியுண்டு செப்பாரறை கொண்டு
ஆனாதருள்செய்யும் வானாடுறைவோனே
அடுத்துக்கயி றொடுத்துக்குரு செடுத்துப்புய மிருத்திக்குரு
சறைந்தின்னுரை பகர்ந்தேயுயிர் பிரிந்தேயெமைமீண்டீர்.

✶ இம்மெட்டு சிந்துபைரவி இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

✶ பதிகைக்குரிய மூலபாடம் :- தேவசகாயம்பிள்ளை. பக்கம் - 62

## மெட்டு இலக்கம் - 24

**மெட்டு :- ஆதிபிதா வின்**
**மூலமெட்டு :- செப்பரிய பூவில்**
**தாளம் :- ரூபகம்**

ஆதிபிதா வின் மதுரச்சேயே
ஏக னானவரைப் பெற்ற மரியாயே
தூயவிஸ்பிரீத் சாந்துநேசிநீயே போகும்
துணையெனக்காய்த்தயை புரிகுவாயே

செப்பரிய பூவில் வருசென்ம - நாளாய்த்
தீயலகை வசமாய்ச் செய்கன்மம்
இப்போதொலைந்தொளி யுதயமானோம் - இனி
ஏகபரன்றன்மக வாய்ப்போனோம்

பத்தெனுங்கற்பனையை மறவாதே - கொடிதாம்
பாவலகை யோடுற வாகாதே
சுத்தனையேநித்த மனத்தெண்ணும் - நமக்குச்
கனகசொற்கவீ டீற்றில்நண்ணும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவுலகினாசைகள் பொல்லாதே - தவமும்
பொறுதியுமல்லாதொன்றும் நில்லாதே
ஆவதுமக் கேயுரைத் தேன்கேளும் - வான
அம்பரனை நம்பிவாழ் வோம்நாளும்.

* இம் மெட்டின் இராகம் நடபைரவி
* இப்பாடல் நாடகக்காரர் வரவுத்தருவாக பெருமளவில் பயன்பட்டு வந்ததாயினும், உரையாடல் தருவாகவும் பயன்பட்டுள்ளது.
* பதிகைக்கான மூலபாடம் : தேவசகாயம்பிள்ளை, பக்கம் - 44

## மெட்டு இலக்கம் - 25

**மெட்டு :- வாளனையே**
**மூலமெட்டு :- பொன்னொளியும்**
**தாளம் :- சதுஸ்ர ஏகம்**

***தானா :***

வாளனைய வரிவிழியே
வஞ்சியேயென் வரைமொழியே
ஆல கண்டனாஞ் சிவனை
அடிபணிந்து போற்றி - நாங்கள்
அகமகிழ்ந்து சாற்றி

**தேவி :**

வெண்டரள மொளி சிதறி
கொண்ட மணிப்புயம் விதற
கண்டமறை ஐங்கரனைப்
போற்றி மலர் சாற்றி - அவர்
பொன்னடியைப் போற்றி.

***தானா :***

வண்டு மொய்த்த மலர்க்குழலே
வனசநிகர் முகவெழிலே
பண்டுபணி மதி மிலைச்சும்
மங்கை பங்கனாரே - அவர்
செங்கமலந் தேரே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவி :

கண்டகங்கைக் கொண்டமன்னன்
கருதரு தானாபதியே
அண்ட ரிறையா மரணின்
அடிமலரைப் போற்றி - இந்தப்
படிதனிலே சாற்றி

- ✶ இம் மெட்டின் இராகம் ஹரஹரப்பிரியா.
- ✶ இத்தருவும் உரையாடல் தருவாக பயன்பட்டுள்ளது.
- ✶ பதிகைக்கான மூலபாடம் : மரியதாசன், பக்கம் - 13

## மெட்டு இலக்கம் - 26

**மெட்டு :- செங்கமலமே**
**மூலமெட்டு :- பொன்னின் நிறமும்**
**தாளம் :- ரூபகம்**

செங்கமலமே தங்குபதமே
தங்கமே பரன் துங்கமே யொளிர்
இங்குனைநாடி மங்களம் பாடி
தங்காதேதேடி சுறுக்கினில்
நீங்காதே யோடி

தங்கத்தொளியும் - அங்கத்திகழும்
திங்கட்சுடருன் அங்கத்தொளிர
தங்குன்னுதரத் துங்கனாம்பரன்
தன்னையே வேண்டி நெடுவனம்
முன்னையே தாண்டி,

கடல்மடையெனக் கொடுகருணையே -
கருதியுன்திருப் பதியில்வந்திட
அடல்மிதிபதத் திடனுடன் விரைந்
தண்டினேனம்மா - நினதருள்
வேண்டினேனம்மா

பேரணிதயை - காரணிபிறை -
தாரணிமறை யோரணிநல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சீரணிபரி - பூரணிதனி*
*நேரணிகொண்டு - வரச்செய்வாய்*
*தாரணியின்று*

✶ இம் மெட்டு சிந்துபைரவி இராகத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது.
✶ மூலபாடம் : மரியதாசன், பக்கம் - 21

**மெட்டு இலக்கம் - 27**

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

**மெட்டு :- செந்தூருறை**
**தாளம் :- சதுஸ்ர ஏகம்**

***கட்டபொம்மன் :***
*செந்தூருறை கந்தா சிவ மைந்தா நமஸ்காரம்*

***ஜக்கம்மா:***
*சேவல் கொடியோனே செல்வக் குமாரா நமஸ்காரம்*

***கட்டப்பொம்மன் :***
*சகலவரம் பெருக அருள் புரிவாய் நமஸ்காரம்*

***ஜக்கம்மா :***
*சரணடைந்தோம் கருணைகூர் சண் முகனே நமஸ்காரம்*

***கட்டப்பொம்மன் :***
*சத்து சித்து சுப்பிரமணிய வஸ்தா நமஸ்காரம்*

***ஜக்கம்மா :***
*சகலகலைக்கினிய தமிழ் தலைவா நமஸ்காரம்*

✶ இம் மெட்டு சிந்துபைரவி இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டுள்ளது.
✶ பதிகைக்கான மூலபாடம் : கட்டப்பொம்மன். பக்கம் - 01
✶ இது பாஷையூர் பகுதியிலேயே பெருவழக்காயுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெட்டு இலக்கம் - 28

**மெட்டு :- பூவுல கெல்லாம் விளங்க**
**தாளம் :- ரூபகம்**

பூவுலகெல் லாம்விளங்கப் பூரணமதான
புகழ் பெருகு தவிதரசர் குலமகளதான

தேவமரி யம்மாள்பொற் கோயில்செய்ய முழுதாய்ச்
செப்புமர மெப்படியு மொப்பனுப்பவேணும்

ஏதமுற்ற பொய்மறையோ ரேதுசொன்னாரறியேன்
என்னவந்தா லும்வரட்டும் மன்னன் முன்செல்வேனே

ஆந்தரங்க மில்லாத அரசனென்னைவாளால்
அறுத்தாலுங் கர்த்தனடி மறுத்திடல் செய்யேனே

✶ இம் மெட்டின் இராகம் நடபைரவி
✶ பதிகைக்கான மூலபாடம் : தேவசகாயம்பிள்ளை, பக்கம் - 52

## மெட்டு இலக்கம் - 29

**மெட்டு :- சிறுகுமதியிதளி**
**தாளம் :- சதுஸ்ர ஏகம் (சிஸ்ர நடை)**

சிறுகுமதியிதளி அறுகுபொறியரவு சூடியே - மழுச்
செங்கை கொண்டாடிய மங்கைபங்காளனைப் பாடியே
உறுதிபெறுமதிக பெறுதியாம் பொருள்கள் போச்சே - உண்டிக்
குப்புஞ்சீனிநிக ரப்பனேயருமை யாச்சே

கரியச் சொருகிப் புறஞ்சரியொப்பிடுங் கரியகூந்தலாள் - தங்கச்
சுட்டியுடனே நல்ல பட்டமணியுட் கட்டு மீதெல்லாம்
கரியப்பாசியுடன் சருகைச் சேலையுமல் லாமே - மற்றுங்
கட்டும் பணதியெல்லாங் கெட்டுநட்டமாச்சில் லாமலே

அவத்தைச் சமத்துமக்கள் மனத்தைப்போற்
றிடுக்கிட்டேங்கிறேன் - ஆரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அருந்துந்தண்ணீருக்கும் மருந்துபோலிருந்து தூங்கிறேன்*
*தவத்துற்றவர்களற்ப பவத்தைப்போலவெளியானதே - அரைச்*
*சல்லியேனுமென்கைக் கில்லையென்ன வழியானதே*

★ இம் மெட்டு நடபைரவி இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டுள்ளது.
★ பதிகைக்கான மூலபாடம் : தேவசகாயம்பிள்ளை, பக்கம் -19

## மெட்டு இலக்கம் - 30

**மெட்டு :- பொன்னொளிர்**
**தாளம் :- மிஸ்ரசாபு**

*பொன்னொளிர் பூரண விண்ணுறை தேவனே போற்றி போற்றி*
*- மிகு*
*பூவும்பலபொருள் யாவும் படைத்தவா போற்றி போற்றி*

*பன்னரிதா நன்மை தன்னுருவானவா போற்றி போற்றி -*
*உன்தன்*
*பாதசரோருக நீழல் தந்தாளுவாய் போற்றி போற்றி*

*எண்ணருமாதி யனாதியுமானவா போற்றி போற்றி - ஆறு*
*லட்சணத்ரீத்துவ ஏகபராபரா போற்றி போற்றி*

*மண்ணினிலேமனு வாகப்பிறந்தவா போற்றி போற்றி - தேவ*
*மாமரி மைந்த னெனவரு தேவனே போற்றி போற்றி*

★ இம்மெட்டு நீலாம்பரி இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டது.
★ இம்மெட்டு புலசந்தோர் பாத்திரத்துக்கான வரவுத் தருவாக அதிகம் பயன் படுத்தப்பட்டுள்ளது.
★ பதிகைக்கான மூலபாடம் : தேவசகாயம்பிள்ளை, பக்கம் - 01

## (ஊ) பேய்வரவு

கத்தோலிக்க தென்மோடிக்கூத்துக்களில் ‘பேய்’ பாத்திரம் ஒரு விசேடித்த பண்பினைக் கொண்டதாகும். இப்பாத்திரத்துக்கான பாடல்களும், பாத்திரப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்புகளுக்கேற்ப தனித்துவமானவை.அவை பெருமளவில் வீரத்தை வெளிப்படுத்துவன.

## மெட்டு இலக்கம் - 31

**மெட்டு :- ஆதிபரனாருரை**
**மூலமெட்டு :- அந்தரவயி**
**தாளம் :- ஆதி**

*ஆதிபராபரனாருரை மீறி -*
*அடியழலுறு திறமறமுடைய*
*தீதினிலேயுர மேறிடு வீறொரு*
*திறமுறு தறுகணத் தலைவனும் நான்*

*அடருறு கொடியன் - இடருறுதுடியன்*
*ஆனகணங் களுக்கே கெடியன்*
*மடமொடுமானங் கெடநடவீனம்*
*திடமுட னேதரு சூரனல்லோ*

*மிடியுறுமோகம் படியுறுகோபம்*
*குண்டணி கோளது கொண்டுமேநாளும்*
*கடிதுறுசாபம் முறுகிய மோசம்*
*கொண்டு கெடுத்திடு மிண்டனல்லோ*

*நாட்டினில் ஒருவன் மேட்டிமையாய் மரி*
*நண்ணியே தண்டளிக்கேகிறனே*
*தாட்டிகமுடனே நாட்டமாய்ச் சென்று*
*சாற்றிடுமொழியா லேமாற்றிடுவேன்*

✶ இம் மெட்டு சங்கராபரணம் இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டது.

✶ பதிகைக்கான மூலபாடம் :- மரியதாசன் பக்கம் :- 29

## மெட்டு இலக்கம் - 32

**மெட்டு :- கனலொடு முந்திய செந்தீ**
**தாளம் :- சதுஸ்ர ஏகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனலொடு முந்திய செந்தீயுடன்
காட்டிய வீர பற் காட்டி
அனலில் அமிழ்ந்திடு சேனைகளின்
அதிசுக்ரேந்திரன் நானல்லவோ

தாயொடு மகளைச் சண்டை செய்யத்
தங்கை தமக்கையைத் தூறு செய்ய
மாயமதெல்லாமே புரியும்
வல்ல சுக்ரேந்திரன் நானல்லவோ

அப்பனுடனனை மக்களுடன்
அடிபிடிப்படவகை செய்வதல்லால்
செப்பரு மாமியும் மருமகளுஞ்
சிகை பிடித்திடச் செய்வோன் நானல்லவோ.

பத்து இறைசாற் கொரு இறைசால்
பரிவுடனொவ்வொரு மாத மெல்லாம்
தித்திப்புடன் வட்டி வாங்கிடவே
செய்சுக்ரேந்திரன் நானல்லவோ.

✶ இம்மெட்டின் இராகம் சங்கராபரணம்
✶ பதிகைக்கான மூலபாடம் : தேவசகாயம்பிள்ளை, பக்கம் - 109

## மெட்டு இலக்கம் :- 33

**மெட்டு :- நடந்திடுவேன்**
**மூலமெட்டு :- நடமிடுவேன்**
**தாளம் :- ஆதி**

8518 cc

நடந்திடுவேன் நடந்திடுவேன் - பெரும்
நதிகளின் மேலே நடந்திடுவேன்.
ஏறிடுவேன் இறங்கிடுவேன் - மலை
உச்சியில் நின்று குதித்திடுவேன்

மடை குவிப்பேன் மடை குவிப்பேன் - பொது
மக்களின் கண்களை மறைத்திடுவேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடைவிடுவேன் தடை விடுவேன் - என்னைத்
தடுத்து நிறுத்திடுவோர் தயங்கிடவே

நடமிடுவேன் நடமிடுவேன் - இந்த
நானில மெங்கும் அதிர்ந்திடவே.
திடமிடுவேன் திடமிடுவேன் - எந்தன்
தண்டு சுழன்றிடும் மண்டலமாய்

மாற்றிடுவேன் மாற்றிடுவேன் - மக்கள்
மதம் மனம் மாறிடச் செய்திடுவேன்
காட்டிடுவேன் காட்டிடுவேன் - பலர்
கண் குளிரக் காட்சி காட்டிடுவேன்

✶ இம்மெட்டு சங்கராபரணம் இராகசாயலை அடிப்படையாகக் கொண்டது.

✶ பேய்வரவுக்கு மட்டுமன்றி வேட்டைத்தருவாகவும் இம்மெட்டு பயன்படுத்தப் பட்டுள்ளது.

✶ பதிகைக்கான மூலபாடம் : நீ ஒரு பாறை (கையெழுத்துப்பிரதி)

## (எ) கள்ளர் வரவு

'கள்ளன்' என்ற பாத்திரத்திற்குப் பாடப்படுவதற்கான மெட்டுகளும் இக்கூத்து மரபில் பயன்படுத்தப்பட்டுள்ளன. எனினும் இம் மெட்டுக்களில் சில 'பேய்' பாத்திரங்களுக்கு பயன்படுத்தப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

### மெட்டு இலக்கம் - 34

**மெட்டு :- இத்தரை மீதினில்**
**மூலமெட்டு :- தாயெனவே**
**தாளம் :- சதுஸ்ர ஏகம்**

இந்தரைமீதினில் எந்தனைப் போறகள
வெய்தியெடுப்பவரார் - அமரரும்
அந்தரவாசம் பிடிப்பனென்றேகியே
அவ்விடம் விட்டேகினார் பலேபலே

இந்திரனோடு யமனுமே தன்தொழில்
இல்லாது போனதென்றே - அலோ பலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெந்தழலக்கினி யானோன் வருணனை
மேவியழுவ தென்னால் பலே பலே

மேகத்துயர்ந்த பொன் மாடங்கள் மேலே யான்
மின்னின் விரைவெனவே சென்றே யங்கே
ஏகத்துயர் பல காவலைத் தாண்டியே
எல்லாமெடுத்தனன் நான் பலேபலே

வானத்தவரெந்தன் பேரினாலஞ்சிடின்
மற்றென்ன பூவுலகோர் பலே பலே
ஈனச்சவக்குழி தாங்களே தோண்டியே
என்னாலுட் செல்லுவரே விரைவாக

சுந்தரமானநல் லீட்டிகிறிசொடு
சொல்லார் துப்பாக்கியுடன் சுடர்க்கத்தி
இந்தரையெல்லாமே வந்தாலும் பந்தென
எற்றியுதைத்திடுவேன் யமனையும்

வில்வத்துரையொடு சொல்லும் பணநிதி
மேவும் பெரியோரே கலங்கிட
செல்வத்துரையின் தயாள குணத்தினால்
செல்கை விடுத்தேனே அவர்பதி

✶ இம்மெட்டு சங்கராபரணம் இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டது.
✶ பதிகைக்குரிய மூலபாடம் எஸ்தாக்கியர், பக்கம் - 35

## மெட்டு இலக்கம் - 35

**மெட்டு :- மெல்லச் செல்லுவேன்**
**மூலமெட்டு :- அன்னலம்**
**தாளம் :- சதுஸ்ர ஏகம்**

மெல்லச் செல்லுவேன் அல்லியேயந்தச்
செல்வமாளிகைக்கே - உற்ற
நல்வகைக்குமே நீதி
சொல்வகைக்குமே - பெறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரியமனத் தீரியத்துடன் ஓர்மங் கொண்டுமே
மிகுதாரங் கொண்டுமே

அட்டியேயிலா இரட்டை யாடைகள்
கட்டியே யிடையே - மனத்
திட்டமே நடையே இருள்
வட்டமே சடையே - கொண்ட
ஆருமேயறியாது ராவிலே வீராமாய்ச் செல்வேன்,
களவாரமாய்க் கொள்வேன்

காணிடாது நூல் ஏணிகொண்டு சேண்
மாடந் தொற்றியே - நிதி
தானம் பற்றியே மகிழ்
தானும் முற்றியே - பெறும்
காட்சியால்புவி ஆட்சிசெய்குவேன்
மாட்சியாய்த்தானே அத்தாட்சியாய் நானே

பஞ்சுமெத்தையில் ரஞ்சிதத்துயில்
மிஞ்சு கொள்ளுகிறார்
மணிநெஞ்சை அள்ளுகிறார் - உயிர்
விஞ்ஞை கொள்ளுகிறார் இன்று
பற்றுவேன் நகைக் கற்றிரள்தனை
முற்றுமோர்மமாய் அதிமிக்க ஆர்வமாய்

- ✶ இம்மெட்டானது சங்கராபரணம் இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டது.
- ✶ இது கள்ளர் தருவாக கொள்ளப்பட்டாலும், சண்டைத்தருவாகவும் பயன் படுத்தப்பட்டுள்ளது.
- ✶ பதிகைக்கான மூலபாடம் எஸ்தாக்கியார், பக்கம் - 36

## (ஏ) சம்மனசு தரு

கத்தோலிக்க கூத்துக்களில் இப்பாத்திரம் மிக முக்கியமானதாகக் காணப்படுகிறது. இறைவனின் பிரதிநிதியாக மேடையில் தோன்றும் இப்பாத்திரத்துக்கான மெட்டுக்கள் பாத்திரப்பண்பை சிறப்பாக வெளிப் படுத்துவனவாக உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெட்டு இலக்கம் - 36

**மெட்டு :- பூசித உசிதராச்**
**மூலமெட்டு :- கத்தனை நிதம்**
**தாளம் :- ஆதி**

பூசித உசிதராச யேசுதயை பெற்றதாலே
போஷராேனோம் ஞான ராசராேனோம் - அத்தால்
போற்றுவோமே பதமேற்றுவோமே

மாசிலாப் பரமன் காட்சி தாசரீடேற வத்தாட்சி
மரித்தசீலம் ரத்தம் சொரிந்தகோலம்
நாங்கள் வானபாக்யம் பெறலாஞ்சலாக்யம்

பொன்னுடன் பணமித்தேயம் மின்னணிகள் போன்ற மாயம்
பூமிவாழ்வே புகையானதொன்றே
யேசடி பூணவாச்சே ஞானங் காணலாச்சே

மாருதக் கடலிலுற்றோர் பேர்துணையாய்க்கரைபெற்றார்
வானஞானம் மகிழ் மெய்ஞ்ஞானம்
சொல்வார் வானுந்நீடக் குயிலினந்தானும் பாட

✶ இம்மெட்டு பெலகிரி இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டது.
✶ பதிகைக்குரிய மூலபாடம் : எஸ்தாக்கியார், பக்கம் - 33

## மெட்டு இலக்கம் - 37

**மெட்டு :- தற்பரர்க்காய்**
**தாளம் :- சதுஸ்ர ஏகம்**

தற்பரர்க்காய் வீந்தமரி தாசனே கேளாய் நிறை
சம்பிரம தேவனின் தாள் சேர்ந்து நீ பாராய்

முத்தியின்பமே சுரந்து முகந்து நீ பாராய் - அதில்
முழுதுமுந்தன் பிரியமெல்லாம் சரிவரக் காண்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாய்வுலக மயல்தனிலே மங்காதொளிர்ந்தாய் - சுடர்
மங்கிடாதொளிர்நிலவு மானியம் பெற்றாய்

மோகமில்லை நோவுமில்லை தாகமுமில்லை - இந்த
ஆகமடங்காப் பரனின் அன்பதற்கெல்லை

பஞ்புலனே யுணரா பரம ஆனந்தம் - உனக்
கென்றுமென்றுமே தருமே ஏகனே சொந்தம்

★ இம்மெட்டின் இராகம் சங்கராபரணம்

★ பதிகைக்குரிய மூலபாடம் : மரியதாசன், பக்கம் - 117

## (ஐ) நந்தவனப் பாடல்கள்

தென்மோடிக்கூத்துக்களில் பெரும்பாலும் அரசி இளவரசி பாட்டுடைத் தலைவி போன்ற பாத்திரங்கள் அந்தப்புரம், அல்லது நந்த வனத்திலேயே அறிமுகப்படுத்தப்படுவர். அங்கு தோழிகளுடன் உரையாடுவதும், தோழிகள் தலைவியைப் பற்றி புகழ்ந்துரைப்பதும் வழக்கமாகும். இதற்கென பின்வரும் பாடல் மெட்டுக்கள் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன.

### மெட்டு இலக்கம் - 38

**மெட்டு :- மானேர் மடவஞ்சியே**

**தாளம் :-சதுஸ்ர ஏகம்**

மானேர் மடவஞ்சியரே யெந்தன்
மாண்புள்ள பாங்கியரே - இப்போது
நாமே மலர் கொய்து மகிழ்ந்திட
நந்தா வனம் புகுவோம்.

கோனார் புகழ்ந்து துதித்திடு
கொவ்வை இதழ் மொழியே - நல்ல
பானேர் ஒளிர் பங்கியெறிவனப்
பாங்குள்ள பூப்பறிப் போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செஞ்சுடர் விழி அஞ்சுகமே மொழிச்
சின்ன இடை யாளே - அப
ரஞ்சித மலரானதையே நாமும்
அக்களிப்பாய்ப் பறிப்போம்.

மஞ்சுமா மதி துஞ்சுமெழில்முக
மாங்குயிலே கேளும் - செழுங்
கஞ்சமாமலர் கொய்து களித்திடும்
கானம யிலேநீர்

✶ இம்மெட்டு **சிந்துபைரவி** இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டது.
✶ பதிகைக்கான மூலபாடம் : மரியதாசன், பக்கம் - 19

## மெட்டு இலக்கம் - 39

**மெட்டு :- பூரண சந்திர**
**தாளம் :- ஆதி**

பூரணச் சந்திர மாமுகரஞ்சித பொற்கொடித் தோழி மாரே
பூவனமாகிய காவனமேகிட போதினில் செல்வோம் நாமே

இங்கிர்த லங்கிர்த ரஞ்சித பூஷண இன்புள்ள மாதரசே
இதுசணம்மருமலர் வனமதுசெல்வோம் இனித்தடை என்ன
அம்மா

மயிலதின் ஒயில்நடை குயிலோசைபின்னிடு மங்களம் தங்கும்
சேடி
மலர்மணமொடுதென்றல் உரமுடன்வீசுது மங்கையே வாரும்
ஓடி

தேசணிவாசணி பூசணிரஞ்சித தேன்மொழி யாளே அம்மா
தேடிடும்மலரேகைக் கூடிடுவனமிது தேசோ மயமே பாரும்

✶ இம்மெட்டு **சிந்துபைரவி** இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டது
✶ பதிகைக்கான மூலபாடம் : கண்டி அரசன், பக்கம் - 28


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெட்டு இலக்கம் - 40

மெட்டு :- அங்கே பாராய்
மூலபாடம் :- அந்தரத்திலே
தாளம் :- சதுஸ்ர ஏகம் (மிஸ்ர நடை).

அங்கே பாராய் கொங்கார் றோசா
இலங்குந் தோற்றமே - அதில்
ஆசை கொண்டேன் நேசச் சேடி
அன்பின் தோற்றமே

பங்கேரு கைதானே பற்றி
இங்கு தந்தேனே - இதை
பட்சமாகச் சூடிக் கொள்ளும்
லட்சணந்தானே.

தங்கமயப் பூக்கள் சோலை
எங்கும் சேட்டமே - வானின்
தாரகை போலே யொளிரும்
எங்கும் கூட்டமே.

கஞ்சந்தனில் அஞ்சம் வாழும்
ரஞ்சிதம் பாரும் - அங்கே
மாலை வேந்தன் வரவேகாணக்
கோலங் கொள்ளுதே.

★ இம்மெட்டின் இராகம் சங்கராபரணம்.
★ இம்மெட்டு பெருவழக்காக நந்தவனப்பாடலாக காணப்படினும், உரையாடல் தருவாகவும் சில கூத்துக்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது.
★ பதிகைக்கான மூலபாடம் :- விசயமனோகரன், பக்கம் - 32

# (ஒ) வீரர் பாடல்கள்

தென்மோடிக் கூத்துக்களில், 'வீரர்' பாத்திரங்கள் முரண் இயல்புடன் பயன்படுத்தப்படுவர். அதாவது குரூரமான, கொலைச் செயலை செய்பவர்களாக சித்திரிக்கப்படும் அதேவேளை நகைச்சுவைப் பாத்திரங்களாகவும், வெகுளிப்பாத்திரங்களாகவும், கூத்துக்களில் வருவர். அவ் வெகுளித்தனத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்தும் பாடல்களும் வீரத்தை வெளிப்படுத்தும் பாடல்களும் இப்பகுதியில் அடங்குகின்றன.

## மெட்டு இலக்கம் - 41

**மெட்டு :- வெற்றி வீரன் நானையா**
**தாளம் :- சதுஸ்ர ஏகம் (மிஸ்ர நடை)**

**பல்லவி**

வெற்றி வீரன் நானையா - இரணசூர
வெற்றிவீரன் நானையா

**சரணம்**

வெற்றி வீரத்தொடு முயலொன்றெனைத் தொடர
வீட்டில் மனையாளொரு விதமாயிருக்கக்கண்டு
சுற்றியோடிவந்து காலிரண்டையும் பூண்டு
துரத்துதுரத்து என்று உரத்துச் சொல்லுகின்ற

(வெற்றி)

நாலாம் சந்தைதனிற் கொண்டசுரக்காய்தன்னை
நறுக்கிக்கறிக்குத்தாவென் றெந்தன்மனையாள்கேட்க
வேலாகந்தாதுணை யென்றுவாளெடுத்து
வெட்டஒன்பதுநாள் வெல்லச்சென்றுபோன

(வெற்றி)

சேனைத்தளத்துடனே ஊனவேலரசன்
சென்றபின்னரந்தத் தெருவிலொருநாட்போனேன்
ஆனையடியைக்கண்டு ஓடிக்கதவைப்பூட்டி
அச்சத்துடனிருந்து பிச்சுப்பிதற்றுகின்ற

(வெற்றி)

சட்டமாய்நிறைந்த தண்ணீர்க்குடத்துக்குள்ளே
தன்னைப்போலொருவன் சன்னைசெய்யக்கண்டு
கட்டிக்கொடுக்கிழுத்துக் காலிரண்டையுந்தூக்கிக்
கடுகஉதைத்துத்தள்ளி முடுகவிழுந்துபோன

(வெற்றி)

✶ இம்மெட்டு **கல்யாணி** இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டது.
✶ பதிகைக்கான மூலபாடம் : தேவசகாயம்பிள்ளை, பக்கம் -61



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெட்டு இலக்கம் - 42

**மெட்டு :- சுற்றாத தேசமெல்லாம்**
**தாளம்:- சதுஸ்ர ஏகம்**

சுற்றாத தேசமெல்லாஞ் சுற்றிச் சுற்றிப்பார்த்தாலுந்
தொல்லுலகிலென்போல்வீரர் சொல்லவேறுண்டோ

மற்றாருமெனக்கிணை யுற்றாருண்டோ - சொல்லில்
வாள்வீரனுக்குள்நானொரு வாலவீரனே

மூண்டமரிலென்முன்வந்து மீண்டவருண்டோ -எனக்கு
காண்டவதகனனிகராகக்காணுமோ

வேண்டிடும்வீட்டாளையோர்நாள் ஏண்டி அயன்றதால் - ஊரார்
வீடுதேடிக்கோடிதூங்கும் தாடிவீரனே

எண்ணுக்குளானவீரர் என்னைக்கண்டல்லா - வில்லை
என்னைப்போலவீரவான்கள் எண்ணப்பேருண்டோ

கண்ணுக்குட்கஞ்சல்விழக் கஞ்சலோடுற - வென்னென்று
கண்ணைக்குத்திப்போட்டிருந்த திண்ணைவீரனே.

✶ இம்மெட்டின் இராகம் சங்கராபரணம்
✶ பதிகைக்கான மூலபாடம் : தேவசகாயம்பிள்ளை, பக்கம் - 70

## மெட்டு இலக்கம் - 43

**மெட்டு :- தேடுவோமே நாமே**
**மூலமெட்டு :- மந்திரியே**
**தாளம் :- சதுஸ்ர ஏகம்**

தேடுவோமேநாமே நாடேயெங்குந் தாமே - அட
தீரசூரபிலாசிது வீரன்மேலன்பாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தினத்தின்கரையும் ரெத்தினத்தின் வரையும்
முந்துறுந் தேசங்களெல்லாம் விந்தையாய்த்தேடுவமே

அங்கேவருவாரார் துங்கா உற்றுப்பாராய்
அஞ்சிடுவார் சத்துருக்கள் நெஞ்சகலங் கண்டே

ராசமனைபார்த்தோம் நேசாஜயந்தீர்த்தோம்
சந்துகா லுளைகிறதே அந்தத்தேசம்போக

அஸ்தமனநேரம் ஆன அந்தகாரம்
அண்டிச்சென்றாற் கண்டோர் எம்மேற் சண்டைசெய்கு வரே

தூதுவராம்பேரே தொடர்வோம் இந்தப்பாரே
சொல்லுமொளி காலம்மனை செல்லுவோமேசீரே

✶ இம்மெட்டின் இராகம் சங்கராபரணம்
✶ பதிகைக்கான மூலபாடம் : எஸ்தாக்கியார், பக்கம் - 119

## மெட்டு இலக்கம் - 44

**மெட்டு :- வணங்கிலர் சிரமும்**
**தாளம் :- மிஸ்ரசாபு**

வணங்கிலர்சிரமுங் - கூடி - யிணங்கிலருரமும் - எதிர்பொரு
வாளுறுகரமும் - பெரிதாய் - நீளுறுபுரமும்

நிணங்கறைசொரியக் - கோடி - பிணங்குறைதிரியக் -கூழி
நிறைகொடுசரியச் - சமரில் - விரைவுடனரிவேன்

காற்றினைத்தறிப்பேன் - சூழுங் - கடலினைப்பிறிப்பேன் - பெரிய
கருமலை முறிப்பேன் - எறியுங் - கனலினை கொறிப்பேன்

கூற்றினைமறிப்பேன் - அஞ்சார் - குடலினைப்பிறிப்பேன் - பெரிய
கொடுங்கணை முறிப்பேன் - என்போற் - குறிக்கிலிங்காரோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பரந்தொடுவேன் - அஞ்சார் - ஆரையுமடுவேன் -
எனைப்பணி
பவரையும்விடுவேன் - உயரா - தவனையுஞ்சுடுவேன்

எம்பெரும்வீரஞ் -சொல்ல - எத்தனைதூரம் - பூவில்
எனக்கென்னபாரம் - உங்கட் - கிசைத்தேனென்சாரம்

* இம்மெட்டின் இராகம் **ஹரஹரப்பிரியா**
* இம்மெட்டு சண்டைத்தருவாகவும் சில கூத்துக்களில் பயன்பட்டுள்ளது.
* பதிகைக்கான மூலபாடம் : தேவசகாயம்பிள்ளை, பக்கம் - 60

## மெட்டு இலக்கம் - 45

**மெட்டு :- சங்கரா சிவசம்புவே**
**தாளம் :- ஆதி (திஸ்ர நடை)**

சங்கராசிவ சம்புவேயிவன் றன்னையேகொல்ல நண்ணியே
தான்துவக்கெடுத் தேமருந்துவைத் தடியடா அச்சா லிடியடா

பங்கமாகவே யிங்குள்ளோர்நசை பண்ணவேவகை நண்ணவே
பதறிடாமலே விதறியேலக்குப் பாரடாவெடி தீரடா

மந்தகத்தையே யொத்த வஞ்சகன் மடிந்துபோகவே
தடிந்துநாம்
வகையதாய்மன்னன் பகருசொற்படி மாட்டடாகுண்டால்
வாட்டடா

கைத்துவக்கதனால் வெடிவைக்கத் தைக்குதில்லையென்
செய்குவோம்
கந்தமாகிரி வந்ததேவனே களைக்குதேதுயர் விளைக்குதே

* இம்மெட்டின் இராகம் **சங்கராபரணம்**
* இதற்கு இருவேறுபட்ட மெட்டுக்கள் வெவ்வேறு இடங்களில் வழங்கப்பட்டு வருகிறது.
* பதிகைக்கான மூலபாடம் : தேவசகாயம்பிள்ளை, பக்கம் - 135



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெட்டு இலக்கம் - 46

**மெட்டு :- பாகுடன் பால்தேன்**
**தாளம் :- சதுஸ்ர ஏகம்**

*பாகுடன் பால் தேன் பொழி பாஞ்சால மாநகர்*
*ஆளும் பார்த்திபன் கோட்டையை முற்றுப் பண்ணவே யுன்னி*
*காலனைப் போல் ஆங்கிலேய காடையர் படை - வைகு*
*காரணத்தை மன்னனுக்கு ஓதவே செல்வேன்*

*சிங்கேறுவாம் ஊமைத்துரை வெள்ளைத் தேவனும்*
*பிள்ளை சேதிமம் போனாரே இவ் வேளை தன்னிலே*
*அங்கவர் தான் நின்றால் பகு அண்மையாகுமே - அதை*
*அரசனுக்கு அதி சணமே ஓதவே செல்வேன்*

✶ இம்மெட்டு சிந்துபைரவி இராக சாயலை அடிப்படையாகக் கொண்டது.
✶ இக்கூத்து மெட்டு பாஷையூர் பகுதியிலேயே அதிகம் வழக்கில் உள்ளது.
✶ பதிகைக்கான மூலபாடம் : வீரபாண்டிய கட்டப்பொம்மன், பக்கம் -55

# (ஓ) சாம்புவன் தருக்கள்

கூத்துக்களில் முரசறிந்து செய்தி சொல்லும் பாத்திரம், 'சாம்புவன்' அல்லது 'பறையன்' அல்லது 'ஆண்டே' என்ற பெயர்களில் அழைக்கப்பட்டு வருகின்றது. இப்பாத்திரத்திற்குரிய வரவுத் தருக்களும், முரசறைந்து செய்தி சொல்லும் தருக்களும் இப்பகுதியில் அடங்குகின்றன.

## மெட்டு இலக்கம் - 47

**மெட்டு :- சொல்வேன் சொல்வேன்**
**மூலமெட்டு :- வந்தேன் நானாண்டே**
**தாளம் :- சதுஸ்ர ஏகம் (மிஸ்ர நடை)**

*சொல்வேன் சொல்வேன் நானாண்டே - எந்தன்*
*சொந்தத் தொழிலது தானாண்டே*
*நில்லேன், நில்லேன் நீயாண்டே - இந்த*
*நிருப வாசகம் கேளாண்டே*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறங்கியர் கரவுடன் வந்தாச்சு - எம்தன்
பசுக்கள் ஆடுகள் சந்தாச்சே
இறந்தவர் எல்லாம் வெந்தாச்சே - வீர
இளைஞர் தலைகளும் பந்தாச்சே

தெருக்கள் அருகில் கூடிடுவீர் - நீங்கள்
தெள்ளு தமிழினில் பாடிடுவீர்
தருக்கள் இசைத்துமே ஆடிடுவீர் - மன்னன்
தலைதனில் மாலைகள் சூடிடுவீர்

* இம்மெட்டின் இராகம் சங்கராபரணம்.
* கட்டியகாரரர் தருவாகவும் சில கூத்துக்களில் இம்மெட்டு பயன்படுத்தப் பட்டுள்ளது.
* பதிகைக்கான மூலபாடம் : வித்துக்கள், பக்கம் - 01

## மெட்டு இலக்கம் - 48

**மெட்டு :- பூண்டேன் சிரநமஸ்காரம்**

**தாளம் :- சதுஸ்ர ஏகம் (மிஸ்ர நடை)**

பூண்டேன் சிரநமஸ்காரம் - எங்கள்
புதிய அரசின் புதினம் விஸ்தாரம்
ஆண்ட நிலபுல தூரம் - உள்ள
ஆடுமாடெல்லாம் அவர்க்காம் கொடூரம்.

துன்னும் விளை பயிர் தோட்டம் - உள்ள
சொத்தெல்லாம் எங்கள் அரசனிீட்டம்
பொன்னின் மணிபல தேட்டம் - யாவும்
பொருத்த மகிபன் பதத்தினிற் கூட்டும்

அறந்தப்பா மன்னவன் தன்னைப் - போற்றா
தவனியில் இருப்பதற்காகுமோ பின்னை
பிறந்தகைக் குழந்தைகள் தன்னை - நீவிர்
பிரியமா யொப்பிப்பீர் தவிசது முன்னே.

கன்னியர் பொதுச் சொத்தாய்க் கொண்டே - இங்கு
கருத்துற்றோர் கலந்திடத் தடையில்லை கண்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னிய வுத்தியோக மொன்றே - அது
மன்னரின் விதிப்பிரகாரந் தானாண்டே.

- ✶ இம்மெட்டு சக்கரவாகம் இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டது.
- ✶ சாம்புவன் மட்டுமன்றி, தூதுவன் போன்ற பாத்திரங்களுக்கும் இத்தரு பயன் படுத்தப்பட்டுள்ளது.
- ✶ பதிகைக்கான மூலபாடம் : விசய மனோகரன், பக்கம் 27

## மெட்டு இலக்கம் - 49

**மெட்டு :- வாரும் நண்பரே**
**தாளம் :- சதுஸ்ர ஏகம்**

வாரும் நண்பரே களியாட இது தருணம்
வளமான தொப்பி போட்டு உளமெல்லாம் ஆடிக்காட்டி

அரக்கை உரக்க உண்டு அபினும் கஞ்சாவும் திண்டு
ஆடியே பண்கள் பாடி அவையுள்ளோர் முன்பே கூடி

விறண்டி விசிக்கி ஜின்னும் வேமத்து பீர்ஸ்டவுட்டும்
திடம்படவே குடித்து தித்திமி போடுவமே

தத்துமி தத்துமியென மத்தளம் கைத்தாளம் வீணை
தாம் தாம் என ஒலிக்க தையலவர் பாட்டிசைக்க

- ✶ இம்மெட்டு சாருகேசி இராகத்தை அடிப்படையாகக் கொண்டது.
- ✶ சில கூத்துக்களில் உரையாடல் தருவாகவும் பயன்பட்டுள்ளது.
- ✶ பாஷையூர் பகுதியிலேயே இம்மெட்டு பெருவழக்காய் வழங்கி வருகிறது.
- ✶ பதிகைக்கான மூலபாடம் : வீரபாண்டிய கட்டப்பொம்மன், பக்கம் - 48



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டு வளப்பம்

## (தேசவிசாரணை பாடல் மெட்டுக்கள்)

பெரும்பாலும் கூத்துக்களில் அரச பிரதானிகளின் வரவின் பின் அரசன், மந்திரி, சேனாதிபதியுடன் நாட்டு வளம் அறிவதற்கான உரையாடலை மேற்கொள்வான். அரசன் - மந்திரி - தளபதி ஆகிய மூவரும் இந்த உரையாடலில் பங்கு கொள்வர். இவ்வுரையாடல்களுக்கென தனித்துவமான சில பாடல் மெட்டுக்கள் தென்மோடிக் கூத்துக்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வகைத் தருக்கள் இப்பகுதியில் இணைக்கப்பட்டுள்ளன.

### மெட்டு இலக்கம் - 50

மெட்டு :- **சுந்தர இந்தரை**
**தாளம் :- சதுஸ்ர ஏகம் (மிஸ்ர நடை)**

*அரசன் :*

*சுந்தர இந்தரை விந்தையாய் வாளும்*
*சுகுண நல் மந்திரியே கேளிப்போ*
*இந்த நல்லூரரை விட்டே பிறதேசமே*
*ஏகிடச் சிந்தை கொண்டேன் துயர் போக்க*

*மந்திரி :*

கோனே நீர் போவதுமேனோ புவியோர்கள்
கொள்வாரே சிந்தை நொந்தே என்னாளுமே
ஆனதினாற் செயராசனே புவிற்கு
ஆர் மண மாயிருப்பீர் நீங்காதே

*அரசன் :*

யோகஞ்செறி சிங்கபாகு மரணத்தால்
ஆகுலங்கொண்டதினால் இப்போதே
ஏக சிவனடி பாதத்தை எண்ணியே
இன்றே யான் சிந்தை கொண்டே செல்வேனே

✶ இம்மெட்டின் இராகம் **சங்கராபரணம்**

✶ இப்பாடல் மெட்டு நந்தவனப் பாடலாகவும் பல கூத்துக்களில் பயன்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுள்ளது.

✱ பதிகைக்கான மூலபாடம் : சங்கிலியன்

## மெட்டு இலக்கம் - 51

**மெட்டு :- இங்கிர் தலங்கிர்த**
**மூலமெட்டு :- அப்பனே அப்பனே**
**தாளம் :- சதுஸ்ர ஏகம் (மிஸ்ரநடை)**

***இராசா:***

இங்கிர் தலங்கிர்த வசன போஷ
என்னுடை மந்திரி யுரையென்தேச
மங்கள வளமைக ளறியவிப்போ
மாட்சியாய்ச் சொல்லுவீர் மகிழ நானே

***மந்திரி:***

மகிழவே சொல்லுவேன் முகிலின்னாரம்
வருஷித்த லிடியோடு ஆரவாரம்
கமழ்வயல் சென்னலே கன்னல் போலே
காட்டியே வளர்த்திடும் இமயமேலே

***இராசா:***

இமய வெற்பென்றீரே மகாசந்தோசம்
எழிலார் நாரியர்கற்பின் னரும்விசேசம்
அமைவுறப் பெருமையாய் காக்கின்றாரா
அமலன்றன் திருவடி நோக்கின்றாரா

***மந்திரி:***

நோக்கலோ அரசேறே கற்பார் மாட்சி
நுவலுதற்கவர்சேமந் தானே சாட்சி
பாக்கியந் நாரியர் கற்பினாலே
பரிசுத்த செபதப பொற்பினாலே

***இராசா:***

பொற்புறு மந்திரி தேவசேவை
புரிவாரோ துதிப்பாரோ மகிழநாவை
நற்றிருப்பூசைகள் புரிகின்றாரோ
நயமேவுதுதிமலர் சொரிகின்றாரோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மந்திரி:*

சொரிவாரே துதிமாரி மன்னர்கோவே
சோபிதமுறவானோர் மகிழப்பாவே
எரிவாயின் அலகைசேர தனையிங்கில்லை
இவைகளாலுன்தேசம் வானின்னெல்லை

✶ இம்மெட்டு **கீரவாணி** இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டது.

✶ பதிகைக்கான மூலபாடம் : எஸ்தாக்கியார், பக்கம் - 06

## மெட்டு இலக்கம் - 52

**மெட்டு :- சந்திர நேர் முகத்தானே**

**தாளம் :- சதுஸ்ர ஏகம்**

*இராசா :*

சந்திரநேர் முகத்தானே - வயந்
தங்கிவள ரகத்தானே - இந்தத்
தாரணிதனிலென்றும் சீரணிமதியொன்று
சாற்றக்கேள்மிகத்தானே

*கற்பி :*

மந்தரநேர் புயத்தானே - திரு
மருவுமதி சயத்தானே - யுன்றன்
மனத்திலுவப்புற நினைத்ததென்னக்கிப்போ
வழுத்திடுமுயத்தானே

*இராசா:*

மாற்றலர்கள் வாராமற் - கள்ள
வண்டர்மிண்டர் சேராமல் - இந்த
மாநகரடங்கலுந் தாரணிக் குறுங்காவல்
வைத்திடுஞ் சோராமல்

*கற்பி:*

சீற்றிரியே றெனுமரசே - பல
தேசர்க்கதி பதிசிரசே - நீரும்
செப்பியபடிமன மொப்பியேமிகுகாவல்
செய்திடுவேனரசே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✶ இம்மெட்டின் இராகம் சங்கராபரணம்

✶ இம்மெட்டு சில கூத்துகளில் உரையாடல் தருவாகவும் பயன்படுத்தப் பட்டுள்ளது.

✶ பதிகைக்கான மூலபாடம் : தேவசகாயம்பிள்ளை, பக்கம் - 14

## மெட்டு இலக்கம் - 53

**மெட்டு :- சரணமென்றோதிய**

**மூலமெட்டு :- மிண்டமர்**

**தாளம் :- சதுஸ்ர ஏகம் (மிஸ்ர சடை)**

***இராசா:***

*சரணமென்றோதிய ரணகளவெற்றியின்*
*வாகையா - எந்தன்*
*சதுரங்க சேனையின் அதிதுங்க நிரையோது ஓகையா*

***பிலா:***

*ஓகைப்பிரதாபாவுன் சேனைகள் சிங்கேறின்*
*முன்னவே - சொல்லின்*
*ஒன்னலர் அங்கங்கள் பின்னதாய்ச் செய்திடு மென்னவே*

***இராசா:***

*எண்ணெட்டிலாறும் பதினாலுஞ் சூழுங்*
*கடலிலே -இப்போ*
*தண்ணெட்டைச் சூழக்கெடுப்பாய் பகைவர்கை படலிலே*

***பிலா:***

*கைப்பட்டாருயிர் போக்கி அங்கங்கள் பேய்*
*நரியுண்ணவே - செய்து*
*மெய்ப்பட்ட கீர்த்தியை என்றுந்நிலைவைப்பேனெண்ணவே*

***இராசா:***

*எண்ணப்படாக் கப்பல் சேனைபலத்துடை*
*காரியம் - புகழ்*
*என்றுந் நிலைபெறக் குன்றா மலைநேரோ வீரியம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிலா :

வீரப்பிரதாபாவுன் சேனைகள்போல்
வீரரில்லையே - எதிர்
மேவினோர் உயிர்களை எமலோகம்
விளைவிப்பர் தொல்லையே

✶ இம்மெட்டு **சங்கராபரணம்** இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டது.

✶ பதிகைக்கான மூலபாடம் : எஸ்தாக்கியார், பக்கம் - 10

## மெட்டு இலக்கம் - 54

**மெட்டு :- ஏடாகிய பதுமாமணி**
**தாளம் :- ரூபகம்**

ஏடாகியபதுமாமணி யிலங்குந்திருமுடியே - உன
திந்தமாநக ரந்தமேவிய விந்தைகேளுரைப்படியே

மோடாகியதரளஞ்சொரி முகிலானதுஓடிக் - கரு
முந்நீர்களை யுண்டேயென்றும் நன்னீர் தருங்கூடி

கன்னலிற்சென்னெல் தூங்குஞ்செழுங் களைபோலவே
யோங்கும் - நிறை
கதிரானது வாங்கும் விளைகனமே கொண்டு தாங்கும்

பொன்னினாடெனத் தேங்கும் பலபொல்லாவினைநீங்கும் -
பெரும்
புண்ணியமெனும் பாங்குங்கொண்டு புகழானதுன்னாடே

பஞ்சின்மென்சிறைஞ்சுகங் கஞ்சப்பள்ளிமேனிதந்துஞ்சும் -
தாலம்
பாடுதேனிசைமிஞ்சும் பெடைப்பாலோடே சேவல்கொஞ்சும்

எஞ்சலில்நிலமஞ்சும் உறுமஞ்சதாம்பொருள் விஞ்சும் - கரு
மிரவாகியதஞ்சும் மனக்கரவானது கெஞ்சும்

✶ இம்மெட்டு **கீரவாணி** இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டது.
✶ பதிகைக்கான மூலபாடம் : தேவசகாயம்பிள்ளை, பக்கம் - 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெட்டு இலக்கம் - 55

**மெட்டு :- கலைமதி நிகரான**
**மூலமெட்டு :- பூவும் வானதும்**
**தாளம் :- சதுஸ்ர ஏகம் (மிஸ்ர நடை)**

***இராசா :***

*கலைமதி நிகரான எழில்முக*
*காந்திசேர் மதிப்பாந்தானேபூவில்*
*நிலையுறு வளமான தறிந்து*
*நிகழ்த்திடாயே விரித்தெனக்கிப்போ*

***மந்திரி :***

*அலைசெறி நிரை யாழியே சூழு*
*மழ குடாநாட்டுக்கதிபா சொற்கேளும்*
*இலகொளி ரெளிருந்தை நன்நாட்டின்*
*நிலவு மாவளம் நானுரைப்பேனறி*

***இராசா :***

*ஒளிசெறி மணியார் புயமேவிய*
*ஒப்பிலா மதிமந்திரி மேகம்*
*பொழிதரு மணியாகுநற் செந்நெல்*
*பொலிந்து மோங் கிறதா புகல்வாயே*

***மந்திரி :***

*தாரதி ரொளி யாரமணி செறிய*
*தன்பணை நகரொண்ணரசே - நிதம்*
*காரது சொரிந் தூறிக் களம் விளை*
*போரெனப் பொலிந்தோங்குமுன் நாடே*

★ இம்மெட்டு நடபைரவி இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டது.
★ பதிகைக்கான மூலபாடம் : மரியதாசன், பக்கம் - 07

## மெட்டு இலக்கம் - 56

**மெட்டு :- வெற்புயம் விளங்குமணி**
**மூலமெட்டு :- சற்குண இராசகுல தையலே**

200519



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாளம் :- சதுஸ்ர ஏகம்

வெற்புயம் விளங்குமணிக் கத்தனே - விள்ளீர்
விந்தைசேர் விறலணியென் சிந்தையே

பொற்புயம் புகழ்நிறுநற் பூபனே - வாகை
பொங்குமுன் படைசேமம் துங்கனே

கணிதங்கொள் கரைதுறைகள் நாட்டியே - இப்போ
காத்திடாய் நகரமெங்கும் சீர்த்தியே

அணிதங்கும் படைதிசைகள் நாட்டியே - அஞ்சார்
துஞ்சவே அமர்தொடுப்பேன் மிஞ்சவே

நற்றளம் கோட்டை முற்றும் பாட்டையே - நனி
கொண்டுமே காத்திடுவீ ரென்றுமே

கொத்தளம் பத்திரங்கள் சித்தமே - ஒன்னார்
கொள்மதம் மாற்றிடுவே னுன்னிதம்

- ✶ இம்மெட்டின் இராகம் நடபைரவி
- ✶ நாட்டு வளப்பத்திற்கு மட்டுமன்றி வேறு உரையாடல் தருக்களாகவும் இம் மெட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது.
- ✶ பதிகைக்கான மூலபாடம் : மரியதாசன், பக்கம் - 11

## மெட்டு இலக்கம் - 57

**மெட்டு :- நீசனா மென்**

**தாளம் :- ரூபகம்**

பரநிரு :

நீசனா மென் சோதரனால் - நெஞ்சமையோ
அஞ்சுகுதே - ஏங்கி - சுப
நித்திய கத்தனைத் துத்தியஞ் செய்திடா
அத்மிடுக்கினால் இத்தனை ஓர்மமோ மந்திரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பரநிரு :**

துட்டரையும் இட்டரெனத்
　　　　தொல்புவியில் சேர்த்திடலாம் மதியால்
அந்தச் சுகுண சம்சாரமே மதுர மெய் ஞானத்தை
　　　　சொர்ண மாய்க் காத்திடில் ஞானக் கண்ணாடிய தாமே

✶ இம்மெட்டு நீலாம்பரி இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டது.

✶ பதிகைக்கான மூலபாடம் : சங்கிலியன்.

## மெட்டு இலக்கம் - 58

**மெட்டு :- நாட்டு மக்கள் நலம் பெறவே**
**மூலமெட்டு :- மன்னனெந்தன் நகர்வளம்**
**தாளம் :- சதுஸ்ர ஏகம் (திஸ்ரநடை)**

**மன்னன் :**

நாட்டு மக்கள் நலம் பெறவே
　　　　நல வழிகள் கூறீர் - எந்தன்
நல்மதி மந்திரி சேனைகள் காவலா
　　　　நயம் பெறவே நவில்வீர்

**மந்திரி :**

மன்னுங் கல்விக் கலையகங்கள்
　　　　மாண்புடனே நிறுவீர் - நல்ல
மாபர னார்தமக் காலய மெங்கெங்கும்
　　　　மருவிடவே புரிவீர்

**தளபதி :**

துட்டர் வந்தே நகர் புகுந்து
　　　　துணிவுடனே சேதம் - செய்யில்
தாமதமேதுமில்லாதவர் ஓடிடத்
　　　　தகுபடை தான் அமைப்போம்.

**மன்னன்:**

எந்தன் மந்திரி தளபதிகள்
　　　　எனக்கிதமே சொன்ன - இந்த
ஏதமில் மேதகு யோசனை தன்னுடன்
　　　　எதுவுளதோ இன்னும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மந்திரி :*

மன்னா இந்த நகர மக்கள்
மகிழ்வுடனே உண்ணும் - ருசி
மேவிடுங் காய்கனி தானியம் யாவுமே
மலிந்திடவே பண்ணும்

✶ இம்மெட்டு கீரவாணி இராகத்தின் சாயுலை அடிப்படையாகக் கொண்டது.

✶ பதிகைக்கான மூலபாடம் : மனம் போல் மாங்கல்யம், பக்கம் - 08

## மெட்டு இலக்கம் - 59

**மெட்டு :- மாற்றருஞ்சீர்**
**தாளம் :- ரூபகம்**

*பிராமணன்:*

மாற்றருஞ்சீர் மணிமகுட - அரசன்
மந்திரியே இந்தரையில் வந்தோர் நவம் வழங்குதையா

*மந்திரி:*

தோற்றமுடன் நாற்றிசையும் - துதிக்கும்
சோதிடரே பேதமின்றி ஓதிடுமிப் போதெனக்கே

*பிராமணன்:*

ஏற்றமுற்ற நின்பேருஞ் - சிறப்பும்
இன்றுடனே பொன்றினதென் னென்றுசெல்வோ முன்றனக்கே

*மந்திரி:*

ஆற்றரிதாஞ் சீற்றமெழ - மனதில்
அதனமதாய்விதனமுறும் புதினமென்னோ சொல்வீரே

✶ இம்மெட்டின் இராகம் சங்கராபரணம்

✶ வேறு உரையாடல்களுக்கும் இத்தரு பயன்படுத்தப்பட்டுள்ளது.

✶ பதிகைக்கான மூலபாடம் : தேவசகாயம்பிள்ளை, பக்கம் - 48



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரையாடல் தருக்கள்

கூத்துக்களில் பாத்திரங்களுக்கிடையிலான ஊடாட்டத்திற்கு உரையாடல்களே பிரதானமானவை. கூத்துக்களில் இவ்வுரையாடல்கள் பாடல்களிலேயே அமைந்துள்ளன. கத்தோலிக்க கூத்துக்களில், பல்வேறு தருக்கள், வேறுபட்ட மெட்டுக்களில் உரையாடல் தருக்களாக வழங்கி வருகின்றன. அவ்வகை உரையாடல் தருக்கள் இப்பகுதியில் தொகுக்கப்பட்டுள்ளன.

## மெட்டு இலக்கம் - 60

**மெட்டு :- ஆச்சிகனி வாச்சி**
**மூலமெட்டு :- அன்னமே**
**தாளம் :- சதுஸ்ர ஏகம்**

***அகப்பீஸ் :***

*ஆச்சிகனி வாச்சியுந்தன் பேச்சைவிட்டு*
*நாங்கள்பிரி வோமோ - உந்தன்*
*அன்பின்மொழி யெங்களுக்கு*
*இன்பரச மாகுமல்லோ தாயே*

***தெயோ :***

*பூவிலும்மை யான்பிரிய பாவியென்ன*
*பாவஞ்செய்தே னறியேன் - பெற்ற*
*பொன்வயிறே யேங்குகுதே*
*இன்னல்கள்மி கவேயாகிப் பூமேல்*

***ஒப்பீஸ் :***

*ஏக்கமேத ணியும்மோட்ச*
*பாக்கியசெள பாக்கியமே கூடும் - அத்தால்*
*எல்லையில்லா நன்மையெல்லாம்*
*சொல்லமுடி யாதேவந்து கூடும்*

***தெயோ :***

*தந்தையாரு டனேயேகி*
*விந்தைபொன் சேகரித்தாகி நீரே - என்னை*
*மீட்டிடு மானந்தகீதம்*
*நாட்டிடும்ப ரமவாசல் நீரே*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ இம்மெட்டின் இராகம் சிந்துபைரவி

★ பதிகைக்கான மூலபாடம் : எஸ்தாக்கியார், பக்கம் - 68

## மெட்டு இலக்கம் - 61

**மெட்டு :- வந்ததிந்த மாய மென்னோ**

**தாளம் :- சதுஸ்ர ஏகம்**

### கொச்சகம்

***நீலகண்டன் :***

*பந்தமிகுந் தண்கலைபரப்பிப் பாராரலையின் மீதெழுந்த*
*அந்தமிகுஞ் சந்திரோதயம்போ லாரார்புகழு மார்க்கமெல்லாம்*
*பிந்தமிகுந்தபிரதமையின் பின்னாள்மதிபோலின்னலுற*

### தரு

*வந்ததிந்தமாய மென்னென்னோ - மனதுநொந்து*
*மாற்றருந்து யரமிப்போ ஆற்றிலேன் மின்னே*
*கொந்தலர் குசேசயப்பெண்ணே - ஒய்யாரவன்னக்*
*கோமள மழலையஞ்சொற் கோகுலமின்னே*

### கொச்சகம்

***மனைவி :***

*பட்டிலட்சகோடி பதுமமணிமுக்கோடி*
*எட்டிலட்சகோடியுட னீராறிரண்டிலட்சம்*
*வட்டில் கதிரைபல வாங்குடனே தூங்குமஞ்சம்*

### தரு

*கட்டில்கோடி யுண்டிம்மட்டுமோ - பால்போலுமிளங்*
*கன்றுடன் பசுவெவ்வள வென்றுசொல்லுவேன்*
*கொட்டில் பிள்ளைத் தொட்டில்முதலாய் - அழிந்தசெல்வங்*
*கோடிகோடி யண்டியின்னுங் கூடுமோஐயோ*

★ இம்மெட்டு **சிந்துபைரவி** இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டது.

★ கொச்சகத்துடன் இணைந்து வருவதனால் இத்தரு கொச்சகத்தரு என்றும் அழைக்கப்படுகிறது.

★ இத்தரு சிறிய மாற்றங்களுடன் நந்தவனப் பாடலாகவும் பாடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✶ பதிகைக்கான மூலபாடம் : தேவசாகயம்பிள்ளை, பக்கம் - 16

## மெட்டு இலக்கம் - 62

**மெட்டு :- ஆவியுடல தொன்றே**
**மூலமெட்டு :- முறையல்ல**
**தாளம் :- மிஸ்ரசாப்பு**

***பிலா :***

ஆவியுடல தொன்றே - பொருந்திய
ஆக்கைபோல் வாழ்க்கைநன்றே - என்னும்படி
ஆசைப்பூ நானானேன் வாசம் நீயதேயானாய்
ஆனந்தகுருபத மன்பாய்ச் செல்வோமே

***பெண் :***

சந்ரோதயச் சுந்தரா - மாதென் மனோ
தமன்யாசனத்தின் தீரா - உமதரும்
தர்மவாக்குரை கன்னல் சர்க்கரை
என்னவித்திரை தானேற்றே வாறேன்

***மூ.பிள் :***

காசினி மீதினிலெனைப் பெற்றோர்களே
கண்முன் அறிதெய்வமே - மெய்யாய்நீதி
கற்பிதஉரை சொற்றவறாது
நற்பணி பூண்டு நானும் வாறேனே

***இ.பி ள்:***

அப்பரே ஆச்சியண்ணே - நானும்வர
லாகாதோ உங்கள் பின்னே - எனைக்கூட்டி
ஆடல் பாடல் சங்கீத நல்விளை
யாடல் கூட்டத்தை நாடச்செய்வீரே

✶ இம்மெட்டு **சிந்துபைரவி** இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டது.
✶ பதிகைக்கான மூலபாடம் : எஸ்தாக்கியார், பக்கம் - 31


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெட்டு இலக்கம் - 63

மெட்டு :- **சித்திரானந்தா**
**தாளம்** :- **சதுஸ்ர ஏகம்**

*பரராசா:*

சித்திரா னந்த மா னேத்திரப் புத்திரா. உன்
துடுக்காத்திரச்
செய்கையினாலித்தொல்லை நேர்ந்தனை அவயன்றித்
தேரும்ராச கோனேதேனே

***சங்கிலியன்:***

தத்துவராசேந்ரபூபாவுன் புத்திரநானிருக்கையில்
தஞ்சமாயிவன் பாதம் கெஞ்சிடுவேனோநானும்
தந்தையாரே நிந்தையீதே

*பரராசா:*

சொற்கேளாப் பிள்ளையால்
வரும்பழி யிற்காளாய்க்குலமெலாமழி வறி
தோன்றுமுரைக்கு நீயே - ஆன்றமாசாட்சியானாய்
சொல்லியென்னோ - புல்லரானோம்

✶ இம்மெட்டு **சங்கராபரணம், ஹரிஹாம்போதி** இராகங்களின் கலப்பாக உள்ளது.

✶ பதிகைக்கான மூலபாடம் :- **சங்கிலியன்**

## மெட்டு இலக்கம் - 64

மெட்டு :- **இங்கெம்மை நாடியே**
**தாளம்** :- **சதுஸ்ர ஏகம்**

*பரநிரு:*

இங்கெமை நாட்டியே வந்துரையாடிய
ஏற்ற குலமணியே சங்கிலியரே
இல்லாதுபோகவே வல்லாண்டமையாகவே
சொல்வீர் உபாயமதே இப்போது தானிங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***தளபதி:***

*எந்தன் பொன்ராசனார் உந்தனின் கடிதத்தை*
*ஏற்று வாசித்துவகை கொண்டேதுரிதமாய்*
*ஏகுமாறேயுரைத்தார் வேகமதாக வந்தோம்*
*இசையு நற்படையுடனே அன்பரே நானே*

***வன்னி:***

*தேடிய பூடவன் தன் காலதில்பட்டதன்மை*
*சேர்ந்த துன்வரவினாலே எங்களின் நோக்கம்*
*சித்தா சனற்கனைய உத்தம சற்குணனே*
*சிந்தை திடம் பெறுவீர் நாமே யாம் துணை*

✶ இம்மெட்டு **சிந்துபைரவி** இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டது.
✶ பதிகைக்கான மூலபாடம் : சங்கிலியன்

## மெட்டு இலக்கம் - 65

**மெட்டு :- எந்தன் சேனா நாயகமே**
**மூலமெட்டு :- எந்தன்மதி**
**தாளம் :- சதுஸ்ர ஏகம்**

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

***இராசா :***

*எந்தன் சேனா நாயகமே - உனக்*
*குக்கேடோ வரச் செகமே*

***எஸ்தாக்கி :***

*தங்கரெத்ன முடியார்கோனே - இந்தக்*
*தரணி வாழ்வு மின்னல் தானே*

***இராசா :***

*மெய்யப்பத்ர விசித்ரம் போச்சோ - உயர்*
*மேன்மை கீழ்மையாக வார்சோ*

***எஸ்தாக்கி :***

*காலகோலமிந்தர சாலம் - என்னுங்*
*கருத்துக்கானே ணிந்தத் தாலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இராசா:*

*எம்பரனார் சித்தந் தன்னை - மீற*
*எவராலாகுந் துயர்தர னென்ன*

*எஸ்தாக்கி :*

*தரங்கரிய துயர்கள் போமோ - சோக*
*சாகரத்துக் களவுண் டாமோ*

✶ இம்மெட்டின் இராகம் நீலாம்பரி.
✶ பதிகைக்கான மூலபாடம் : எஸ்தாக்கியார், பக்கம் - 127

## மெட்டு இலக்கம் - 66

**மெட்டு :- வண்டலம்பூங்குழல்சரிய**
**தாளம் :- சதுஸ்ர ஏகம்**

*தேவகசாயன் :*

*வண்டலம்பூங்குழல்சரிய - வாச*
*மலரெனுந்தாமரைகரியக்*
*கண்டலங்கண்ணீர்சொரிய - வந்த*
*கன்னிகையேகலங்காதே*

*மனைவி :*

*மருக்கருக்கி முடித்தாரே - உன்றன்*
*வடிவமெங்கும் அடித்தாரோ*
*திருக்கரத்தில் பிடித்தாரோ - அந்தத்*
*தேர்வேந்தன் சேவகர்கள்*

*தேவசாகயன் :*

*மாவிலுறைகோகுலமே - மிக்க*
*வரிசைபெறுமாகுலமே*
*தாவிநிறையாகுலமே - கொண்டு*
*தார்குழலேசலியாதே*

*மனைவி :*

*செல்லமுகம்வேறுபட - மிகு*
*செங்குருதியாறுபட*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லமிர் தம்மாறுபட - வந்த
துன்பமென்னோ என் கணவா

**தேவசகாயன் :**

புல்லணையிலேபடுத்தார் - அன்று
புயத்திலொருகுருசெடுத்தார்
வல்லபரனுயிர் விடுத்தார் - மானே
மானிடர்க்காயறியீரோ

**மனைவி :**

ஒளியிருக்கவிழிபோமோ - சொல்லும்
உயிரிருக்கவுடல்போமோ
அளியிருக்குந்தார்புயனே - உன்னை
யன்றியின்றுபோகேனே.

✶ இம்மெட்டு சிந்துபைரவி இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டது.
✶ பதிகைக்கான மூலபாடம் : தேவசகாயம்பிள்ளை, பக்கம் - 107

## மெட்டு இலக்கம் - 67

**மெட்டு :- வாராய் பைங்கிளியே**
**மூலமெட்டு :- ஆதிதற்பரனே**
**தாளம் :- மிஸ்ர சாபு**

**எஸ்தாக்கி :**

வாராய் பைங்கிளியே பரனார்திருநாமமே
சீராய்ப் போற்றிடவே - நயசித்ர
பத்தியெனுந் நற உத்த மலர் மண
சித்தம் வைத்துத்துதிக்க நாளுமே

**தே.யா :**

அன்பேயென்துரையே மதுரா கரமாகிய
இன்பேநேர் நிரையே - உமது சொல்லை
அற்புதப் பூ வெனச் சிரத்திலே
பொற்புறவணிந் தேயான் போற்றுவேன்

**அகப்பீஸ் :**

சந்திரோதயமே கண்டேனின்றே
மலருயர் குமுதம்போல் நான் நயமே - பரிவு கொண்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சச்சிதானந்த நிட்சயனெனும்
இச்சகத்தி லிரட்சநாதனை

*ஒப்பீஸ் :*

தேவநற்கிருபை எம்மேலே வந்த
சீரதேபெருமை அதற்கு நாங்கள்
திருவுரைப்படி பரமனைப்பணிந்
தரியசொர்க்கமே பெறலே தக்கதே

✶ இம்மெட்டு **சிந்துபைரவி** இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டது.
✶ பதிகைக்கான மூலபாடம் : எஸ்தாக்கியார், பக்கம் - 34

## மெட்டு இலக்கம் - 68

**மெட்டு :- பன்னீராசகுலம்**
**மூலமெட்டு :- கண்ணாரும்**
**தாளம் :- மிஸ்ரசாபு**

*அகப்பீஸ்:*

பன்னீரரசகுல பெரும்
பாக்கி சலாக்கிய சீரனமே
என்நேசத் தந்தையரைக் காண
ஈந்தருள் உந்தயை தான்தினமே

*ஒப்பீஸ்:*

அண்ணருந் தந்தையரும் போன
ஆகுல முன்னவியாகுலமே
எண்ணக் கண்ணீர்க்கடலே போல
ஏங்கிச்சொரியுதே என்னுடலே

*எஸ்தாக்கி:*

பெற்றோ விரைகொடுத்தேன் உம்மைப்
பேசருமோநாய் கடுவாயுண்ண
வற்றாச்சமுத்திரமே நேரு
மாகருணாகரா தாவருளே

✶ இம்மெட்டு **சிந்துபைரவி** இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டது.
✶ பதிகைக்கான மூலபாடம் : எஸ்தாக்கியார், பக்கம் - 91



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெட்டு இலக்கம் - 69

**மெட்டு :- அஞ்சுகமே**
**தாளம் :- சதுஸ்ர ஏகம்**

அஞ்சுகமே கிஞ்சுகச் சொல் லாளே - என
தாதர மிகுக்கவரு மாதரசேகேளும்
சொஞ்சுகத்தி னாஸ்தியான தெல்லாம் - நாளுந்
துட்டப்பசா சுக்கடிமைப் பட்டுக்கெட்டதாலே

அந்தமற்றுச் சிந்தைநொந்து வாடி - எம
தாக்கமெல்லா மீடழிய ஏக்கமுற்றுஓடி
வந்தலையும் வேளைதன்னி லேதான் - மிக்க
வாக்குறு சகாயமானமெஸ்ஸ- தாக்கியென்னைக்கண்டு

காலையல ருங்கமலம் போலே - எழில்
காட்டிடு மலர்ந்தமுக வாட்டரவுகண்டு
மாலைகுவியுங்கமல மாகி - யுள்ள
வண்மையெல்லா மென்றனுக்குத் திண்ணமாய்ச் சொல்
லென்றான்

பண்டார மாய்வளர்ந்து தேங்கும் - நானாவித
பாக்கியமெல் லாஞ்சும்மா போக்கியதல்லாமல்
உண்டான காரியங்க ளுடனே - நானும்
உள்ளதெல்லா மெள்ளளவும் கள்ளமின்றிச்சொன்னேன்

★ இம்மெட்டின் இராகம் ஹரிஹாம்போதி
★ பதிகைக்கான மூலபாடம் : தேவசகாயம்பிள்ளை, பக்கம் - 35

## மெட்டு இலக்கம் - 70

**மெட்டு :- கன்னி மின்னாளே**
**மூலமெட்டு :- கன்னல் வில்லானே**
**தாளம் :- மிஸ்ரசாபு**

***விசயன்:***

கன்னி மின்னாளே - கனிரசம்
உன்னு சொல்லாளே - உனக்குற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னல் தன்னாலே - பட்டேன்துயர்
ஈதென் கண்ணாளே

**ஞானம் :**

நீசர் கைப்பட்டு - வருந்திட
நேர்ந்ததே கெட்டு - ஒரு துணை
ஈசனார் விட்டு - எமைக்காத்த
ஈகை எம்மட்டு

**விசயன் :**

வஞ்சகர்கள் ஒப்பிச் - சென்றார்
உன்னைவாதுடன் அப்பி - அவர்கையில்
அஞ்சாது தப்பி - வருவிதம்
ஆற்று நீ செப்பி

**ஞானம் :**

கானகச் சோலை - தீயர்வசை
சாற்றுமக்காலை - அழகிய
வான்வன்போலே - யவர்வந்து
காத்தார் நல்வேளை

★ இம்மெட்டு சிந்துபைரவி இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டது.
★ பதிகைக்கான மூலபாடம் : விசயமனோகரன், பக்கம் - 74

## மெட்டு இலக்கம் - 71

**மெட்டு :- அன்னையே தந்தையே**
**மூலமெட்டு :- சொல்லவரும்**
**தாளம் :- சதுஸ்ர ஏகம் (மிஸ்ரநடை)**

**அகப்பீஸ் :**

அன்னையே தந்தையே உம்மையே
கண்டதானந்தமே - பூவில்
அன்புடைபேருக்கு என்றும்
பெற்றோர்நயஞ் சொந்தமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எஸ்தாக்கி :**

சோபிதலங்கார பாலரே
உமைமிருகத்தினால் - மீட்ட
தூயபரனுக்குத்
தோத்திரமானந்தஞ் செப்பினால்

**ஒப்பீஸ் :**

இடையரே ஓநாயால் எந்தனை
மீட்டாரென்தந்தையே - நன்மை
எய்திடுங் காலத்தில் யேசே
தயைசெய்வார் சிந்தையே

**தேயொ :**

நான் பெற்ற மக்களே
உங்களைக்கண்டதே பாக்கியம் - மோட்ச
நன்மையைக் கொள்ள
வழிதேடீரேயதே யோக்கியம்

✶ இம்மெட்டின் இராகம் நடபைரவி
✶ பதிகைக்கான மூலபாடம் : எஸ்தாக்கியார், பக்கம் - 158

## மெட்டு இலக்கம் - 72

**மெட்டு :- சொன்னபற்பனாதபுரம்**
**தாளம் :- மிஸ்ரசாபு**

**தேவ :**

சொன்னபற்ப னாதபுரதுரை ராசன்வன்மேந்த்ரமன்னன்
வன்மவுக்ர முடனழைத்தான் மட மானேநான்போய்வாறேன்

**மனைவி :**

மட்டளிக்கும் கட்டவிழ்ந்தார் - வன் மேந்த்ரனிம்மேந்திரமாய்
விட்டழைக்குங் கட்டளையைச்சற்றே விளம்பாயென்
மன்னவனே

**தேவ :**

வளைத்தவிந்தாய் முளைத்த அந்த - வன் மேந்திர னிம்மாந்
நிரமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்ததென்னோ விளைத்ததென்னோபழி யானதென்னோ
வறியேன்

*மனைவி :*

கொல்லுமதப் புல்லுவிதக் குடக் கோவேயுன்றன்பிறகே
நல்லமுதே செல்லரசே நா னும்வரவொண்ணாதோ

✶ இம்மெட்டின் இராகம் நடபைரவி

✶ பதிகைக்கான மூலபாடம் : தேவசகாயம்பிள்ளை, பக்கம் - 69

## மெட்டு இலக்கம் - 73

**மெட்டு :- தேங்கு புனல காட்டிடையே**
**மூலமெட்டு :- அஞ்சுகமே**
**தாளம் :- சதுஸ்ர ஏகம்**

**தேவ :**

தேங்கு புனல் காட்டிடையே நோக்கி - நல்ல
திருமரி நவமது குறையரிதே யதிப்
போதினிலே கைப்பலன் கண்டேனே

*தானா :*

ஊக்கு மனந் தூக்கு நிறைபோலே - என்னைத்
தேற்றியே நிறைமொழி சாற்றியே யுறுவழி
தெரித்ததயை கருத்தினில் மாறாதே.

**தேவ :**

அன்னைமரி யாலயத்தில் வைகும் - அருள்
குருவிடமதிதிற மருவிடு கதியுற
ஆட்சியுறு தீட்சைதனைப் பெறவே

*தானா :*

ஆதிசுத னைப்பயந்த தாயே - அவள்
அன்புறு மாலயம் இன்புடனேகியே
ஆகுலமெல் லாமகற்று வேனே.

✶ இம்மெட்டின் இராகம் சங்கராபரணம்

✶ பதிகைக்கான மூலபாடம் : மரியதாசன், பக்கம் - 41



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெட்டு இலக்கம் - 74

**மெட்டு :- செனமேவும் செங்கதிர்**
**மூலமெட்டு :- வரையாருங் குங்குமம்**
**தாளம் :- சதுஸ்ர ஏகம்**

***றோச :***

செக மேவும் செங்கதிர் நேர்
முகவலங்காரா - நீரும்
சீருறவே தானிருந்திடு
ஊரெது சிங்காரா

***ஒலான் :***

கனிசேரும் சொல்லமிர்த
தொனியலங்காரி - சொந்த
ஊரெதுவுமே தானெனக் கிலை
பாரிலே சிங்காரி

***சீலியா :***

வயமேவும் வாலிபர்கள்
துயரே கொள்ளாதே - என்றும்
ஒதருதுணை தேடியே வாழ்வார்
மேதகு மொய்யாரா

***ஒலான் :***

பேரூரில் லாதவரைப்
பெருமையாய் யாரும் - ஒன்றித்
தானுதவிட மனமது ஒப்பார்
மானேர் ஒய்யாரி

✶ இம்மெட்டின் இராகம் சங்கராபரணம்

✶ பதிகைக்கான மூலபாடம் : மனம் போல் மாங்கல்யம், பக்கம் - 28

## மெட்டு இலக்கம் - 75

**மெட்டு :- வாராய் என் வஞ்சகியே**

**தாளம் :- சதுஸ்ர ஏகம் (மிஸ்ரநடை)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மந் :*

வாராய் என் வஞ்சகியே எந்தன்
வாஞ்சை நிறை நேசச் சுந்தரியே
தீராயோ என் கவலை உன்னைத்
தேடி அலைந்திட்டேன் என் பிரியை

*வஞ் :*

பாரோர் புகழுந்துரையே உம்மைப்
பார்க்கவென்றே வரும் நோக்கமுடன்
நேரே எழுந்து வந்தேன் உந்தன்
நேசம் பெற இது தான் தருணம்

*மந் :*

உன்னை மதிப்பேனடி எந்தன்
உற்ற அகத்திலிருத்தி யென்றும்
கன்னல் மொழி மானே எந்தன்
கட்டளை தன்னை நீ தட்டிடாதே

*வஞ் :*

தேனே சுவைகரும்பே உயர்
தெள்ளமுதே நீரும் விள்ளுரையை
கோனார் உரையது போல் நானும்
கொண்டு பணி செய்வேன் விண்டிடுவீர்

✶ இம்மெட்டு சிந்துபைரவி இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டது.
✶ பதிகைக்கான மூலபாடம் : ஜெனோவா

## மெட்டு இலக்கம் - 76

**மெட்டு :- என்னவிச் சதிவந்தே**
**மூலமெட்டு :- கார்முகில்**
**தாளம் :- மிஸ்ரசாபு**

*விசய :*

என்ன விச் சதிவந்தே
இன்னல் படுத்துதே - தேவனே
மன்னனெம் முயிர்கெட
மாறாய் விதித்திடல் நீதியோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனோ :

சொந்த நகர் விட்டே
வந்தே யிதுபழி சிக்கியே - நானும்
பந்தப்படவுந்தன்
சிந்தைக் கருத்ததோ கத்தனே

விசய :

கன்னங்கடிய நெஞ்சன்
கருணைய தின்றியேதூறியே - கொல்ல
முன்னம் விதித்திட்டான்
மூர்க்கமதாகவே என செய்வேன்

மனோ :

நீதி நெறியற்றே
பாவி நினைந் தெமைக் கொல்லவே - தீர்வை
ஓதியெமைப் பொல்லாக்
காகதர்க் களித்திட வாச்சுதே

* இம்மெட்டு நடபைரவி இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டது. இதனை 'ஏணித்தரு' என்ற சிறப்புப் பெயருடனும் அழைப்பர்.
* கூத்தில் சோகத்தின் உச்சமாக அமையும் ஒரு பாடல் மெட்டாகவும் இதனை கொள்வர்.
* பதிகைக்கான மூலபாடம் : விசய மனோகரன், பக்கம் - 100

## மெட்டு இலக்கம் - 77

**மெட்டு :- கொன்னஞ் சேர்**
**மூலமெட்டு :- மெய்ப்பற்றாவது**
**தாளம் :- சதுஸ்ர ஏகம்**

கொன்னஞ்சேர் றோமை மன்னோர்
காத்திர ஆனகோத்திர
புனிதசேனாபதி ஆனதுரேந்திர புத்திரன்
நானல்லவோ இப்பாரின்மீதிலே

தன்சார்வொடு சென்றோம் மன்சார்
பிறநாடே கப்பலாதிபன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தருகடற்கலனது உறுசெயற்குயர் தாயர்*
*தமைமறித்தெமை விடுத்தார் கோரமாகவே*

*சிந்தின்நடுவிடை எந்தன்பிதாவேக*
*அப்போது தானுமே திரைமுகஇரையொடு*
*விரைவுடனொரு ஒநாய் கரைநின்ற*
*எனைப்பற்றியே கொண்டுஒடவே*

✶ இம்மெட்டு சங்கராபரணம், சிந்துபைரவி இராகங்களின் கலப்பாக உள்ளது.
✶ இதனைக் கொச்சக தருவாகவும் பாடுவர்.
✶ பதிகைக்கான மூலபாடம் : எஸ்தாக்கியார், பக்கம் - 143

## மெட்டு இலக்கம் - 78

**மெட்டு :- அன்பு உள்ளத் தந்தை**
**மூலமெட்டு :- எல்லையற்று**
**தாளம் :- சதுஸ்ர ஏகம்**

***றோசலின் :***

*அன்பு உள்ளத் தந்தை கானில் - ஐயோ*
*அலைந்து உழன்றாரோ வீணில்*
*இன்பதுற்ற எங்கள் வாழ்வே - ஈனர்*
*இடர்படுத்த லாலே வீழ்வே*

***சிலியா :***

*முத்துமன்பு கொண்டு காதல் - உற்ற*
*மாரன் இல்லை என்றால் சாதல்*
*இந்தமாய உலகம் வேண்டாம் - எந்தன்*
*இன்ன லென்றும் நீட வேண்டாம்*

***றோசலின் :***

*காலை தொட்டு அன்னம் தண்ணீர் - இன்றி*
*கவலையுற்று பொங்கு கண்ணீர்*
*மாலையென வழிவதேனோ - நீரும்*
*மனம் திறந்து கூறாதேனோ*

✶ இம்மெட்டு ஹரிகாம்போதி இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✶ பதிகைக்கான மூலபாடம் : மனம்போல் மாங்கல்யம், பக்கம் - 31

## மெட்டு இலக்கம் - 79

**மெட்டு :- ஆகமமாய்**
**தாளம் :- சதுஸ்ர ஏகம்**

***தேவசகாயம்பிள்ளை :***

*ஆகமமா யறிவினுள்ளறிவாய்*
*அருமறையாய்பப் பிறவிலதாகும்*
*ஏகசத்திய ஞானஉபதேசம்*
*யாம்பெறஎழுமானே*

***மனைவி :***

*பொன்னின்மணி யணிமகுடசேர்*
*புகழழகாகிய மதியாளா*
*என்னரசே யுன்மனதின்படி*
*யான்வருவேன் வருவீர்*

***தேவசகாயம்பிள்ளை :***

*வீசுசிறைப் பொறிமினுமினென*
*மெய்யொளிசேர் ஐயளிபாடும்*
*வாசநிறை மலரிடுகுழலே*
*வருவாய் குருவிடத்தே*

✶ இம்மெட்டின் இராகம் நீலாம்பரி
✶ பதிகைக்கான மூலபாடம் : தேவசகாயம்பிள்ளை, பக்கம் - 42

## மெட்டு இலக்கம் - 80

**மெட்டு :- இகழ்ந்துள்ளோர்கள்**
**தாளம் :- ரூபகம்**

***தேவ:***

*இகழ்ந்துள்ளோர்க ளெதிர்த்தகளத்திலே - புரமுஞ்சிரமும்*
*இடறவேல்தொட்டடரும்வேளையில் - புரமுஞ்சிரமும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழ்ந்துபோற்ற வாகைசூடிய - தோழனே ஒரு
புத்திநினைந்தென் சித்தத்துரைசெய்வாய் - தோழனே ஒரு

கற் :

ஈற்றில்வாழைத் தாற்றில்வாளைபாய்ந் - தூறுதேன் கனி
இளமென்சாலிப் பழனம்பரவியே - ஊறுதேன்கனி
ஆற்றில் வாவு பற்பனாபுரத் - தமைச்சனேயுன்
னவமதான நவமென்சொல்லுவாய் - அமைச்சனேயுன்

தேவ :

முந்தைநாளில் வந்தந்தணரையே - பழிக்கநானும்
முதன்மந்திரிக்கு மூட்டிச்சாட்டினார் - பழிக்கநானும்
அந்தவமைச்சன் சிந்தைவெகுளுற்றே - அரசற்குரைக்க
அரசன்நெருப்பி லரக்குப்போலுற்றான் - அரசற்குரைக்க

✶ இம்மெட்டின் இராகம் நடபைரவி
✶ பதிகைக்கான மூலபாடம் : தேவசகாயம்பிள்ளை,. பக்கம் - 63

## மெட்டு இலக்கம் :- 81

**மெட்டு :- செல்லுவோமே (கொச்சகத் தரு)**
**தாளம் :- சதுஸ்ர ஏகம்**

**பல்லவி**

செல்லுவோமே ஊரை விட்டே
செல்லுவோமே

**சரணம்**

வெல்லம் நிகர் உயர் மேன் மொழி செல்வியே
மேலாகப் பெற்றிட்டாய் கம்பனின் கல்வியே
எல்லையில்லா என் தவத்துப் புதல்வியே
இத்தரையோர் மேலாம் எழிலார் புதல்வியே

பேசாதிரு அந்த கள்வர் கூட்டமே
பிரளயமாக வருகுதே சேட்டமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசோதயமே நீ கொள்ளாதே வாட்டமே
மறைந்திருந்தே பார்ப்போம் என்னருள் தேட்டமே.

* இம்மெட்டு **சிந்துபைரவி** இராகத்தில் அமைந்துள்ளது.
* 'ஒடுது பாராய்' மெட்டின் சாயலை இம்மெட்டு கொண்டுள்ளது.
* கொச்சகத்துடன் இணைந்த கொச்சகத்தருவாகவும் இது பாடப்படுகிறது.
* பதிகைக்கான மூலபாடம் : கருங்குயில் குன்றத்துக் கொலை.

## மெட்டு இலக்கம் - 82

**மெட்டு :- காருண்யனே கதிர்காமா**
**தாளம் :- சதுஸ்ர ஏகம் (மிஸ்ரநடை)**

***பிரதிநிதி 1:***

காருண்யனே கதிர் காமா - என்ன
காலமோ இக்கொடுங் கோலனின் ஆட்சி
ஆர்முன்னமே இதைச் சொல்வோம் - இந்த
ஆகடிய கலி காலத்தை வெல்வோம்

***பிரதிநிதி 2:***

ஆதியில் நற்குணம் பூண்டு - நல்ல
அரசு புரிந்து அனைவர்க் குகந்து
போதினில் துர்க்குணம் பூண்டு - ஆளும்
போல்லாங்க னூர் விட்டேகுதல் நன்று

***பிரதிநிதி 3:***

ஒன்று பட்டாலுண்டு வாழ்வு - நம்முள்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு
அன்று அவையுள்ளோர் பேச்சு - மறு
அந்நியன் வந்து அரசாங்க மாச்சு

* இம்மெட்டின் இராகம் சங்கராபரணம்
* 'நொண்டிச்சிந்து' என்னும் கிராமிய மெட்டினையொத்தது.
* பதிகைக்கான மூலபாடம் : கண்டி அரசன், பக்கம் - 19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெட்டு இலக்கம் - 83

**மெட்டு :- மன்னவன் முன்**
**மூலமெட்டு :- ஆனையொன்று நான்தருவேன்**
**தாளம் :- சதுஸ்ர ஏகம்**

*ரஞ்சிதம்:*

மன்னவன்முன் போய்வருக வென்றன் முன்னமே சொல்
முன்னவளும்
இன்னும்வரக் காணலையே என்னவிடஞ்சல் வந்து
அடர்ந்ததுவோ

*கனகமணி :*

பிஞ்சுமதி ரஞ்சிதமே எந்தன் பிரியமுள்ள கிஞ்சுகமே!
சஞ்சலங்கள் கொள்ளாதீர் நேசச் சகோதரி வந்திடுவாளே

*ரஞ்சிதம் :*

சீவகாருண் யமறியா படுசீற்றமுள்ள மன்னவனும்
ஆவதென்ன சொன்னாலே என்ன ஆகடியம் செய்வானோ

*கனகமணி :*

பற்றுதல்சேர் நின்தமக்கை இன்னும் சற்றுப்பொறும் வந்திடுவாள்
உற்றதுயர் மறந்திடுமே மன உல்லாசமாய் வாழ்ந்திடுமே

✶ இம்மெட்டு ஹரிஹாம்போதி, ஹரஹரப்பிரியா போன்ற இராகங்களின் கலப்பாக அமைந்துள்ளது.
✶ பதிகைக்கான மூலபாடம் : கண்டி அரசன், பக்கம் - 60

## மெட்டு இலக்கம் - 84

**மெட்டு :- மன்னரே பாதகம்**
**தாளம் :- மிஸ்ரசாபு**

மன்னரே பாதகஞ் செய்ய வேண்டாம்
மாநிலம் தனில்வசை கொள்ள வேண்டாம்
உன்னரும் சிசுகாந்தி தோஷம் வேண்டாம்
உமக்கு நற்பதவியைத் தள்ள வேண்டாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்பழி தீராத பழிநீர் கண்டீர்
புலைஞர்போல் அகந்தையாம் மனது கொண்டீர்
துன்பமே கடவுளால் பெற்றுக் கொள்ளா
துரையேயென் வார்த்தையைத் தள்ள வேண்டாம்

முன்னெங்கள் நிலைமையை அறிந்து நீரும்
முதல்வனே சிசுகாந்தி செய்ய லாமோ?
பொன்போன்ற பாலருள் பாலர் போலே
பொறுத்திட்டால் புண்ணியப்பேற தாமே

✶ இம்மெட்டு **கீரவாணி** இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டது.
✶ பதிகைக்கான மூலபாடம் : கண்டி அரசன், பக்கம் - 96

## மெட்டு இலக்கம் - 85

**மெட்டு :- கருணைநிறை**
**தாளம் :- ரூபகம்**

***பிள்ளை:***

கருணைநிறை நிருபாதங்கள் காலைக்கும் பிட்டோமே
கட்டகத்தால் வெட்டாதையா கடவுளும் மைக்காப்பார்

***குமாரிகாமி:***

குழந்தைகள்மேல் மனமிரங்கும் கொற்றவா நின்பாதம்
கும்பிட்டேன்நான் விட்டுவிடும் கொலைசெய்யாது துரையே

***பிள்ளை:***

குற்றமென்ன செய்தோமையா கொடுஞ்சினமே னுமக்கே
பெற்றதந்தை முகத்தைக்காணா வெட்டிக் கொல்லலாமா!

***குமாரிகாமி:***

துரையேநீங்கள் கதறாதப்பா புரிவதொன்று மறியேன்
துடிக்குதடா என்வயிறு துடிக்குதென்ன செய்வோம்!

✶ இம்மெட்டின் இராகம் **சிந்துபைரவி**
✶ பதிகைக்கான மூலபாடம் : கண்டி அரசன், பக்கம் - 97



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெட்டு இலக்கம் - 86

**மெட்டு :- பொன்னில் சிறந்திடும்**
**தாளம் :- ரூபகம்**

***பரராசசேகரன் :***

பொன்னிற் சிறந்திடும் மின்னும் யாழ்ப்பாணமே
போகவிரைந்தெழுவீர் இதுசணம் போகவிரைந்தெழுவீர்

பொன்னிற் சிறந்திடு வன்னப் பொருளொடு
பொங்கு கடலுறு வங்கத்திலேறியே
வண்ண அழகார் நிதிதுறைகள் கண்டு,
மாட்சிப்பிரதாப மனோகரொல் காசமாய்

***பரநிருபன் :***

வானாட்சி கொண்ட மகாமுடிக்கோபுரம்,
மல்கிய செல்வழமார்தஞ்சாபுரம்
மீனாட்சியம்மன் மதுரையின் கோபுரம்,
மேலுங்கண்டோமதி கோலாகலத்துடன்

***சங்கிலியன் :***

கோதியாமதுரைக் கோபுரத்தோணுதே,
கோதையர் வீதியில் கூடுதல்காணுதே
மாதர் குரல்கேட்டு மாங்குயில் கூவுதே,
மதுரைப்பதியெண்ண மனதன்பு பூணுதே

***பரநிருபன் :***

பழங்காலரகுராமபாலங்கடந்தோமே,
பாம்பனைச் சேர்ந்து நாம் பரிவாய் நடந்தோமே
துழபராமேஸ்பரந்தன்னில் படர்ந்தோமே,
துரிதமாய் மன்னாரைத்தேடி நடப்போமே

***பரராசசேகரன் :***

ஆரம்நிறைந்திடு ராமநாதபுரம்,
அத்தோடு யருமாராமே சுரவரம்
வீரஞ்செறிந்தோர் வதியும் மன்னாரிடம்,
மேவிக்கொண்டே செல்வோந்தேவாசி வேண்டியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* இம்மெட்டு சிந்துபைரவி இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டது.
* பதிகைக்கான மூலபாடம் : சங்கிலியன் (கையெழுத்துப்பிரதி)

## மெட்டு இலக்கம் :- 87

**மெட்டு :- ஓடுதுபாராய்**

**தாளம் :- சதுஸ்ர ஏகம் (மிஸ்ர நடை)**

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

**பல்லவி**

ஓடுதுபாராய் ஓநாய் கொண்
டோடுதுபாராய்

**சரணம்**

ஓடுதுபாரதி உக்ரமமாகவே
உந்தலை வாரிமேல் வந்துவிரைதல்போல்
காடு நடுங்குற நாங்கள் விரைந்தோடிக்
கல்லின்கவுணுற்ற வில்கா ணும்பட்சிபோல் (ஓடுது)

பாலனவச்சத்தங் கேட்குதெங்காதிலே
பரனேயனுக்கிரகம் செய்யுமிப்போதிலே
ஆலமேயுண்டோர்க்கு யேசுசகாயமே
அற்பர்கள் நற்குணபொறற்போரைநீங்கல்போல் (ஓடுது)

எத்தூரஞ்சென்றாலும் உன்னுயிர்மாயுமே
எய்திடுமம்பாலே ரெத்தம் மேல்தோயுமே
நித்தமுங்காமதி பாஷமே தொட்டோர்க்கு
நீண்டபசாசினால் தூண்டுந்துர் ஆசைபோல் (ஓடுது)

* இம்மெட்டு சிந்துபைரவி இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டது.
* பதிகைக்கான மூலபாடம் : எஸ்தாக்கியார், பக்கம் - 83



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தர்க்கத் தருக்கள்

தென்மோடிக்கூத்துமரபிலே காணப்படுகின்ற, பாடல் மெட்டுக்களில் 'தர்க்கத்தருக்கள்' மிக முக்கியமானவையாகக் காணப்படுகின்றன. நாடகத்திற்கு அடிப்படையானது 'முரண்' என்பார்கள். கூத்தில் முரண் வெளிப்படுகின்ற பிரதான பாடல்களாக இவை காணப்படுகின்றன. இவற்றில் வீரம் X வீரம், வீரம் X சோகம் என்ற வகையில் பாடல்கள் அமைகின்றன. வாதவிவாதங்களை மேற் கொள்ளவும், சண்டைத் தருவாகவும், நலிந்தோரை துன்புறுத்தவும், பலாத்காரம் செய்யவும் என பல நோக்கங்களுக்கு இத்தர்க்கத்தருக்கள் உபயோகிக்கப்பட்டுள்ளன. பெரும்பாலும், 'ராஜபாட்' பாத்திரத்திற்கும், நாடகக்காரன் பாத்திரத்திற்கும் இடையேயான ஊடாட்டத்தையும், வீரர் - 'நாடக்காரன்' ஊடாட்டத்தையும் அதிகமாக வெளிப்படுத்துவனவாக காணப்படுகின்றன.

### மெட்டு இலக்கம் - 88

**மெட்டு :- வாரும் நீலம் பிள்ளாய்**
**தாளம் :- (சோகம்) - சதுஸ்ரஏகம்**
**(வீரம்) - மிஸ்ரசாபு**

***மந்திரி:***

*வாரும்வாரும் நீலம் பிள்ளாய் - ஓடி*
*வந்ததென்னோமிகத் துள்ளாய் - உயர்*
*பேருங்குலமுநீ யுள்ளாய் - உயிர்*
*பேணவகைதேடிக் கொள்வாய்*

***தேவ:***

*எத்தனைபேர்சிரங் கொய்தேன் - ஆரை*
*இல்லாவசைசொல்லி வைதேன் - என்னை*
*மெத்தச்சினந்திரென் செய்தேன் - மனம்*
*வேகிக்கிறீர்மெத்த நொய்தேன்*

***மந்திரி:***

*பூசுரர்தங்களைப் பழித்தாய் - இன்று*
*பொல்லாதவன்கண்ணில் விழித்தாய் - எங்கள்*
*ஈசன்மறைதன்னை யழித்தாய் - நீயும்*
*எங்கேகற்றெங்கேபோ யொளித்தாய்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவ:

ஈரெட்டுஆயிரர் கற்பினை - யழித்
திட்டதுந்தேவர்கள் சற்பனை - எங்கட்
கோர்பத்தெனவருங் கற்பனை - இதற்
குண்டோயாதொரு சற்பனை

✶ இம்மெட்டின் வீரமாய் அமையும் மந்திரியின் தரு ஹரிஹாம்போதி இராகமாக வும், தேவசகாயம்பிள்ளையின் சோகத்தரு சங்கராபரணம் இராகமாகவும் உள்ளது.

✶ பதிகைக்கான மூலபாடம் : தேவசகாயம்பிள்ளை, பக்கம் - 52

## மெட்டு இலக்கம் - 89

மெட்டு :- கூனற்றவளைசங்க
தாளம் :- (சோகம்) - சதுஸ்ரஏகம் (மிஸ்ரநடை)
(வீரம்) - மிஸ்ரசாபு

இரா:

கூனற்றவளசங்க மாநிலத்தில மிலங்கு
கோலக்கிரீடதுங்க தாலத்தரசர் வந்து
குறையற்றிறைகள் தந்து முறையுற் றடிபணிந்து
கொடுகத்தனிபுரந்த அரசிற்குடியிருந்த
கொடுவஞ்சக் கடுநெஞ்ச வுனதங்க மிருபங்கு
கொளமுன்ன முளமென்ன களவின்றிவிள்ளாயே

தேவ:

மானத்திறநினைந்து ஏனிப்படிமிகுந்து
வாதிக்கிறீர்சினந்து போதிக்கிறீர்மிகுந்து
வடிவக்கலைகொள்ளிந்தை இருபொற் சரணணிந்த
மறுவற்றவளுவந்து தருமெய்த்தகவு மைந்தன்
மனமொன்றியர்கின்ற திலையென்றனுயிரின்று
மடிகின் றிடினுமுன்ற னுரைநன்றுகொளேனே.

இரா:

காவற்பணிபுரிந்து ஏவற்றொழின்மறந்து
தேவுக்களையிகழ்ந்து நீகெற்சிதமிகுந்து
கறுவத்துறுமுன்னங்கம் மறுகிக்குருதிபொங்கக்
கடிதிற்றலையரங்க வுறவுற்றவரிரங்கக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிதின்ன முடிவென்ன விதுவென்னநடைபண்ணும்
கரவென்னவருமென்ன வுளநண்ணுறாதோ

*தேவ:*

நீசத்துரைநினைந்து மோசத்தினையுவந்து
நேசத்திடர்மிகுந்து வாசத்திடைபுகுந்து
நிறைவற்றறிவழிந்து மறமுற்றெரியுமந்த
நிரையத்திடையழுந்து மனதைத்தருமுன் னிந்து
நிலையங்கடனையின்று நினைகின்றதிலையென்றன்
தலையங்கமிருபங்க துறினுமறிவாயே.

* இம்மெட்டின் வீரமாய் அமையும் அரசனின் தரு **ஹம்சவத்வனி, கீரவாணி** போன்ற இராகங்களை அடிப்படையாகவும் சோகத்துக்குரிய தேவசகாயம் பிள்ளையின் தரு சிந்துபைரவி இராகத்தை அடிப்படையாகவும் கொண்டுள்ளது.
* இதன் சோகத்தருக்கள் தவிர்க்கப்பட்டு தனியே வீரத்தருக்கள் சண்டைத் தருக்களாகவும் அமையப் பெறுவதுண்டு.
* பதிகைக்கான மூலபாடம் : தேவசகாயம்பிள்ளை, பக்கம் - 80

## மெட்டு இலக்கம் - 90

**மெட்டு :- வானத்தா ரிடியொலி**
**மூலமெட்டு :- ஆழிப்பார்**
**தாளம் :- சதுஸ்ரஏகம்**

*மாலுமி :*

வானத்தா ரிடியொலி கடலலை
தேனத்தார் எனதுரை கேட்கவே
ஈனத்தார் சவமதாய்ப்போவதால்
ஏன் துணிவு கொண்டாய்

*எஸ்தாக்கி :*

மானத்தா லீனமே செய்திடார்
மற்றையோர் நன்மையே நாடிடார்
கானத்தார் விலங்கதேயுன் செயல்
கண்டேனின்றே நானும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மாலுமி :*

சோரிச்சா கரமாயுன்னங்கமே
குபீரச்செய் வேனடிபொங்கவே
வீரக்கா ரியமொழியென்முனே
விளம்புவாயோ நீயும்

*தெயோ :*

வங்கச்சீர் லங்கதிகாரமே
வறிமையோர் மேல்பவகாரமே
சங்கைக் கேராதது உன்செயல்
தயவுவைத்து ஆளே

✶ இம்மெட்டு நடபைரவி இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டது.
✶ பதிகைக்கான மூலபாடம் : எஸ்தாக்கியார், பக்கம் - 64

## மெட்டு இலக்கம் - 91

**மெட்டு :- சங்கை பொங்கிடு**
**தாளம் :- (வீரம்) சதுஸ்ர ஏகம் (மிஸ்ர நடை)**
**(சோகம்) மிஸ்ரசாபு**

*மாலுமி :*

கத்துநத்தஞ் சொரிந்தேயிடு
முத்துரத்னம் நிறைந்தேயிடு
சத்தசாகரத் துயர்ந்தேசெலு
தலைவனென்னையோ யிகழ்ந்தாயடா
கண்டதுண்டமே கொண்டிடப்புவி
அண்டர்மண்டல மேங்கவே செய்து
காலனெனவுன தீனவுயிரது
தானேநீக்குவேன் நானே

*எஸ்தாக்கி :*

அங்கபங்கஞ் செய்துமேயென்ன
ஆகொடும்வசை வைதுமேயென்ன
துங்கமாமரி பாதமேசொர்ண
தூய்கடாட்சம் என் மனதிலேதுன்ன
ஆரவாரவ கோரமேனதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரமேயென்னிற் பாரகோரமேன்
அம்பராபர எம்பிரானெனை
இம்பரிற் காப்பார் தானே

*மாலுமி :*

கெட்டமட்டியுன் இறுமாப்பதோ
இட்டவார்த்தையா லணைக்காப்பதோ
கட்டளகியாள் உந்தன்கோப்பதோ
இட்டவாக்கினை உனக்குவாய்ப்பதோ
கெஞ்சினாலுமென் அஞ்சினாலுமுன்
வஞ்சியாளை விடேனேயானுமே
கேடுசூழமுன் ஓடடாமதி
மூடனேபிற நாடே

✶ இம் மெட்டின் மாலுமிக்குரிய வீரத்தரு **சங்கராபரணம்** இராகத்தையும் எஸ்தாக்கியாரின் சோகத்தரு **வகுளாபரணம்** இராகத்தின் சாயலையும் அடிப்படையாகக் கொண்டது.

✶ இதன் வீரத்தரு 'சண்டைத்' தருவாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

✶ பதிகைக்கான மூலபாடம் : எஸ்தாக்கியார், பக்கம் - 62

## மெட்டு இலக்கம் - 92

மெட்டு :- **பேடிகளாகிய மூடர்கள்**

**தாளம் :- சதுஸ்ர ஏகம்**

***சங்கிலி :***

பேடிகளாகிய மூடர்களேயுங்கள்
பீடது கானிலா ஆவது போலடா
சாடை சயிக்கினையா லெனை மாட்டிய
தந்திரத்தா லென்னை விந்தையடா மூடா

***துரை :***

துட்டனே இத்துயர் பட்டிடஉன்வினை
கிட்டியே வந்ததே துரித மதாயெடா
கட்டளை யிட்டையே சிட்டரை வெட்டிட
கால்கை விலங்கதால் நோவுறுவாயெடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சங்கிலி :**

ஒடையிலே விளையாடயிலே தடம்
உற்று பிடித்திடு பாலர் செயலெடா
காடக மானதில் நீர் செய்த நாடகம்
காட்டியதின் நிறம்மேட்டிமை என்னடா

**துரை :**

மெத்த மகத்துவ முற்ற பயித்திய மூடர்
வீண் மொழி பேசுவதாண்மை யோடா
தத்தி நடத்திடச் சக்தியில்லா நிலை
தானு மடைந்த பின் வாய் மதமேனடா

✶ இம்மெட்டின் இராகம் சங்கராபரணம்
✶ இத்தரு 'சண்டைத்தரு'வாகவும் பயன்படுத்தப்படுகிறது.
✶ பதிகைக்கான மூலபாடம் : சங்கிலியன் (கையெழுத்துப்பிரதி)

## மெட்டு இலக்கம் - 93

**மெட்டு : உன்பத்தா எங்குற்றானோ**
**மூலமெட்டு :- மறையோன்**
**தாளம் :- (வீரம்) சதுஸ்ர ஏகம் (மிஸ்ரநடை)**
**(சோகம்) மிஸ்ரசாபு**

**மாலுமி :**

உன்பத்தா எங்குற்றானோ துறைபதி
உற்றவென் சொற்படியே
சங்கைச் சேர் பைங்கிளியே கப்பல்நாதன்
தருமந்தனைக் கேட்பாயே

**தெயோ :**

கற்பிற்பிரதாபவல்லாய் என்னாளுமே
கன்னிமை காக்கவல்லாய்
பொற்பிற் கற்பாபரணா எனைநீயும்
பூர்த்தியாய்க் காத்தருளே

**மாலுமி :**

அஞ்சுகரஞ்சிதமே துயர் நீங்கி
ஆதரவாய் நிதமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்சுமகிமை பெற்றே கப்பலிலே
மேவியே வாழுவையே

**தெயோ :**

மாங்கில்யம் பூட்டியெனைக் குருமுன்
மகிழிந்வரென் துரையே
இங்கென்மே லாசைவைப்போன் கொப்பாந்தேனில்
இச்சைகொள் முடவனன்றோ

✶ இம்மெட்டின் இராகம் சங்கராபரணம்

✶ பதிகைக்கான மூலபாடம் : எஸ்தாக்கியார், பக்கம் - 103

## மெட்டு இலக்கம் - 94

**மெட்டு :- ஓகோ நீலகண்டா**

**தாளம் :- (வீரம்) சதுஸ்ர ஏகம் (மிஸ்ரநடை)**
**(சோகம்) மிஸ்ரசாபு**

**மந்திரி :**

ஓகோநீலகண்டா ஆகாதகோலம் நீகொண்டாய் - போக
ஒண்ணாமறைதன்னை நண்ணியென்னபலன்கண்டாய்

**தேவ :**

சாகாவரம்பெற்றோ ராரிப்புவிதனிலையா - இத்
தரையைவிடிற்கதி தன்னிலுறவேன்நான் மெய்யாய்

**மந்திரி :**

கண்ணாற்கதிதன்னைக் கண்டவன்போலவிள்ளாதே - வேந்தை
எண்ணாமலெய்த லறியாமலே நீதுள்ளாதே

**தேவ :**

விண்ணாடுசேர விருப்பம்மிகவெனக்குண்டு - என்ன
பண்ணாதவாதை பண்ணினும்செய்யேன் பேய்கட்குத்
தொண்டு

**மந்திரி :**

தேற்றமுடன்மொழிசாற்றுந் துணிவினைக்கண்டேன் - உன்னை
சீற்றமாயுள்ளந் திகைக்கக்கொல்லமனங்கொண்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேவ :**

ஈற்றிற்செய்வதென்ன ஆத்மாவையும்வதைப்பாயோ - உன
தெண்ணப்படிசெய்ய மண்ணினில்நானொருநாயோ

✶ இம் மெட்டுக்குரிய வீரப்பாடல் நடபைரவி இராகத்தினையும் சோகப்பாடல் நடனபைரவி இராக சாயலையும் அடிப்படையாகக் கொண்டது.

✶ பதிகைக்கான மூலபாடம் : தேவசகாயம்பிள்ளை, பக்கம் - 127

## மெட்டு இலக்கம் - 95

**மெட்டு :- மாகருணாகரா**
**தாளம் :- (வீரம்) மிஸ்ரசாபு**
**(சோகம்) சதுஸ்ர ஏகம் (மிஸ்ர நடை)**

**மனைவி :**

மாகருணாகர போகதுரந்தர
மன்னா என்னரசே அரசே - உன்
மாமதிபோயொரு தீமொழிபேசியே
வாறென்ன தேறேனே என்மன்னா

**தேவ :**

பாகடருஞ்செல்லுல் லாசவிலாசவென்
பாவையரேகேளாய் என்மானே - மிகு
பாவப்பசாசற மூவரொன்றானவர்
பாதம்பணிவாயே என்மானே

**மனைவி :**

சத்தியவேதத்தை மெத்தவும்மெய்யென்று
சாற்றுகிறீர் தலைவா தலைவா - பிறர்
சாதிக்கும் நீசர்சண் டாளர்க்கல்லாதெங்கள்
தங்களுக்காகாதே என்மன்னா

**தேவ :**

எத்தியவன்னர கத்தலகப்படு
புத்தியென்சொல்லுகிறா யிப்போது - ஊரில்
ஏழைக்கும்பாக்கிய வாளர்க்குமாளுக்கோ
ரேகனுண்டோவுரையாய் என்மானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✶ இம்மெட்டு நடபைரவி இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டது.

✶ பதிகைக்கான மூலபாடம் : தேவசகாயம்பிள்ளை, பக்கம் - 36

## மெட்டு இலக்கம் - 96

**மெட்டு :- என்மனம் நிறைந்த வடிவம்**
**தாளம் :- சதுஸ்ர ஏகம் (மிஸ்ரநடை)**

***மந்திரி :***

*என்மனம் நிறைந்த வடிவம் - நீயென*
*எண்ணி மனதுற்றேனே சொரூபம்*
*என்மனம் நிறைந்த எழில்*
*கொண்டைகொண்ட நேர்விழியே*
*கன்னல் தேன் மதுரி பாற் கற்*
*கண்டினும் மேலார் மொழியே*

***ஜெனோவா :***

*ஆலவிஷக் காற்றது போலே - அட்டாபாவி*
*ஆடுகின்றாய் பம்பரம்போலே - உந்தன்*
*ஆணவமே வீணதாகும் - ஆடவர்கோல மிதாகும்*
*காதலி யென்றே யியம்பும் - சாதனையே வீணதாகும்*

***மந்திரி :***

*என்ன மொழி சொன்ன போதிலும் - செனகப்பூவே*
*உன்னையடைவேனே புவியில்*
*வெஞ்சினத்திலே சிவக்கும்*
*வஞ்சியுந்தனின் வதனம்*
*கொஞ்சி விளையாடிடவே*
*கூப்பிடுதெனை மயிலே*

***ஜெனோவா :***

*காமவெறி கொண்ட மூடனே - கயவனேயுன்*
*கண்ணழுகி அந்தகனாவாய்*
*மன்னவன் மனைவியெனை*
*எண்ணவே துணிவு கொண்டாய்*
*உன்னழிவின் காலமதே*
*வந்ததே அறிந்திடுவாய்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* இம்மெட்டு **சிந்துபைரவி** இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டது.
* பதிகைக்கான மூலபாடம் : ஜெனோவா (கையெழுத்துப்பிரதி)
* என்னமொழி..., காமவெறி... ஆகிய இரு அடிகளும் தொகுப்பாளரால் இயற்றப்பட்டவை

## மெட்டு இலக்கம் - 97

**மெட்டு :- பெருமை பெருமை**
**தாளம் :- சதுஸ்ர ஏகம் (மிஸ்ரநடை)**

***ஜெனோவா :***

பெருமை பெருமையென்று பேசாதே மந்திரியே
வருமே பெரு நரகம் மாபாவி போடா

***மந்திரி :***

நரகம் நரகம் என்று நவிலாத செனகப்பு
விரகதாபம் என்னை விடுமோ சொல்வாயே

***ஜெனோவா :***

பாதம் பணிந்தேவல் பணி விடை செய்யும் நீ
தீதெல்லோ புரிகின்றாய் திருடா நீ போடா

***மந்திரி :***

போடா வாடா என்று புகலாதே செனகப்பு
நாடாளும் மந்திரி நானெல்லோ பாராய்

***ஜெனோவா :***

பாராய் பாராய் என்று பகட்டாதே ஆண்டவன்
தீர்வை வருமிப்போ திரும்பியே போவாய்

***மந்திரி :***

மெய்யென்று நீ யென்னை வெருட்ட வேண்டாம் பெண்ணே
கையால் அணைத்து முத்தம் கனிந்திட்டாய் கண்ணே

* இம்மெட்டு **மாயா மாளவ கௌளை** இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டது.
* பதிகைக்கான மூலபாடம் : ஜெனோவா (செனகப்பு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெட்டு இலக்கம் - 98

மெட்டு :- **அன்னையல்லோ**

தாளம் :- (சோகம்) மிஸ்ரசாபு (மிஸ்ரநடை)

(வீரம்) சதுஸ்ர ஏகம்

*ஜெனோவா :*

அன்னையல்லோ நானுனக்கு மந்திரி கேளாய் - பொல்லா
அர்ப்ப நினைவேன் நினைத்தாய் இப்புவிமேலாய்

*மந்திரி :*

சித்திரக் கொடியிடைசேர் உத்தமியாளே - உன்னை
செப்புதற்கு தக்கதொரு ஒப்பனைகாணேன்

*ஜெனோவா :*

உன்னை நம்பி என் தலைவன் ஏகினார்சீமை - எனக்
குற்ற துணை வைத்தற்கோ இத்தனைதீமை

*மந்திரி :*

ஊர்வசி மேனகை ரம்பைப் பூங்கொடியாளே - உற்ற
உந்தனழ கிற்கிணை எங்குமுள்ளதோ

*ஜெனோவா :*

மருமலர்ச் சரந் தொடுத்த மாலை தன்னையே - துட்ட
மந்திகையில் விட்டகன்றார் என்தலைவனார்

✶ இம்மெட்டின் இராகம் சங்கராபரணம்

✶ மெட்டுக்கள் 96, 97, 98 தொடர்ச்சியான தர்க்கத் ருக்களாக ஜெனோவா நாட்டுக்கூத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

✶ பதிகைக்கான மூலபாடம் : ஜெனோவா

## மெட்டு இலக்கம் - 99

மெட்டு :- **ஆழிகடல் சூழுலகம்**

தாளம் :- சதுஸ்ர ஏகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அதிகாரி :*

ஆழிகடல்சூழுலக மானதையொருகுடையு
ளாளுமரசாதிபதி யாருரையைமீறி
அதிகவீனவேதமது கதியருளுமென்றுரைத்த
ஆடம்பரவாய்கிழித்துப் போடவென்னாலாகும்

**தேவசகாயம் :**

வீரபிரதாபமுள்ள தேசவதிகாரியேநீர்
வீணிலெனதாருயிர தானதைக்கொன்றாலும்
வேதனையல்லாதுநர காழமதில்வீழுகண
மானதையாராதனைசெய் யேனினிமேல்நானும்

*அதிகாரி :*

வாழுமுடலானதைநீ வீணிலிழவாதேசிறீ
ராமனதுதாளிணையை யாவலொடுநேசி
வானபரனாதிசரு வேசன்மறையீதெனநீ
மாபிரியமாகநினை யாதேபடுபாவி

**தேவசாகயம் :**

நாரியர்கள்சேலைதனை யேயுரிதாமோதரனை
நாடியொருதேவனென வேபகரலாமோ
நாணமிலையோவெகுபெண் ணோடுகாமவாசையினில்
நாடுவோனைத்தேவனென வேபகரலாமோ

★ இம்மெட்டின் இராகம் ஹரிஹரப்பிரியா

★ பதிகைக்கான மூலபாடம் : தேவசகாயம்பிள்ளை, பக்கம் - 102

## மெட்டு இலக்கம் - 100

**மெட்டு :- அநியாயம் செய்திட்ட மூடனே**

**தாளம் :- சதுஸ்ர ஏகம் (மிஸ்ர நடை)**

*வீரர் :*

அநியாயம் செய்திட்ட மூடனே - றோமை
நகரை எரிந்திட்ட கேடனே பாராய்
கொடுமைகள் செய்திட்ட கொடியவன் உனையிப்போ
கொடும்வதை செய்குவேன் அறிந்திடுவாயடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சீமோன் :**

கொடுமைகள் செய்தவன் நானில்லை - அந்தக்
கொடுமைக்கு உடந்தையும் நானில்லை ஐயா
கொடியவர் நீர் செய்த கொடுஞ் செயல் தனை என்மேல்
நொடியினில் சுமத்திநீர் பொறுக்குமோகேளீர்

**வீரர் :**

சிலுவையில் அறைந்துன்னைக் கொல்லுவோம் - மன்னன்
சீற்றம் தணிந்திடச் செய்குவோம் வாராய்
சினந்துந்தன் உயிர்போகச் சிதறியுன் உடல் வீழ
சிவந்த மலையேறிச் சீக்கிரம் வாடா

**சீமோன் :**

இறைமகன் யேசுவை அறைந்ததுபோலே
குறையேனை அறைவது முறையல்ல என்னைத்
தலைகீழாய்த் தொங்கிட அறைந்திடும் அண்ணே
நிலையான வாழ்வதாய் இருப்பது விண்ணே

✶ இம்மெட்டு சிந்துபைரவி இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டது.

✶ பதிகைக்கான மூலபாடம்: நீ ஒரு பாறை (கையெழுத்துப்பிரதி)

## மெட்டு இலக்கம் - 101

**மெட்டு :- ஏந்தலுடை கட்டளை**
**தாளம் :- (வீரம்) - சதுஸ்ர ஏகம்**
**(சோகம்) - மிஸ்ரசாபு**

**வீரர் :**

ஏந்தலுட கட்டளைபோல் இந்த
எத்தனைப் பிடித்திழுத்து
சாந்தனையும் தானடித்துப்பின்பு
தள்ளிடுவோம் துள்ளிடுவோம்

**இம்மனுவேல் :**

அடிக்குமேலடிக்கிறார்கள் ரெத்தம்
ஆ றனவே பிறீடுதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடிக்குதே என் அங்கமெல்லாம் அந்தோ
தூயமரி பாலகனே

*வீரர் :*

ஆறெனவே பீறிடினும் ரெத்தம்
அன்னைமரி பாலனென்றே
கூறிடுவதல்லதில்லை எற்றிக்
கொன்றிடுவோம் இன்றுனையே

**இம்மனுவேல் :**

நெருக்குநெக்கதென்ன உடல் இப்போ
கக்கிடுதே ரெத்தமெல்லாம்
திக்கிடுதே என்னுரைகள் அந்தோ
தீரக்கொலைச் சேவகரே.

✶ இம்மெட்டின் வீரத்தரு கம்பீர நாட்டை இராகத்தையும், சோகத்தரு நீலாம்பரி இராக அடிப்படையையும் கொண்டது.
✶ இது பாசையூர்ப்பகுதியிலேயே பெருவழக்காய் உள்ளது.
✶ இதன் வீரத்தரு தனியே 'சண்டைத்தரு'வாக வருவதுண்டு.
✶ பதிகைக்கான மூலபாடம்: இம்மனுவேல், பக்கம் - 29

## மெட்டு இலக்கம் - 102

**மெட்டு :- இந்தச் சிலம்பு**
**தாளம் :- சதுஸ்ர ஏகம்**

*பத்தன் :*

இந்தச் சிலம்புனது சொந்தப் பொருளோ - அன்றி
எங்கோ களவுசெய்து வந்த பொருளோ?

**கோவலன் :**

சொந்த மனைவியரணிந்த சிலம்பே - என்னில்
சந்தேகமேகொள்வது பொல்லாத பாவம்

*பத்தன் :*

பட்டத்தரசியர்க்கு அன்றி இப்படி - சிலம்பு
மற்றவரால் வாங்கலாமோ மதி மூடனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவலன் :

செப்பற்கரிய செல்வமோடிருந்தோமே - இந்த
அற்பத்தனச் சொல் கேட்கலாச்சுதோ தேவா

✶ இம்மெட்டு சங்கராபரணம் இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டது.
✶ இதன் வீரத்தரு தனியே சண்டைத்தருவாகவும் பயன்பட்டுள்ளது.
✶ இப்பாடலும் பாசையூர் பகுதியிலேயே பெருவழக்காய் வழங்கி வந்துள்ளது.
✶ பதிகைக்கான மூலபாடம் : முத்தா மாணிக்கமா (கையெழுத்துப்பிரதி)

## மெட்டு இலக்கம் - 103

**மெட்டு :- தந்தாரே தேவன்**

**தாளம் :- (வீரம்) - சதுஸ்ர ஏகம் (மிஸ்ரநடை)**
**(சோகம்) - மிஸ்ர சாபு**

**ஊர் மக்கள் :**

தந்தாரே தேவன் என்றுநீ சொல்லி
தம்பட்டம் போட்டுக் கொண்டதும் என்ன
தாங்க முடியாத வேதனை நோவும்
தந்து விட்டார் உந்தன் வீண் கொட்டம் எங்கே.

யோபு :

எனை நீங்கள் நகைப்பது ஞாயம் தானோ
இறைவனைப் பழிப்பதும் இகழ்ந்து நீர் உரைப்பதும்
நலமென்று நினைப்பதும் நீதிதானோ

**ஊர்மக்கள் :**

தள்ளிவிட்டார் என்று ஊர் மக்கள் கூடி
எள்ளி நகையாட வைத்தார் உன் தேவன்
கொள்ளை யடித்துந்தன் செல்வம் வீண் போகத்
தொல்லை கொடுத்தது போதுமோ நண்பா.

யோபு :

இறைவனின் வல்லமை நீர் அறியமாட்டீர்
உலகத்தில் இருக்கின்ற அனைத்தையும் படைத்தவர்
அவரிடம் நீதிநாம் கேட்கலாமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஊர்மக்கள் :**

கடவுள்! கடவுள் என்று கையெடுத்தாய் - நீ
கடவுள் கைவிட்டதை உணர்ந்து கொண்டாயோ
திடமாக நம்பி இருந்தென்ன வேதம் தீமையே
கடைசியில் நீ பெற்ற இலாபம்.

✶ இம்மெட்டின் வீரத்தரு **ஹம்சத்வனி, கீரவாணி** இராகங்களை அடிப்படையாகவும் சோகம் **சிந்துபைரவி** இராகத்தையும் கொண்டது.
✶ பதிகைக்கான மூலபாடம் : அனைத்தும் அவரே (கையெழுத்துப் பிரதி)
✶ இம்மெட்டும் பாசையூர் பிரதேசத்திலேயே பெருவழக்காய் காணப்படுகிறது.

## மெட்டு இலக்கம் - 104

**மெட்டு :- காதறுக்காதே**

**தாளம் :- சதுஸ்ர ஏகம் (மிஸ்ர நடை)**

காதறுக்காதே சற்றே நில்லு நில்லுப் போதறுக்காதே
காதறுப்பது தீதுறுந் செயல் நீதியிற் பெரியோர்க்கெலாம் மயல்
சோதி அம்பரற் கோபமாம் புயல் ஆதரைவராக் காப்பதே இயல்

நீசுறுக்காயே இங்கேன் வந்தாய் சொல்லிப் போ வெறுப்பாயே -
இந்த நாத கெற்சித ராசனென்னிடம் மாது நீ வர என்ன
மனதிடம்
ஓது முன்னுரை நீரிலாக்குடம் உரைக்கில் ஊமை கண்டிடு
கனாமடம்

✶ இம்மெட்டு சிந்துபைரவி இராக சாயலை அடிப்படையாகக் கொண்டது.
✶ பதிகைக்கான மூலபாடம் : கருங்குயில் குன்றத்துக் கொலை (கையெழுத்துப் பிரதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேட்டைப் பாடல்கள்

தென்மோடிக்கூத்துமரபில் வனத்திலே வேட்டையாடும்போது பயன்படுத்தப்பட்ட 'வேட்டைத்தரு'க்களாக சில மெட்டுக்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன. இதில் வரும் இரண்டு மெட்டுக்களும் தனித்துவமானவையாக குறிப்பிடத்தக்கவை.

## மெட்டு இலக்கம் - 105

**மெட்டு :- வாருஞ் சேரும்**

**தாளம் :- சதுஸ்ர ஏகம் (மிஸ்ர நடை)**

*வாருஞ் சேரும் வேடசூரர்களே - வயா செயாவெனச்*
*சேரும் எம்மொடு வீரதீரர்களே கரிஅரி*
*கெஞ்சிடப் புவி அஞ்சவே வயம்*
*நஞ்சுறப்பாணம் விஞ்சுறேனிதோ*
*காடுலாவிய மேடராசிகள் பாடு சாயுதென் ஆடுவில்லினால்*

*ஆனும் மானுந் நின்று லாவுகுதே - மகோ ததியென்னத்*
*தானுநதி போன்று தோன்றுதே வேடரேநீர்*
*அஞ்சிடக்கணை மிஞ்சவே விடும்*
*பஞ்செனமிர்கங் கெஞ்சவே கெடும்*
*பாரிலெங்களின் ஆண்மையுக்கிணை தேரில்*
*வானிலுமில்லையேயடா*

*காணில் ரத்தப் பிரவாக மாகிடவே - விடடாகணை*
*இப்போ வானில் ரத்த முந்திப்பாய்ந்திடவே - உயர்வு பெறும்*
*ஆனையின் இனம் தானே சரிவுற*
*கானில் விடுசரம் தானேயெரிவுற*
*மானினம் மிக அஞ்சி யேங்கிட சோனை முகிலெனச் சரமே*
*தொடு அடா*

✶ இம்மெட்டு **கீரவாணி** இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டது.

✶ இத்தரு 'சண்டைத்தரு'வாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

✶ பதிகைக்கான மூலபாடம் : எஸ்தாக்கியார், பக்கம் - 18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெட்டு இலக்கம் - 106

**மெட்டு :- வீரசூரரான வேடரே**

**தாளம் :- சதுஸ்ர ஏகம் (மிஸ்ர நடை)**

வீரசூரரான வேடரே மிருகவேட்டை
யாடவருவீரேநீரிப்போ - தப்பாமலே
பாரினைக் கெடிகலக்கும் வீரசிங்க மேயடக்கும்
கோரிய அதிர்ச்சிபோக நீர்விடுமம் பதுஏக

துஷ்டபுலி யொன்று ஓடுதே அரியொலியால்
குஷ்டமுற வேங்கி வாடுதே - வயாமிகு
அஷ்டதிசை வனமஞ்ச மட்டிலாமிர்கமே கெஞ்ச
திட்டமாயம் புவில் விஞ்சசட்டென வீழ்த்ததைத்துஞ்ச

வருகுதே ஓநாய் கடுவாயே - வேகமதாக
விடுகுவாயுன்னம்பை விரைந்தே பட்டேவீழ
உருவிடச் செய்யம்பை விட்டு கரிகியேயுயிரைவிட்டு
பெருகிரத்தம் பாயவிட்டு உயிரதுதென்புரம்பட்டு

விசையே கொண்டு முசலு மோடுகுதே - அதனைக் கண்டு
வேகமாகவே நரியுஞ்சாடுகுதே இப்போதுநீவிர்
வீரதீர மாகவுங்கள் கோரஅம்பு தன்னையெய்து
பாரிலேயதற்கு யமன் நீவீராகக் காட்டுமாறு

✶ இம்மெட்டு **கீரவாணி** இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டது.

✶ பதிகைக்கான மூலபாடம் : எஸ்தாக்கியார், பக்கம் - 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிப்பாடல்கள்

பாத்திரங்கள் தனித்து நின்று பல்வேறு உணர்வுகளை வெளிப்படுத்திப் பாடும் பாடல் மெட்டுக்கள் இப்பகுதியில் அடங்குகின்றன. பெருமளவில் சோகப் பாடல்களாகவே இவை அமைகின்றன.

பாத்திரங்கள் 'தற்கூற்றாக'ப்பாடும் வர்ணனைப்பாடல்கள், செயலை வெளிப்பதும் பாடல்கள், வேண்டுதல் பாடல்கள் போன்றவையும் இதில் அடங்குகின்றன.

## மெட்டு இலக்கம் - 107

**மெட்டு :- கனகமயமொளிர்**

**தாளம் :- சதுஸ்ர ஏகம்**

*கனகமயமொளிர்மோட்சமிருந்து - கனல்நரகக்*
*கதவடைக்கவருமொருநல்மருந்து*
*என வுலகிலுயிர்த்தொகைகள்வருந்து - பவமகல*
*ஏகாவெமக்கிரங்கியருள்பொருந்து*

*சாட்டையுடன் கசையடிகள்பட்டீர் - உலகிலெங்கள்*
*தமக்காகவுமதுயிரைவிட்டீர்*
*சூட்டுமுடியரசனொருப்பட்டுப் - படுத்துமிந்தத்*
*துயர்பொறுப்பேனுமதருளைத்தொட்டு*

*பித்தையருந்தாமதற்குண்டீர் - உமதுவலம்*
*பெற்றிருந்தகள்வனையாட்கொண்டீர்*
*குத்திரமாங்கொலைஞரெனையண்டி - மிகுந்தகொடுங்*
*கொலைசெயினுமுமைமறவேன்கண்டீர்*

★ இம்மெட்டு நடபைரவி இராகத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்.

★ பதிகைக்கான மூலபாடம் : தேவசகாயம்பிள்ளை, பக்கம் - 86

## மெட்டு இலக்கம் - 108

**மெட்டு :- மிகவும் இரக்கமுள்ள**

**தாளம் :- சதுஸ்ர ஏகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மிகவும் இரக்கமுள்ள தாயே - அம்மா*
*இதோ உன் அடைக்கலமாய் ஓடிவந்தேன்*
*மிக்க சனர்களும்மை வேண்டிக்கொள்வார்கள் தாயே*
*தக்க பராமுகம் ஏன் தாயே எனைக் கண்பாரும்*

*ஆசீர்வதிக்கப்பட்டநீரே - மோட்ச*
*அதிக விருதுபெற்ற தாயே அம்மா*
*அன்னையே நித்தம் நித்தம் கன்னிகையானவளே*
*ஆபத்துலகில் மாயை ஆபத்தைக்காரும் தாயே*

★ இம்மெட்டு சிந்துபைரவி இராகத்தை அடிப்படையாகக் கொண்டது.
★ பதிகைக்கான மூலபாடம் : ஜெனோவா

## மெட்டு இலக்கம் - 109

**மெட்டு :- புத்திரரே எந்தன்தவப்**

**மூலமெட்டு :- ஆத்தமியா**

**தாளம் :- ரூபகம்**

***பல்லவி***

*புத்திரரே எந்தன்தவப் - புத்திரரே*

***சரணம்***

*அத்தமியா மகாவிசித்திரமாகிய ஆயிரமாகச்*
*சலஞ்சலஞ்சூழ்ந்திடும் உத்தமமானநற் பஞ்சசைனியம்*
*நிறை உச்சிதவானோரும் இச்சைகொள்ளும்நயா*
*உற்றிடுவாரே உங்கள்மேன்மை கற்றிடுவாரே*

*சந்தனகுங்குமவாசநிவாசமே தாமரைச் செந்தாயின்*
*அன்பின்விசேஷமே எந்தநாளுங்கொண்ட உங்களைக்*
*கானகத் துற்றமிருகங்கள் பற்றிப்பிடித்திட*
*உள்ளந்நொந்தீரோ துக்கசோக வெள்ளம் வந்தீரோ*

★ இம்மெட்டின் இராகம் ஹரிஹாம்போதி ஆகும்.
★ பதிகைக்கான மூலபாடம் : எஸ்தாக்கியார், பக்கம் - 153

200519



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெட்டு இலக்கம் - 110

**மெட்டு :- தேவன் செயலிதுவாமோ (கொச்சகத்தரு)**
**தாளம் :- ஆதி**

**கொச்சகம்**

காவின் குயிலினிசையானைக் கமலாலயமானா னவளைப்
பாவின் மதுரத் தேனானைப் பகரும் பாக்கியப் பாலகரை
பூவினிழந்தேன் சொகுசிழந்தேன் புகலுந் தோட்டப்பயிர்
செய்யத்

**தரு**

தேவன் செயலிதுவாமோ - அவர்
சிந்தை தனையறியலாமோ
பூவின் மேல் வருத்தமே இன்பே - என்பார்
பொன்னாட்டிற் காண்பார் தேவனன்பே

**கொச்சகம்**

ஆக்குந் தேக்குங் கருங்காலி அவிரும் பாலை முதிரை புனனை
பார்க்கப் பசியே தீர்க்குமுயர் பகரும் காப்பித் தேசச் செடியார்
ஊக்கம் மனதார் றபர் வருக்கம் ஓங்கும் தென்னை பனை
வருக்கம்

**தரு**

நோக்கம் சமண்டலை வீரை அதன்
நுகர்ச்சி முக்கனிமரச்சீரை
ஆற்கும் இனிதேவதாரம் - மற்றும்
ஆனை வைத்தேனே விஸ்தாரம்

* இம்மெட்டு சிந்துபைரவி இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டது.
* 'கொச்சகத்தரு'வாக அமையும் இம்மெட்டில் கொச்சகம் முழுமையாக இசைக்கப்படுவதில்லை.
* பதிகைக்கான மூலபாடம் : எஸ்தாக்கியார், பக்கம் - 100

## மெட்டு இலக்கம் :- 111

**மெட்டு :- அள்ளிக்கொள்ளை**
**தாளம் :- சதுஸ்ர ஏகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அள்ளிக் கொள்ளையாய்ச்செறிந்த
வெள்ளைப்புள்ளிகொள்ளுகலை தலைமேல் - தோற்றும்
அம்பொற்கொம்பின்மீதிருந்த
செம்பொற்பாதம்நம்பினேன் நம்பினேனே

கற்பிற்கற்பதாயுதித்த
அற்புதவிற்பன்னஅலங்கார - திவ்ய
கன்னிமரித்தாயேநீயே
இன்னல்தவிர்த் துன்னருள்செய்வாயே

வாடைபொங்கஇடியிடிக்க
மழைதுளிக்கக்குளிர்பிடித்தஇரவில் - எங்கள்
வாட்டரவைமீட்டகற்ற
மாட்டகத்தில்வந்துபிறந்தோனே

✶ இம்மெட்டு **சிந்துபைரவி** இராகத்தை அடிப்படையாகக் கொண்டது.
✶ பதிகைக்கான மூலபாடம் : தேவசகாயம்பிள்ளை, பக்கம் - 77

## மெட்டு இலக்கம் :- 112

**மெட்டு :- மின்னு நாயிறு திங்கள்**
**தாளம் :- சதுஸ்ர ஏகம்**

மின்னு நாயிறு திங்கள் தன்னோடே வெள்ளிதங்க
மெய்க்குங்கா லுங்குஞ்சிர சிற்குஞ்சேர்க் குஞ்செவ்வாயார்

பொன்னம்பரவமலன் தன்னைத்தருமனந்த
பூரணியேநானிந்தக் காரணங்காணுவேனோ

அரசர்கள்மந்திரியே அதிவீரதந்திரியே
அலங்காரமானகாலில் விலங்கானவாறதென்னோ

சரசவசனமெங்கே தங்கம்போலங்கமெங்கே
சந்த்முகந்தானெங்கே சங்கைமானே சொல்வீரே

✶ இம்மெட்டு **வகுளாபரம்** இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டது.
✶ பதிகைக்கான மூலபாடம் : தேவசகாயம்பிள்ளை, பக்கம் - 107



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெட்டு இலக்கம் - 113

**மெட்டு :- ஆகாயிவ ளென்ன ரூபமோ**
**மூலமெட்டு :- காணரும் மேலான காட்சி**
**தாளம் :- சதுஸ்ர ஏகம்**

### பல்லவி

ஆகாயிவ ளென்ன ரூபமோ - இப்பூவுலகில்
ஆகாயிவ ளென்ன ரூபமோ.

### அனுபல்லவி

ஆகா ஆதி சேடனாலும் ஓதமுடியாத நங்கை
தேகமோ சூரியபிர காசமோ சந்ரோதயமோ - ஆகா

### சரணம்

அந்தரத்தி லேயுலவும் கந்தரூப ஸ்திரியோ
அந்தர சுந்தரர்கட்டும் வந்துகிட்டா மாணிக்கமோ
அதி திரு வுருவரு முகவசீ சுரரதி
அந்தோ மாரன் அம்புபாயுதே வந்தென்னைக் கட்டி
அந்தா னென்று முத்தமீ யாளோ
இவ்வேளை வந்து என்னோடுகத்து சுகித் திடாளோ.

- ✶ இம்மெட்டு சங்கராபரணம், மாயா மாளவ கௌளை இராகங்களின் கலப்பாக காணப்படுகின்றது.
- ✶ இது 'மன்னர் சபை நாடியே' என்ற (மெட்டு இலக்கம் - 14) மெட்டினை அடியொற்றி இருப்பினும் சரணம் வேறுபட்டதாகக் காணப்படுகின்றது.
- ✶ பாஷையூர்ப் பகுதியிலேயே இம்மெட்டும் வழக்கத்திலுள்ளது.
- ✶ பதிகைக்கான மூலபாடம் : கண்டி அரசன், பக்கம் - 34

## மெட்டு இலக்கம் - 114

**மெட்டு :- திக்கற்றெனைப் பிடித்தே**
**மூலமெட்டு :- உள்ளங்கை**
**தாளம் :- மிஸ்ரசாபு**

திக்கற் றெனைப் பிடித்தே முக்குற்றிடர் தொடுத்தே
இக்கொற்றவனிடத்தே பொய்க் குற்றங்கள்தொடுத்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூற்றேயிவர் தூற்றேமன
மாற்றேனிதை யேற்றேன்சரண்
ஈறிலாப் பெறு பேறதேயருள்
மாறில்லா நிறையோனே

எள்ளத்தனை யிரங்கா குள்ளத்துறும் நரக
துள்ளத் துறு மருங்கா வள்ளற் கிடை நெருங்க
பிடித்தே வசை படித்தே மனம்
துடித்தே பகை முடித்தே விரை
சுற்றியிரு கரம் பற்றியிழுக்கிறார்
துணைபுரி பரபோதா

மட்டற்றொளிர் கிரண முட்டுற்றடர் பரனே
கெட்டுற்றழித் திரண விட்டிற்கினை போரன்ன
பொதித்தேயுடல் சதித்தேவிட
மதித்தேயுனைத் துதித்தே நிதம்
மறமா மழுவர்கள் புறமே இழுக்கிறார்
மருவிடாய் அருள்போதா

✶ இம்மெட்டு சிந்துபைரவி இராகத்தை அடிப்படையாகக் கொண்டது.
✶ பதிகைக்கான மூலபாடம் : மரியதாசன், பக்கம் - 89

## மெட்டு இலக்கம் - 115

**மெட்டு :- பூரண சந்திரோதயம்**
**தாளம் :- ஆதி**

பூரணச் சந்ரோதயமானதோ எந்தன்
புத்திசுவாதீனமாய்ப்போனதோ அந்தப்
பொன்னைப்பளித்த மேனிபொருந்துமிவள்ராணியோ
எண்ணத்தகுமிவளென்கண்ணைக் கவர்ந்திட்டாளே

கண்ணைக்கவரும்பெண்ணிற் காதலேன்கொண்டாய்
கருத்து நிறைவேறுமோயாரதைக்கண்டார்
கட்டளகாளுனக்குக்கிட்டுவாள்என்றோநீயும்
அட்டவதானஞ்செய்யாவிட்டிடுவீரிந்த ஆசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* இம்மெட்டு சிந்துபைரவி இராகத்தை அடிப்படையாகக் கொண்டது.
* பதிகைக்கான மூலபாடம் : கருங்குயில் குன்றத்துக் கொலை.

## மெட்டு இலக்கம் - 116

**மெட்டு :- பத்தரை மாற்றுயர் தங்கம்**

**தாளம் :- சதுஸ்ர ஏகம் (மிஸ்ர நடை)**

*பத்தரை மாற்றுயர் தங்கம் - நல்ல*
*சித்தசன் தேவிபோல் அங்கம்*
*வித்தார மாமயில் கொங்கம் - வந்து*
*வீசுதென்றார் மிக்கோர் சிங்கம்*

*வள்ளிக் கொடியி லுலவும் - நல்ல*
*மின்மினிப் பூச்சிபோல் அலவும்*
*விள்ளும் நவரத்ன கசிதம் - அடர்*
*கொள்ளுமா பரண உசிதம்.*

* இம்மெட்டு கீரவாணி இராகத்தை அடிப்படையாகக் கொண்டது.
* பதிகைக்கான மூலபாடம் : கண்டி அரசன், பக்கம் - 32

## மெட்டு இலக்கம் - 117

**மெட்டு :- பதிநிகர் தந்திரியே**

**தாளம் :- ரூபகம்**

*பதி நிகர் தந்திரியே - அம்மா*
*மதியூக சுந்தரியே*
*பரலோக ராக்கினியே - அருள்*
*செய்வனத்திலம்மா*

*உருக்கமுள்ள கன்னியே - என்னை*
*கடைக்கண்ணால் பாருமம்மா*
*உருக்குல பூசணியே - எந்தன்*
*துயரங்கள் தீருமம்மா .*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பிற் சிறந்தவளே - உன்னைக்
காப்பாற்றி ஆண்டிடுவேன்
கலந்தனை நீக்கி என்றும் - உந்தன்
இடுக்கண் களைந்திடுவேன்

✶ இம்மெட்டின் இராகம் நடபைரவி.

✶ பதிகைக்கான மூலபாடம் : ஜெனோவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புத் தருக்கள்

பெரும்பாலான கூத்துக்களில் தமிழ் இலக்கண செய்யுள் யாப்பமைவுக் குரிய பாடல்கள் விரவி வந்துள்ளன. அப்பாடல்களின் மெட்டுக்களை அந்தந்த யாப்பின் பெயரால் அழைக்கும் வழக்கம் யாழ்ப்பாண தென்மோடி கூத்துக்களில் காணப்படுகின்றது. அவ்வகைப் பாடல்களும், சிறப்புப் பெயருடன் தனித்துவமாக வழங்கிவரும் பாடல்களும் இப்பகுதியில் அடங்குகின்றன. இவை இக்கூத்துமரபின் உயிரைப் போன்றவை என்பது குறிப்பிடத்தக்கது.

## மெட்டு இலக்கம் - 118

**மெட்டு :- (எண்சீர்) விருத்தம்**

*வண்டலம்பும் பூங்குழலே வடக்கை மின்னே*
*வஞ்சியிடை யேகுலத்தின் மகிமை சேரும்*
*விண்டலஞ்சேர் தண்மதியை வென்ற ரூப*
*வெல்லமொழி மெல்லியளே விளம்பக் கேளும்*
*பண்டுவதி ஊரெதுநற் குலந்தன் னோடு*
*பாரிலுயர் அன்னைதந்தை யுடனும் பேரும்*
*மண்டிருள்சேர் இவ்வனத்தில் வந்த வாறும்*
*மாற்றமின்றி யெந்தனுக்குச் சாற்று வீரே.*

✶ இம்மெட்டு சங்கராபரணம் இராக சாயலை அடிப்படையாகக் கொண்டதாகும்.
✶ பதிகைக்கான மூலபாடம்: விசயமனோகரன், பக்கம் - 71

## மெட்டு இலக்கம் - 119

**மெட்டு :- விருத்தம்**

*வாள் கரம் துலங்கும் எந்தன்*
*வரிசை சேர் வீரரே கேள்*
*நாடது தனிலே நீங்கள்*
*நட்புடன் சிறையில் வைத்தே*
*சூழ் புவி தனிலே சென்று*
*துர்க்குணன் தனை அழைத்து*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழி சூழ் ஆளும் உங்கள்
அரசன் முன் வருகு வீரே

✶ இம்மெட்டின் இராகம் சங்கராபரணம்
✶ அறுசீர் விருத்தங்களை சாதாரணமாக விருத்தம் என்றே அழைப்பர்.
✶ எண்சீர் விருத்தம் இசைக்கும் தன்மையில் இருந்து இது சற்று வேறுபட்டது.
✶ பதிகைக்கான மூலபாடம் : புனிதவதி (கையெழுத்துப்பிரதி)

## மெட்டு இலக்கம் - 120

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
விசேட சேர்க்கை

**மெட்டு :- கவி**

நடிக்கிறேன் சினேகன் போல
நான் சென்று நல்ல பாடம்
படிக்கிறேன் படித்தபின்பு
பாத்திபன் தன்னைக் கட்டிப்
பிடிக்கிறேன் அந்தவேளை
பிசகாமல் அவனைப்பற்றும்
முடிக்கிறேன் பழிகளெல்லாம்
மோசங்கள் நேர்ந்திடாதே

✶ இம்மெட்டின் இராகம் சங்கராபரணம்
✶ பதிகைக்கான மூலபாடம் : சங்கிலியன்

## மெட்டு இலக்கம் - 121

**மெட்டு :- சந்ததம் / சந்தத விருத்தம்**
**தாளம் :- சதுஸ்ர ஏகம்**

நிச்சய மென்றுள நொந்து வருந்தி நிகழ்த்திடு மந்திரியே
அச்சமில் லாதவ னெப்படி வேதம் தாகின னாகியவன்
மெச்சவி ருந்தெது பேசின னன்ன விதத்தை யிதத்துடனே
இச்சண மீதினி லிதைவிப ரத்தொ டெனக்குரை செய்வாயே

✶ இம்மெட்டின் இராகம் சங்கராபரணம்
✶ பதிகைக்கான மூலபாடம் : தேவசகாயம்பிள்ளை, பக்கம் - 56



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெட்டு இலக்கம் - 122

**மெட்டு :- சந்தததாழிசை**

**தாளம் :- சதுஸ்ர ஏகம் (திஸ்ரநடை)**

அந்தநாளில் நாம்வணங்கி ஆசரித்த தேவனை
இந்தநாளில் நீதொழா திருப்பதென்ன நீதியோ
எந்தன்நெஞ் சகத்துவேக மேறியாக மீறினால்
உந்தன்நெஞ் சதைப்பிளந் துயர்கழுவி லேற்றுவேன்.

✶ இம்மெட்டின் இராகம் சங்கராபரணம்
✶ பதிகைக்கான மூலபாடம் : தேவசகாயம்பிள்ளை, பக்கம் - 96

## மெட்டு இலக்கம் - 123

**மெட்டு :- அகவல்**

***விசயன் :***

நீர்வளம் பொலிந்து நித்திலங் கொளிக்கும்
ஏர்பெறின் நகரை எங்குமே மதிக்க

***மனோ :***

ஓர்குடை நிழலில் உற்றர சியற்றும்
சீர்மணி மகுடச் செம்மலே கேளும்

***விசயன் :***

திருவுள முணர்ந்தே திசையெலாம் வருந்த
அருமையாய் விதித்த ஆஞ்ஞையின் படிக்கே

***மனோ :***

திருமணி பணிகள் தேங்குமா ளிகையும்
உரிமைசேர் பொருளும் உமக்களித் தனமே

***விசயன் :***

நிந்தனை மொழியே நிகழ்த்தினோ மெனவே
முந்திடு பகைவர் முனைந்துநின் சமுகம்



85180C
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனோ :

வந்துரைத் ததுவும் வஞ்சமா மன்றி
சிந்தனை தனிலும் தீங்குசெய் தறியோம்

* இம்மெட்டின் இராகம் வகுளாபரணம்.
* பதிகைக்கான மூலபாடம் : விசய மனோகரன், பக்கம் - 95

## மெட்டு இலக்கம் :- 124

**மெட்டு :- ஆசிரியம் (வகை –I )**

காவல னெனது கட்டளை தன்னைக்
கருதியே நீலகண் டாகேள்
கையினால் விபூதி தனையள்ளிக் கொடுபோய்க்
கடுகவே பூசிநீ ராமன்

கோவிலிற் புகுந்துசிறீ ராமன் பதத்தைக்
கும்பிட்டா ராதனை புரிந்து
குருதரு விபூதி துளசிசந் தனங்கள்
குணத்துடன் வாங்கியென் சமுகம்

வாவுனக் கதிக வரிசைகள் தருவேன்
மணிமர கதங்களை யருள்வேன்
வளநக ரினுக்குத் தளகர்த்த னாக
வரிசைகள் தருவனென் னருகில்

மாவலு வுடனே காரியம் பகர
வலியதே சாதிக்கம் நடத்த
வல்லமை தருவேன் எமது தேவரைநீ
வணங்கிட மறுதலி யாதே

* இம்மெட்டு சங்கராபரணம் இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டது.
* ஆசிரிய விருத்தப்பாவிலே எழுதப்படும் பாடல்களே ஆசிரியம் என அழைக்கப் பட்டன.
* நாடக உணர்வுகளுக்கு ஏற்ப அரசன் போன்ற வீரப்பாத்திரங்கள் இவ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியத்தை துரிதமாய் இசைக்கும்போது வீரம், கோபம் வெளிப்படுவதாய் அமையும்.

★ பதிகைக்கான மூலபாடம் : தேவசகாயம்பிள்ளை, பக்கம் - 78.

## மெட்டு இலக்கம் - 125

**மெட்டு :- ஆசிரியம் (வகை – II)**

*மறுதலி யாதோ எனதுடை மனது*
*வன்புறு ராமனை வணங்க*
*வளநக ரிலங்கை ராவணன் றனது*
*மனைவியைப் பிடித்தொரு வனத்தில்*

*சிறையென விருத்திப் பலவசைப் படுத்துஞ்*
*செய்தியை ராமன்றா னறிந்து*
*சேனைவா னரத்தைப் படையென நடத்திச்*
*சென்றிலங் காபுரி யழித்து*

*திறலுடன் சீதை தனைச்சிறை மீட்டுச்*
*செங்கையி னாலர வணைத்துத்*
*தெசதர ராம னிருக்கின்ற நகரிற்*
*சிறப்புடன் கொண்டுசென் றிருத்தி*

*அறிவறி யாம லவனுமிஸ் திரியை*
*அனல்வளர்த் ததனிடை புகுத்து*
*மறிவழிந் தவனை வணங்கு வனாகி*
*லதைவிட வசையில்லை மன்னா*

★ இம்மெட்டு சங்கராபரணம் இராகத்தினை அடிப்படையாகக் கொண்டது.

★ நாடகக்காரன் பாத்திரம் பணிவுடன் உரைக்கும் பண்பிலே அமையும்போது ஆசிரியம் துரிதம் குறைந்து அமையும்.

★ பதிகைக்கான மூலபாடம் : தேவசகாயம்பிள்ளை, பக்கம் - 79



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெட்டு இலக்கம் - 126

**மெட்டு :- சீட்டு வாசகம்**

சகலதிவ்வியவாறு லட்சணதிரீத்துவ சறுவமூலாங்க மூல
தனான வானபர னருள் பெருகியுண்டாவ தாக வென்னென்
னாளுமே
புகலரிய சுகசெல்வ சகல சற்குணமுடைய புத்திவித்தாரராசன்
புகழ் பெறுந்தேவச் சகாய பூபாலனன் புடனறிய எழுது நிருபம்
விகலமில்லாத தவி தரசரதுகுலமுய்ய மேதினியில் வந்துதித்த
மெஞ்ஞான கன்னிமரி யம்மாடனைப் பணி விருப்பி னொடு
கோயில்கட்ட
அகலநீளங் கொண்ட மரமதாய்த்தம்மா லடுத்தளவனுப்ப
வேணும்
அறிய விந்நிருபமிப்படி யெழுது கையெழுத் தமர் குருப்பரஞ்
சோதியே

- ✶ இம்மெட்டின் இராகம் **சங்கராபரணம்.**
- ✶ ஆசிரியம் மெட்டின் இயல்பிலேயே இது பாடப்பட்டாலும் சீட்டு வாசகம் இசைக்கப்படுவதில் சற்று வேறுபடுகிறது.
- ✶ பதிகைக்கான மூலபாடம் : தேவசகாயம்பிள்ளை, பக்கம் - 50

## மெட்டு இலக்கம் - 127

**மெட்டு :- கலித்துறை**

கத்தனைத் தந்திடு கன்னிக்கோ ராலயங் கட்டுதற்கு
மெத்துர மாமரந் தாவெனச் சீட்டுவிட் டார்குருக்கள்
அத்திறஞ் சென்று தருவேனென் றேனன் மரந்தறிக்க
உத்தர வேபெற்று வாறே னிருமென்ற னொண்ணுதலே

- ✶ இம்மெட்டு **பைரவி** இராகத்தினை அடிப்படையாகக் கொண்டது.
- ✶ இப்பதிகைக்கான மூலபாடம் : தேவசகாயம்பிள்ளை, பக்கம் - 51



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெட்டு இலக்கம் - 128

**மெட்டு :- கலிப்பா**

*புலரிவந் திடப்பொற் சேவல் கூவிடப்*
*பூவண் டார்த் தெழப் பொன்மலை மீதெழும்*
*அலரி கண்டசெந் தாமரை போல்முகம்*
*அந்தித் தாமரை யாகிய தென் கொலோ*
*சிலரிகழ்ந் ததோதேர் வேந்தன் கோபமோ*
*தீய நோய்களோ தேவிதன் செய்கையோ*
*வலரியன் னரண வீரிய சூரிய*
*மந்திரத் தந்திரி யேநீ வகுப்பையே*

* இம்மெட்டு **பைரவி** இராகத்தை அடிப்படையாகக் கொண்டது.
* பதிகைக்கான மூலபாடம் : தேவசகாயம்பிள்ளை, பக்கம் - 20

## மெட்டு இலக்கம் - 129

**மெட்டு :- இசலி**
**தாளம் :- சதுஸ்ர ஏகம் (மிஸ்ர நடை)**

*எனதன்புநேச பிரியங்கள்கூரு மிருகண்களான மனைவி*
*வினைதங்கு லோக பிரபஞ்ச வாழ்வு விழலென்று ஆதிசுதனார்*
*தனைநம்பு ஞான செபமுந்தியான தவவன்போ டோதிவரிலோ*
*கனகங்கொள் ஞான பரமென்றவானக் கதிசென்று*
*பேறுபெறுவாய்*

*பெறுபேறதான பரலோகவாழ்வு பெறவேணுமாகி லுலகாள்*
*இறையானராய னியாயமான விடர்வாதையான திடுவான்*
*அறையாமலாக மலையாமல்வேத மயராமலே துணிவிரால்*
*பிரகாசமான பரலோகவாழ்வு பெறலாமெய் யாகுமிதுவே*

* இம்மெட்டின் இராகம் **சங்கராபரணம்.**
* பதிகைக்கான மூலபாடம் : தேவசாகயம்பிள்ளை, பக்கம் - 108



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெட்டு இலக்கம் - 130

**மெட்டு :- தாழிசை**

உருகுதே யனலின் மெழுகுபோல் மனது
உள்ளுடைந்து துயராகுதே
ஊனமான சிறை யான தேயிருத்தி
உற்றவன் குறித்த நாளிலே
மருள்மதம் விளங்கு மழுவரெம்முயிரை
மாய்ப்ப ரேது கதி யீசனே
மயங்கு மேழைகட்கு வயங்கு முன்னருளை
மனது வைத்தருள வேண்டினோம்

இருள்படர்ந் தவிட மருவகக் கொடிய
ஈனனா மரசன் தானுமே
ஏற்றமா னதொரு மாற்றமாங் குறைகள்
எண்ணிலா வெமையும் மண்ணிலே
பெருகு பாதகங்கள் புரியு நீசரென
பேசரும் பழிக ளேற்றியே
பேதமா யுயிரை வாதை செய்வதற்கே
பெருத்த தீர்வைய தளித்தானே

✶ இம்மெட்டு நடபைரவி இராகத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது.
✶ பதிகைக்கான மூலபாடம் : விசயமனோகரன், பக்கம் - 102

## மெட்டு இலக்கம் - 131

**மெட்டு :- பரணித்தரு**

**தாளம் :- மிஸ்ரசாபு**

**பரணி**

முடி சூடிப் படியாளும் கொடியோன் தீர்வை
முற்றுமணி யாயமது முடிவில்லானே
அடியானின் மிடிதீர அருளே தந்து
அவனிதனில் ஆதரித்து அருளுவீரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரணித்தரு

இந்தப் - படிமீது உனையல்லால்
துணை வேறு இல்லையே பரமநாதா
அருள் சொரி விமல போதா - உந்தன்
அரிய மலர்ப்பதமே விரவியருள வேண்டும்
வேத நாதா வினையகற்றும் ஞானரூபா

பொல்லா - அனியாய மாயரசன் முனிவா
னென்னுயிர் தன்னைப் பதைக்கத்தானே
கொடுமையாய் வதைக்கத்தானே - உந்தன்
கனிவான பதம்நம்பித் துணிவாய் யானுயிர்விடக்
காத்திடாயே உனது பதஞ் சேர்த்திடாயே.

- ✶ இம்மெட்டின் இராகம் ஹரிஹாம்போதி.
- ✶ பரணி தனியாகவும் பாடப்படுவதுமுண்டு.
- ✶ பதிகைக்கான மூலபாடம் : மரியதாசன், பக்கம் - 114

## மெட்டு இலக்கம் - 132

**மெட்டு :- கொச்சகம்**

பூவார் பூவில் என்னரசும் பொங்கும் முடியும் செங்கோலும்
மேவார் சிம்மாசனம் மிகவே இழந்து இங்கு வந்தேன்
காவார் கனியின் உறைவிடமும் கடலார் கரையின் மறுபுறமும்
கூடவார் நீயே அன்றியவர் குருசாசனமாய் கொண்டவரே

- ✶ இம்மெட்டு நடபைரவி இராகத்தை அடிப்படையாகக் கொண்டது.
- ✶ பதிகைக்கான மூலபாடம் : கருங்குயில் குன்றத்துக் கொலை

## மெட்டு இலக்கம் - 133

**மெட்டு :- இன்னிசை (வகை – I)**

முல்லையர் மாடா டெருமை மோதலில் வான்மீ துவந்த
வெல்லையர் பொற்பாத அர விந்தமலர் சிந்தை கொண்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லனைய நுதலா ளேமெய்ஞ் ஞானஸ் நான மென்னும்
எல்லையில் லாநன் மைபெற இன்றெ ழுந்துசெல் வோமே.

- ✶ இம்மெட்டின் இராகம் நடபைரவி.
- ✶ கொச்சகப் பாவாக எழுதப்பட்டுள்ள இவ் யாப்பு இசைப்பதில் வேறுபாட்டைக் காட்டுவதற்கூடாகவே இன்னிசை எனப்படுகிறது.
- ✶ பதிகைக்கான மூலபாடம் : தேவசகாயம்பிள்ளை, பக்கம் - 42

## மெட்டு இலக்கம் - 134

**மெட்டு :- இன்னிசை (வகை – II)**

வாட்டியுமைக் கோட்டிசெய்த வன்மமுறு யூதர்தாம்
ஈட்டியத னாற்பிழந்த எண்ணடங்காக் காயமுடன்
நாட்டிய சிலுவைதனில் நாணமுட னேமரித்த
ஏட்டடங்கா நின்தயவென் நெஞ்சைவிட்டு நீங்காதே.

- ✶ இம்மெட்டின் இராகம் நடபைரவி
- ✶ இன்னிசை இசைக்கப்படுவதில் இருவேறு மரபுகள் காணப்படுகின்றன.
- ✶ பதிகைக்கான மூலபாடம் : மரியதாசன், பக்கம் - 93

## மெட்டு இலக்கம் - 135

**மெட்டு :- வசனகவி – தரு**

**தாளம் :- ரூபகம்**

மன்னவனும் நீயோ வள நாடும் உன்னதோ
உன்னை அறிந்தோ தமிழை ஓதினேன்
காதலை ஏற்காக் காதகனானாய்
சாதலைத் தந்திட்ட பாதகனானாய் - நீ

(மெட்டு :- மாகொடும்பாவி ஐயோ ... (முத்தா மாணிக்கமா...)

காதலையே யறியா பொல்லா காதகனே மன்னா
பாலனையே கொல்லும் காவலனே அழிவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெத்தமனமறியா பொல்லா தப்பிதமே செய்தாய்
உத்தமனென்றிருந்தேன் நீயோ சத்துரு வாகி னாயே

✶ இம்மெட்டு நடபைரவி இராகத்தின் சாயலை அடிப்படையாகக்கொண்டது.
✶ தனியே வசன கவியை பயன்படுத்தும் வழக்கமும் உள்ளது.
✶ இப்பதிகைக்கான மூலபாடம் : கம்பன் மகன், பக்கம் - 54

## மெட்டு இலக்கம் - 136

**மெட்டு :- தேவாரம்**

நிலைதளர்ந் திட்டே நானும்
நெட்டுயிர்ப் பெறிந்தே கைகால்
அலைவதோ கடின மாகி
அசைந்திடா மயங்கிச் சோர்ந்தே
நிலவுல கதனை விட்டு
நேத்திரஞ் சுழன்று மூடி
தலையதில் ஆணி பீறத்
தயங்கிடா தாட்கொள் வீரே

✶ இம்மெட்டின் இராகம் ஹரிஹாம்போதி
✶ பதிகைக்கான மூலபாடம் : மரியதாசன், பக்கம் - 119

## மெட்டு இலக்கம் - 137

**மெட்டு :- ஓரிசம்**

**தாளம் :- (லயக்கருவி; பாடலின் பாவத்துக்கேற்ப ஒலிக்கலாம்.)**

வானத்தையும் லோகத்தையும் வரையானதுந் தரையானதுந்
பானொத்த செஞ் சுடரானதும் பளிரானவெண் மதியானதும்
மீனொத்ததா ரகையானதும் விடிவானது மிரவானதும்
தானொக்கவே யாகட்டெனுஞ் சருவேசுரா சருவேசுரா.

என்னாதனே கிருபாகரா வெளியேன்வெகு பவகாரனான்
உன்னாதர வல்லாலெனக் கொருபேர் துணை யிலையேகனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னாக் கொலு மலையானதில் சீடர்க்கருள் புரிதேவனே
தன்னோடெதி ரில்லாதவா கருவேசுரா சருவேசுரா

✶ இம்மெட்டின் இராகம் நடபைரவி
✶ பதிகைக்கான மூலபாடம் : தேவசகாயம்பிள்ளை, பக்கம் - 134

## மெட்டு இலக்கம் - 138

**மெட்டு :- ஒப்பாரி**

**தாளம் :- மிஸ்ரசாபு**

*ஞான :*

அரியநேசத் தலைவானாமென் னன்பனையே வன்பினாலே
அரசனுங்கட் டியடித்தானே - ஆறாதே

*கற் :*

உரியவாதி சுதனையன்று உணர்வில்லாத யூதர்சென்று
உறுக்கிவன்பா யடிக்கவில்லையோ - சலியாதே

*ஞான :*

வனசமலர் நிகர்சரணில் வல்விலங்கிட் டேயெருமை
மாட்டிலேற்றிக் கோட்டிகொண்டாரே - ஆறாதே

*கற் :*

முனைசேர்முள்ளின் முடியழுத்தி முறிந்தநாற்கா லியிலிருத்தி
மோடிசெய்த கதையறியீரோ - சலியாதே

✶ இம்மெட்டின் இராகம் சங்கராபரணம்
✶ இத்தருவை துக்கராகம் என்ற பெயரிலும் அழைப்பர்
✶ மரணச்சடங்குகளிலும், பாஸ்காகாலத்தில் தேவாலயத்திலும் இம்மெட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது.
✶ பதிகைக்கான மூலபாடம் : தேவசகாயம்பிள்ளை, பக்கம் - 137



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெட்டு இலக்கம் - 139

மெட்டு :- **காதல்**

சுயம்வரத்தை வென்றவனே சுத்தசித்த வுத்தமனே
நயவசனம் காட்டியிந்த நரபதியென் பாலர்களை

கையோடுலக் கையிட்டென் கண்மணியைக் குத்துவித்தான்
ஐயோமனம் பொறுக்க ஆகாதே ஆண்டவனே!

தந்தைமுகம் காணவில்லை தங்கைமுகம் காணவில்லை
எந்தன்முகம் காணாது எடுத்தீரோ நின்பதியே

நிட்டூர மன்னவனின் நீசநினை வானதினால்
வெட்டினான் பாலகரை வெஞ்சினங் கொண்டென்னையுமே

✶ இம்மெட்டின் இராகம் நாடகப்பிரியா
✶ பதிகைக்கான மூலபாடம் : கண்டி அரசன், பக்கம் - 101
✶ இம்மெட்டு துக்கஇராகமாக தேவாலய பாடல்களிலும் பாடப்படுகிறது.

## மெட்டு இலக்கம் - 140

மெட்டு :- **உலா**

***விசயன் :***

சோதிச் சுடரொளியே
தூய பரி பூரணனே
நீதிநெறி யற்ற பொல்லா
நிருபனெமை - வாதுடனேவி

***மனோ:***

எம்மாவி போக்குதற்கு
எண்ணமின்றி யேவிதித்தான்
இம்மானிலத் தெமக்கே
ஏற்றதயை - செம்மையுற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விசயன் :**

மாயசுக போகமதில்
மாறாக நாமமலைந்தே
தூயோனுமை மறந்த
தொன்மையதோ - ஆயபூவில்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

**மனோ :**

அங்கம் பதறுகுதே
ஆவியுடல் சோருகுதே
துங்கபரனே யுனது
துணைதரவே - இங்கு மிகு

✶ இம்மெட்டின் இராகம் நடபைரவி
✶ இப்பாடல் துக்கராகமாக பாஸ்கா காலத்தில் ஆலயங்களிலும் பாடப்படுகிளது.
✶ பதிகைக்கான மூலபாடம் : விசய மனோகரன், பக்கம் - 116

## மெட்டு இலக்கம் - 141

**மெட்டு :- கல்வெட்டுச் சிந்து (வகை – I)**
**தாளம் :- சதுஸ்ர ஏகம்**

மாசுற்ற அகிலகுல நிலமலையோ டிருமும்
மதத்து நிலைதடு மாறினும்
வடசிகரி பொடியினும் படியிடியினுங்
கடகவான் கூடமுக டிடியினும்
தேசுற்ற குடவளைத் தரளந்தெறித் துவரு
திமிர வாருதி சுவறினும்
திசைகட்டு மாறினும் இரவுபக லாயினும்
திவச மிரவாகி வரினும்
காசுற்ற மணிமகுட மன்னரர சாள்தரு
கலிங்கங் குலிங்க மீழங்
கருதரிய சீனமா றாடமக்கத் தினோடு
கவி குவட்டத்து ளென்றன்
பேசுற்ற ஆணையை மறார் நீலகண்டனென்
பேச்சினை மறுக்க வென்ன
பெரியனோ வவனுடல் பிடுங்கிநாய் நரிகழுகு
பேயுண்ண வுதவேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்து

### பல்லவி

இப்படியுஞ் சொன்னானோ நீலகண்டன் -
இப்படியும் சொன்னானோ.

### அனுபல்லவி

வெப்பழற்குளிட்டஅரக் குக்கொதிப்பதெனக்கோப
மப்பபடிக்கொதித்தெழுதே யிப்படிநீலகண்டனை
மெய்க்கரக்கட்டுடன் ரத்தங் கக்கிடச்சிக்கெனப்பற்றி
இக்கணத்துக்கிரத்துடன் சக்கரத்திற்றிரிப்பிப்பேன்

### சரணங்கள்

சிங்களந்துளுவங் கொல்லஞ் சீனமாறடமச்சை
சிந்துவுடன் வங்கமங்கஞ் செப்புநல்லகொங்கணிய
தேசங்கள் தனை ஆளும் - அதிகபெல
ராசர்களெனைநாளும் - தேடிவந்து
திறைதந்து முறைகொண்டு செயதுங்கரணசிங்க
திகழ்சந்த்ர முடிதங்கும் அரசன் நானாயிருக்கச்
சிவனையும் பழித்தானோ - நீலகண்டன்
அவனைநான் விழிப்பேனோ - சீக்கரந்தனிற்
சிந்திடச்சில்லிரத்தங்கள் அந்தரத்தெழுந்துதலை
பந்தெனப்பறந்துருள இந்தநேரந்தனிற் கொல்வேன்
(இப்படி..)

பண்டறிவில்லாதபல மிண்டுசெய்யும் அண்டலர்கள்
தொண்டுசெய்யவென்றரசு கொண்டவென் சொல்லின்றிவைத்த
பாலையுங்காகங்குடிக்குமோ - பருந்தருந்த
வேலைதங்கு மீன் துடிக்குமோ - அல்லாவிலகம்
பஞ்சினில்நெருப்புவைத்து மிஞ்சுருத்திகொடுத
அஞ்சி யங்கிழுமுறாவன் னெஞ்சுகொண்டநீலகண்டன்
பார்த்தறிந்துமிருந்தானோ - படியிலவன்
நாத்தறித்துவருத்தேனோ - இந்நாட்டுடன்
பட்டணமெல்லாமெனக்குள் மட்டடங்கவேயவனைக்
கட்டியிழுத்துக்கழுத்தை வெட்டிடத்திட்டஞ்செய்குவேன்
(இப்படி..)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* இம்மெட்டு **கீரவாணி** இராகத்தை அடிப்படையாகக் கொண்டது.
* கல்வெட்டென இந்துக்கள் 'சமரகவி'யைக் குறிப்பர். ஆனால், கத்தோலிக்க கூத்துக்களில் ஆசிரிய விருத்தத்தில் சந்தம் சேர்ந்த முடுகு நடையில் எழுதப்படும் பாடலாக, கோப உணர்வை வெளிப்படுத்தவல்ல பாவாக இதனை அமைத்திருப்பர். இதனுடன் இணைந்ததாக 'சிந்து' அமையும். இதனை 'கழிநெடில் சிந்து' எனவும் அழைப்பர்.
* கல்வெட்டு ஒன்றாக அமையினும் பின்னால் இசைக்கப்படும் சிந்து பல்வேறு வகைகளில் அமைகின்றது. இதில் இசைக்கப்படும் தன்மை வேறுபாட்டுக்குரிய நான்கு சிந்து இனங்கள் இணைக்கப்பட்டுள்ளன.
* பதிகைக்கான மூலபாடம் : தேவசகாயம்பிள்ளை, பக்கம் - 57

## மெட்டு இலக்கம் - 142

**மெட்டு :- கல்வெட்டு சிந்து (வகை – II)**

**தாளம் :- சதுஸ்ர ஏகம்**

*ஓரா யிரங் கதிர்கள் ஒழுங்கிட் டெழுஞ்சுடரும்*
*உருண்டுவரு முலக மெல்லாம்*
*ஒளிப்பெற்ற நவரெத்ன மணிசித்ர தனுவுற்றே*
*ஒட்டலரை வெட்டி யெறிந்தே*

*தாரா யிரம்புனைந்த தவிசுற்ற முடிமன்னர்*
*தண்டுறுமென் நாம மறிகில்*
*தட்டிட்டு முட்டிட்டு கெட்டுள்ள மேங்கியே*
*தடதடத் தொடுங்கி நிற்பர்*

*பேரா யிலங்குதிற மோராது வரேந்திரன்*
*பேதையென் றெனைநினைந்தான்*
*பட்டியுறு கெட்டகதை முட்டவரி தொட்டதோ*
*பாடென்ன கேடென்னவாய்*

*சீரா யிலங்குபடை தனையுந்து மவநொந்து*
*சினமுந்தி யழல்கொந்தெழ*
*திட்டமுட னட்டதிசை இட்டுமெரி கொட்டியவன்*
*தீங்குபழி வாங்கு வேனே*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சிந்து

திடத்துட னடக்குவேனே - தீரமா சேனைகள்
விடுத்தமர் தொடக்குவேனே
திடத்துட னடக்குவேனே
விடுத்தமர் தொடக்குவேனே
ஈதல பாதல மாதல மீதுள
மேனலராகுல மாகுழையாயுள
சாலுறு மாலொடு காலனு மேயழ
வேலது விட்டுமல் லோலகல் லோலமாய்
(திடத்துடன்)

தனத்தினில் மிடுக்கதாமோ - அன்றிடில் வென்றிட
மனத்தினில் துடுக்குத்தானே
தனத்தினில் மிடுக்கதாமோ
மனத்தினில் துடுக்குத்தானோ
தண்டுறு மெண்டிறல் இண்டு மதிர்ந்திட
கொண்டுறு மன்னகர் இண்டுமழிந்திட
குண்டு பீரங்கிகள் விண்டு மதிர்ந்திட
ரண்டு பூமண்டலங் கண்டு மடங்கிட
(திடத்துடன்)

வரத்தினில் மிகுத்தமரோனே - அழகேசனென்றால்
சிரத்தையுடனே பணிவானே
வரத்தினில் மிகுத்தமரோனே
சிரத்தையுடனே பணிவானே
வண்டனை இண்டுமே துண்டமா கண்டமாய்
கொண்டுமே மண்டைகள் துண்டு படக்கெடி
அண்டல மண்டல மிண்டு மடங்கலும்
எண்டுல விண்டுமே அண்டையோர் மண்டிட
(திடத்துடன்)

ரெத்னமுடி தத்துமரசர் - தினந்தினம்வாய்
பொத்திப்பதம் முத்தி செய்யவே
ரெத்னமுடி தத்தரசர்
பொத்திப்பதம் முத்திசெய்யவே
இத்தரை என்வலி சற்று மறிந்திடா
னுற்றநகர்க்கெரி இட்டு வருத்தியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்த கயத்த வயத்த புயத்திரு
சத்துவ மெத்து மகத்துவ நாட்டினை
(திடத்துடன்)

✶ இம்மெட்டு கீரவாணி இராகத்தை அடிப்படையாகக் கொண்டது.
✶ இம்மெட்டின் இசைப்பு முறை நெடுந்தீவுப் பிரதேசத்தில் இசைக்கப்படும் தன்மையினைக் கொண்டது.
✶ பதிகைக்கான மூலபாடம் : மரியதாசன், பக்கம் - 121

## மெட்டு இலக்கம் - 143

**மெட்டு :- கல்வெட்டு சிந்து (வகை – III)**
**தாளம் :- சதுஸ்ர ஏகம்**

சீரேறும் வரேந்திரனென் நாமமது கேட்டிடில்
திக்கெட்டும் நெக்கி விடுமே
சேருமம ரோனினிறை ஆகினவன் தானுமே
திகைத்துவாய் புதைத்து நிற்பான்

நேரேறும் மலைகள்தான் வேரோடு பாறுமே
நேர்புவன மானதுங் குலுங்குமே
நேமியனல் விதுருமே பூமிசுட ரதிருமே
நிலையாழி சலஞ்சு வறுமே

தாரேறு மெந்தனுடை தத்துவம தறிந்திடா
தானழ கேசன் என்போன்
தண்டுடன் வந்ததிக மிண்டுபடை பொருதவே
தானதிக மமதை கொண்டான்

பேரேறு மென்னெதிரே மாறாக வந்திடும்
படையதைச் சூறை யாக்கி
பார்மீது அவனையும் பந்தித்து நானுமே
பதைக்கவதை புரிகு வேனே

சிந்து
விட்டிடேனென்றே யுரையடா - சிறையுள் ளோனை
விட்டிடேனென்றே யுரையடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டி டேனென்றே யுரைத்துப்
பட்டணத்தைச் சுட்டெரித்து
கெட்டியுடலே சரித்து மட்டியவன் மக்கரிக்க
(விட்டிடே)

மிக்குறு கெறுவமே போக்கி - அவனுடலைக்
குக்குடன் நரிகளுக்கீக்கி
அண்ட கடாகம் வெடிக்க
மண்டலத்துள்ளோர் வெடிக்க
வண்டனுடலம் வெடிக்க கண்டவர் மனந்துடிக்க
(விட்டிடே)

அப்படிக் கெறுவமென்னடா - அவன் படையோ
டிப்படிவரவே சொல்லடா
தப்பிலியவன் மதத்தை
ஒப்பியேயவன் திறத்தை
சிக்கிடக் கைகா லுரைத்தைநெக்கிடச்செய்வேன்சிரத்தை
(விட்டிடே)

✶ இம்மெட்டு **கீராவணி** இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டது.
✶ பதிகைக்கான மூலபாடம் : மரியதாசன், பக்கம் - 124

## மெட்டு இலக்கம் - 144

**மெட்டு :- கல்வெட்டு சிந்து (வகை – IV)**
**தாளம் :- சதுஸ்ர ஏகம் (மிஸ்ரநடை)**

அண்ட பகிரண்ட கோளங்கள் நிலைமாறினும்
அட்டதிசை கொட்டுவரினும்
அலைகடல்கள் சுவறினும் மலைநிலைகள் பெயரினும்
ஆடகம் பீடை பெறினும்
சண்டவேகம் கொண்ட மா கொண்டலுக்கிரம
தனிலே வீழ்வுபடினும்
சங்கிலியனெனு நாம மென்றிடில் புவியெலாம்
சடுதியில் நடுங்கிடாதோ
வருடருள் கீழ் மறையர் விண்டபொய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரை கொண்டு மாமகன் ஆசிவனையோ
வஞ்சித்து நெஞ்சத்து அஞ்சிச்சித் திடாத்துட்ட
மறை கொண்ட அவனை நானே
துண்டு துண்டாகவே யங்க மேங்கிட வெட்டி
தொடர் கூளியின் முன்னவே
தொல்லுலகில் என்னாண்மை வல்லபங் காட்டுவேன்
துட்டனே வணங்குமாறே

### சங்கிலி - பிராமணன் (சிந்து)

***சங்கிலி :***

மைந்தனென் மறை நிந்தை செய்திடவோ மிகு மோசமேகொடு
மாமறைக் குரவோரை வைதிடவோ
வஞ்சனானவன் நெஞ்சு கொண்டுமா
பஞ்சபாதக மிச் செகஞ் செய்யின்
வாளினிற்குயிர் ஈவதன்றியே
நீளு பூவினில் வாழவையேனே

***சங்கிலி :***

மாபெருஞ் சிவனாரையோ மிகத் தூற்றினான்

***பிராமணன் :***

அவன் பூ பெரும் புகழோடு யேசுவைப் போற்றினான்

***சங்கிலியன் :***

பெருஞ் சாபமுற்றிரு நீசகோபமே யேற்றினான்.

***பிராமணன் :***

அனுதாப முற்றவன் தன் பெயர் கூட மாற்றினான்

***சங்கிலியன் :***

இந்த ஆபெருங் கொடிதான துட்டனை ஒரு பெரும் புவிமீது விட்டிடில்
ஈழபரம் வரும் மேலதாம் நய தீபமும் இருளானதாகையால்

✶ இம்மெட்டும் **கீரவாணி** இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டது.
✶ பதிகைக்கான மூலபாடம் : சங்கிலியன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெட்டு இலக்கம் :- 145

மெட்டு :- கப்பற்பாட்டு (ஏல ஏலோம்)

தாளம் :- ரூபகம்

*மாலுமி :*

**பல்லவி**

ஏல யேலோம் ஏல வலி - தத்தெய்தாம்
ஏலவலி யேலயேலோம்.

**சரணம்**

மேலோங்கு றோமை விட்டு - நாங்கள்
விளங்கெசித்தூர் செல்வதற்கு
மாலோங்கு நங்கூரந் - தூக்கி
வலித்திடுவீர் பாய்களெல்லாம்

பாலான பின்னணியில் மேவியே சென்று
பக்குவமதாகவே சுக்கான் பிடித்து
மாலாஞ்ச முக்காவை வளமுடன் பார்த்து
வரிசையுறு கொம்பாசை வைத்து நீரோடி

நூலாலிளைத்திட்ட சவுதாரிப்பாயை
நுடங்கிடாதே பின் னடங்கிடக்கட்டி
காலானதாந் பொருமு காவியாக்கட்டி
கடுவேகமாகவே விடுவீர்கள் கப்பல்

*கலாச :*

புகை புகைந்து அனல் பொழியும் - ஸ்ரர்ப்
போலி மலை தெரியுதடா
வகை செறிந்த நேப்பிள் நகர் - தன்னை
மருவிவலம் வருகுதடா

செகமெங்கு மஞ்சவக்கினி கக்குகின்ற
சிசிலீதீ வெற்னாபருவத மிதோபர்
தகைகொண்ட நங்கூர மதையிங்குவைத்துத்
தவறாதுகெந்தகமும் உப்புக்களுமேற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகை கொண்ட மாலுமிகள் சோபனம் பாடித்
தூக்கியே பாய்களைத் துரிதமாயோடி
வகை கொண்ட மோல்றாத் தீவைக் கடந்து
மெதிற்றேனியாக் கடலில் வந்ததே கப்பல் - ஏ

* இம்மெட்டு சிந்துபைரவி இராகத்தை அடிப்படையாகக் கொண்டது.
* இது கிராமிய மெட்டாக பயன்படுத்தப்பட்டாலும் நாட்டுக் கூத்தில் தனித்துவ மானாதாக வெளிப்படுகிறது.
* பதிகைக்கான மூலபாடம் : எஸ்தாக்கியார், பக்கம் - 46.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபைத்தருக்கள்

கூத்துக்களில் அண்ணாவியார், பிற்பாட்டுக்காரர், பக்கவாத்தியக்காரர் இணைந்த குழுவினரையே 'சபையோர்' என அழைப்பர். பிற்பாட்டுக்காரரால் அல்லது அண்ணாவியாரால் பாடப்படும் 'படர்க்கை'யில் அமையும் பாடல்களே 'சபைப்பாடல்கள்' அல்லது 'சபைத்தருக்கள்' என அழைக்கப்பட்டன. இப்பகுதியில், கூத்தில் பயன்படுத்தப்பட்ட வேறுமெட்டுக்கள் தவிர்ந்த சில சபைத்தருக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## மெட்டு இலக்கம் - 146

**மெட்டு :- ராசமகா இிராசன் வந்தான்**

**தாளம் :- சதுஸ்ர ஏகம்**

***பல்லவி***

*ராசமகாராசனும் வந்தான் - வஞ்சி மார்த்தாண்ட*
*ராசமகாராசனும் வந்தான்*

***அனுபல்லவி***

*ராசமகராசர் அதி நேசமாயிறைஞ்சித்துதி*
*பேசப்பற்பனாத புர தேசமதை ஆளுகின்ற*

***சரணம்***

*தவளச் சக்ரக் குடைகள் நீடவே - இரு மருங்கும்*
*தக்க வர்ணக் கொடிகளாடவே*
*எவர்களுமிகத்துதிக்க ரத்தினமணி கதிக்க*
*நவமணியொளியுதிக்க நரபாலர் மிக மதிக்க*

*சேனைகளருகிற் சூழவே - மலர்ப்பதத்தைச்*
*செருநர்கள் பரவித் தாழவே*
*ஆனை ரதம் புரவியோடு அரிய காலாட்கள் நீடு*
*கோனென மிகு மேம்பாடு கொண்டு வெற்றி மாலை சூடு*

✶ இம்மெட்டு மாயா மாளவ கௌளை இராகத்தை அடிப்படையாகக் கொண்டது.

✶ அரச வரவுத்தருவாக பயன்பட்டுள்ள இம்மெட்டு ஆடற்றருவாக பயன்படுத்தப் பட்டிருக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✶ பதிகைக்கான மூலபாடம் : தேவசகாயம்பிள்ளை, பக்கம் - 07

## மெட்டு இலக்கம் - 147

**மெட்டு :- கனகங்கள் ஒளிதங்கு**

**தாளம் :- சதுஸ்ர ஏகம் (மிஸ்ர நடை)**

*கனகங்கள் ஒளி தங்கு தரளங்கள்*
*புரளுபொன் மார்பினான் - வெகு*
*கதிதங்கு துரகங்கள் இரதங்கள்*
*படை பொங்கு போரினான்*

*தின மண்டர் கொடிமண்டு மதிமந்திரி*
*தேவ சகாயனார் - காதை*
*தெரிகொண்டு உரைவிண்டு சொலவென்று*
*புலசந்தோர் தோற்றினார்*

*நிறை மண்ட மறை நின்று முறையென்றும்*
*அறைகின்ற காதையை - நெஞ்சின்*
*நியமங்கள் கொண்டுரை நயமிஞ்சு*
*புலசந்தோர் தோற்றினார்*

✶ இம்மெட்டு **ஹரஹரப்பிரியா, சாருகேசி** ஆகிய இராகங்களின் கலப்பாக அமைந்துள்ளது.

✶ பதிகைக்கான மூலபாடம் : தேவசகாயம்பிள்ளை, பக்கம் - 01

## மெட்டு இலக்கம் - 148

**மெட்டு :- நவசங்க சபைதங்கு**

**தாளம் :- ஆதி (மிஸ்ர நடை)**

*நவசங்க சபை தங்கு மாசிலான் - யேசு*
*நாயகனிருபாதம் போற்றியே - உயர்*
*சபைமுன்பு ஆரம்பமாகவே - இந்தத்*
*தரைதன்னில் கிறீஸ்தவர் தோற்றினார்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதியெங்குந் துதி பொங்கைங் காயனார் - ஞானம்
பயில்கின்ற தேவசகாயனார் - வெகு
கதிதங்கி வருபவனிருபதந் - தொழக்
கருதியே கிறீஸ்தவர் தோற்றினார்.

மணிமுடி சிரமீதிலணிந்திடும் - வஞ்சி
மார்த்தாண்டன் வினையுட் பணிந்திடும் - வாதை
இனையின்றிப் படவே துணிந்திடும் - மந்திரி
யிருபதந்தொழுதிட வருகின்றார்.

✶ இம்மெட்டு கீரவாணி இராகத்தை அடிப்படையாகக் கொண்டது.

✶ பதிகைக்கான மூலபாடம் : தேவசகாயம்பிள்ளை, பக்கம் - 120.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்னிணைப்புக்கள்

யாழ்ப்பாணத் தென்மோடிக்கூத்துக்களில் பிற்பட்ட காலங்களில் இணைக்கப்பட்டதாகக் கருதப்படும் சிலபாடல்கள் இப்பகுதியில் அடங்குகின்றன. இவை 'கூத்து மெட்டுக்களல்ல' என்ற வாதவிவாதங்கள் உள்ளன.

## மெட்டு இலக்கம் - 149

**மெட்டு :- பத்தினிக் கற்பகமே**
**தாளம் :- ரூபகம்**

*பாண்டியன் :*

பத்தினிக் கற்பகமே எனதரும்
பாக்கிய லட்சுமியே - அகமத
மெத்தப் பொலிவிழந்தே வருந்திட
உற்ற துயரமென்னோ.

*கோகோப்பெருந்தேவி :*

இந்நிலம் ஆளிறையே எனதரும்
கண்ணிமை காதலரே - அடியவள்
மின்னொளிவேவு சிலம்பெடுத்திடா
தென்ன முறையறியேன்

*பாண்டியன் :*

செப்பனிட்டுத் தரவே பத்தனிடம்
ஒப்படைத்த சிலம்பை - இதுவரை
சீர்புரிந்தே கொடுக்காதவன் என்ன
செய்தானோ வையமீதே

*கோப்பெருந்தேவி :*

வையமீதென் துரையே உமதரும்
தையலென் காற்சிலம்பை - அவகடம்
செய்ய மனம் துணிந்தே முறையென
ஐயமுறுதே நெஞ்சே

★ இம்மெட்டு **சிந்துபைரவி** இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டது.
★ இப்பாடல் பெருவழக்காக பாசையூர் பகுதியிலேயே காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✶ பதிகைக்கான மூலபாடம் : முத்தா மாணிக்கமா (கையெழுத்துப் பிரதி)

## மெட்டு இலக்கம் - 150

**மெட்டு :- அழகினொளியே**

**மூலமெட்டு :- மதுரக்கிளியே**

**தாளம் :- ஆதி**

அழகினொளியே எந்தன் மயிலே
அன்பின் உயிரே - இந்த
சபையில் வந்தாடுவாயென் கிளியே
அமராபதியே எந்தன் எழிலே - உந்தன்
வதனங் கண்டயர்ந்தேனே நிலவே

இதழின் அழகோ கொவ்வைப் பழமோ
செம்மை நிறமோ - உந்தன்
கூந்தல் அழகோ கங்கா நதியோ
கொங்கை அழகே வரை முகடோ
கைகளிரண்டும் வாளை மடலோ

கண்களிரண்டும் கயல் மீனா
மயல் தானோ - உந்தன்
கன்னஞ் சிவந்த நிறச் சிமிழோ
அன்ன நடை கண்டயர்ந்தேன் - உன்னை
கண்டதால் என்னை இழந்தேனே

✶ இம்மெட்டு சிந்துபைரவி இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டது.
✶ பதிகைக்கான மூலபாடம் : கம்பன் மகன், பக்கம் - 51

## மெட்டு இலக்கம் - 151

**மெட்டு :- தென்றலு மெந்தனை**

**மூலமெட்டு :- கச்சளமெத்துநெய்**

**தாளம் :- ஆதி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்றலு மெந்தனை நகைத்துச் சிரிக்க
கொன்றிடு சிந்தனை வதைத்து உருக்க
வாடிடடச் செய்தாளே - தனிமையில்
பாடிடடச் செய்தாளே - பித்து
பிடித்திடச் செய்தாளே - உளம்
துடித்திடச் செய்தாளே

சந்திரனை யொத்த மஞ்சள் முகமவள்
இந்திரனை மாய்த்த கொவ்வை யழகவள்
காணக் கிடையாளோ - களி
கூரக்கிடையாளோ - கூடி
ஆடக்கிடையாளோ - உடன்
கூடக்கிடையாளோ

✶ இம்மெட்டு நடபைரவி இராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டது.
✶ பதிகைக்கான மூலபாடம் : கம்பன் மகன், பக்கம் - 36

## மெட்டு இலக்கம் - 152

**மெட்டு :- ஞானகுருவே தலைவா**
**மூலமெட்டு :- நடைசாரி**
**தாளம் :- சதுஸ்ர ஏகம் (மிஸ்ர நடை)**

ஞான குருவே தலைவா
நாடினேனுன் பாதமையா - இந்த
ஈன னெனை ஏற்றுமது
சீடனாகக் கொள்ளுமையா.
வீரனாக ஆவல் கொண்டேன்
வித்தை கற்றே தந்திடையா.

✶ இம்மெட்டின் இராகம் **சங்கராபரணம்**
✶ தேவாலய சுரூபப்பவனிகளில் நடைசாரி என வழங்கப்படும் மெட்டாகவும் இது உள்ளது.
✶ பதிகைக்கான மூலபாடம் : ஏகலைவன் (கையெழுத்துப் பிரதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களத் தரு

எல்லாக்கூத்துகளும் நிறைவடைவது, மங்களம் பாடுதல் அல்லது வாழிபாடுதல் என்னும் வாழ்த்துப்பாடலுடனேயாகும். தென்மோடிக் கூத்துமரபிலும் பல்வேறு மெட்டுகளில் மங்களத்தருக்கள் அமைக்கப்பட்டாலும் பின்வரும் மெட்டு தனித்துவமானதாகக் கொள்ளப்படுகிறது.

## மெட்டு இலக்கம் - 153

**மெட்டு :- தேவதிரித்துவ ஏகபரன்**

**தாளம் :- ஆதி (மிஸ்ரநடை)**

தேவ திரித்துவ ஏக பரனுக்கே மங்களம் - புகழ்
சேணாடர்க் கரசியாம் தாய் மரியாய்க்குமே மங்களம்

தேங் கமழ் பூங்கொடியேந்து சந்சூசைக்கும் மங்களம் - சிட்ட
தேசிக அந்தோனி மாமுனிவர்க்குமே மங்களம்

அத்தனின் பாதம் அமர்ந்திடும் தூதர்க்கும் மங்களம் - வான
அர்ச்சிய சிட்டர்க்கும் உத்தம மானோர்க்கும் மங்களம்

சத்திய மறைநிதம் புத்துயிர் ஓங்கவே மங்களம் - நீதி
சாரும் பலதிற மானோர்க்குமே சுப மங்களம்.

பாடியிந் நாடகம் பரிந்து தந்தோர்க்குமே மங்களம் - ஏக
பரனருள் என்றென்றும் பாலிக்க வேண்டினோம் மங்களம்.

- ★ இம்மெட்டின் இராகம் நடபைரவி.
- ★ இதைத்தவிர கூத்தில் பயன்படுத்தப்படும் வெவ்வேறு மெட்டுக்களில் மங்களம் இயற்றப்பட்டு பாடப்படும் வழக்கமுமுள்ளது.
- ★ பதிகைக்கான மூலபாடம் : விசயமனோகரன், பக்கம் - 150

OOO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிகைக்கு மூலபாடங்களாக பயன்படுத்தப்பட்ட கூத்து நூல்கள்

1. தேவசகாயம்பிள்ளை

புலவர் ஸ்ரீ முத்துக்குமாரு (அராலி)
ஆசீர்வாதம் அச்சகம், யாழ்ப்பாணம்.
இரண்டாம் பதிப்பு 1974

2.எஸ்தாக்கியார்

புலவர் வ. ம. சூசைப்பிள்ளை (மாதகல்)
ஆசீர்வாதம் அச்சகம், யாழ்ப்பாணம்.
முதலாம் பதிப்பு 1962

3. விசய மனோகரன்

புலவர் வெ. மரியாம்பிள்ளை (சுண்டிக்குளி)
ஆசீர்வாதம் அச்சகம், யாழ்ப்பாணம்.
முதலாம் பதிப்பு 1968

4. மரியதாசன்

புலவர் வெ. மரியாம்பிள்ளை (சுண்டிக்குளி)
ஆசீர்வாதம் அச்சகம், யாழ்ப்பாணம்.
முதலாம் பதிப்பு 1972

5. கண்டி அரசன்

புலவர் நீ. மிக்கோர்சிங்கம் (பாஷையூர்)
நாட்டுக்கூத்து ஒன்றியம், பாஷையூர்.
முதலாம் பதிப்பு 1978

6. மனம் போல் மாங்கல்யம்

மு. வி. ஆசீர்வாதம்
ஆசீர்வாதம் அச்சகம், யாழ்ப்பாணம்.
முதலாம் பதிப்பு 1976

7. ஜெனோவா (செனகப்பு)

புலவர் சந்தியோகு (குருநகர்)
கையெழுத்துப்பிரதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. கருங்குயில் குன்றத்துக் கொலை

புலவர் வ. ம. சூசைப்பிள்ளை (மாதகல்)
கையெழுத்துப்பிரதி

9. வீரபாண்டிய கட்டப்பொம்மன்

புலவர் நீ. மிக்கோர்சிங்கம் (பாஷையூர்)
மிக்கோர்சிங்கம் மனோகரன்
முதலாம் பதிப்பு 2004

10. புனிதவதி

புலவர் தொம்மையர் (பாஷையூர்)
கையெழுத்துப்பிரதி

11. சங்கிலியன்

புலவர் வ. ம. சூசைப்பிள்ளை (மாதகல்)
கையெழுத்துப்பிரதி

12. செனபோன்

(கையெழுத்துப்பிரதி)

13. ஞானசௌந்தரி

புலவர் பெ. கிறிஸ்தோப்பர் (பாஷையூர்)
கையெழுத்துப்பிரதி

14. சஞ்சுவாம்

புலவர் பொன்னையா (சுண்டிக்குளி)
(கையெழுத்துப்பிரதி

15.இம்மனுவேல்

புலவர் செகராசசிங்கம் (பாஷையூர்)
முதலாம் பதிப்பு 1998

16. பண்டார வன்னியன்

புலவர் ஞான. மா. செல்வராசா (ஊர்காவற்றுறை)
பழைய மாணவர் சங்கம், தென் இலங்கைக் கிளை,
கொழும்பு.
புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை.
முதலாம் பதிப்பு 2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. வித்துக்கள் — கவிஞர் தேவதாசன் (பாஷையூர்)
யாழ். கத்தோலிக்க கலை இலக்கியக் கழகம்
முதலாம் பதிப்பு 1990

18. நீ ஒரு பாறை
அண்ணாவியார் அ. பாலதாஸ் (பாஷையூர்)
திருமறைக் கலாமன்றம்
(கையெழுத்துப்பிரதி))

19. அனைத்தும் அவரே
அண்ணாவியார் அ. பாலதாஸ் (பாஷையூர்)
திருமறைக் கலாமன்றம்
(கையெழுத்துப் பிரதி)

20. முத்தா மாணிக்கமா
புலவர் சூசைப்பிள்ளை (பாஷையூர்)
கையெழுத்துப்பிரதி

21. கம்பன் மகன்
யோ. யோண்சன் ராஜ்குமார் (நாரந்தனை)
திருமறைக் கலாமன்றம்
முதலாம் பதிப்பு 2003

22. சோழன் மகன்
ம. சாம்பிரதீபன் (குருநகர்)
திருமறைக் கலாமன்றம்,
கலைமுகம் சஞ்சிகை 1998

23. ஏகலைவன்
யோ. யோண்சன் ராஜ்குமார் (நாரந்தனை)
கையெழுத்துப்பிரதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண தென்மோடிகூத்துமரபு
# இசை மெட்டுக்கள்
# இசைப் பேழையில் பங்குபற்றியோர்

**குரல் கொடுத்தோர்**

அண்ணாவியார் திரு. எ. வரப்பிரகாசம்

அண்ணாவியார் திரு. வ. அல்பிரட்

அண்ணாவியார் திரு. அ. பேக்மன் ஜெயராஜா

அண்ணாவியார் திரு. அ. பாலதாஸ்

அண்ணாவியார் திரு. ஆ. மரியதாஸ்

அண்ணாவியார் திரு. மு. அருள்பிரகாசம்

அண்ணாவியார் திரு. அ. அமிர்தநாயகம்

அண்ணாவியார் திரு. ம. யேசுதாசன்

அண்ணாவியார் திரு. தொ. அருள்ராசா

அண்ணாவியார் திருமதி. சாந்தி ரவீந்திரன்

திரு. எவ். யூல்ஸ் கொலின்

திரு. எஸ். ஏ. அழகராஜா

திரு. ஏ. ஆர். விஜயகுமார்

திரு. தை. ஜஸ்ரின் ஜெலூட்

திரு. இ. ஜெயகாந்தன்

திரு. அ. அன்று யூலியஸ்

திரு. யோ. யோண்சன் ராஜ்குமார்

திரு. செ. வசன்பேக்

திரு. அ. யசிதரன்

திருமதி பிரிஜெற் கனிசியஸ்

திருமதி மேரி கிளமென்சியா நெல்சன்

செல்வி கிருஷாந்தி நடராஜா

செல்வி வினோஷா அருள்மரியதாஸ்

செல்வி ஸ்ரனிஸ்லோஸ் றெஜி லூசியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உரை**

திருமதி கெலன் மேரி விக்ரர்

திரு. யோ. யோண்சன் ராஜ்குமார்

திரு. பீ. சே. கலீஸ்

**பக்கவாத்தியம்**

ஹார்மோனியம் - தவநாதன் றொபேட்

மிருதங்கம் - எஸ். பெகின்

சல்லரி - அண்ணாவிமார்கள்

**ஒலிப்பதிவு**

சத்தியன்

சப்தமி கலையகம்

யாழ்ப்பாணம்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

**தயாரிப்பு, வெளியீடு**

திருமறைக் கலாமன்றம்

238, பிராதான, வீதி,

யாழ்ப்பாணம்

23.12.2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிழை திருத்தங்கள்

- மெட்டு இலக்கம் - 15 (பக்கம் - 11) - இம்மெட்டின் முதல் வரி தவறவிடப்பட்டுள்ளது.
  'தங்க மாமலர் கமழும்
  துங்கனே யூதேயா நகர்
  இங்கெனை அழைத்த சேதி
  ஏதென அறிவேனே'
- மெட்டு இலக்கம் - 17 (பக்கம் - 13) - இம்மெட்டின் இரண்டாவது பாடலடியில் விடுபட்டுள்ள வரிகள்
  'அங்கேதும் கலக மெழுந்திட
  அடுத்தாரோ படை தொடுக்கவோ நானும்'
- மெட்டு இலக்கம் - 29 (பக்கம் - 22)
  தாளம் :- சதுஸ்ர ஏகம் (மிஸ்ரநடை)
- மெட்டு இலக்கம் - 34 (பக்கம் - 26)
  தாளம் :- சதுஸ்ர ஏகம் (திஸ்ரநடை)
- மெட்டு இலக்கம் - 36 (பக்கம் - 29)
  இராகம் :- சங்கராபரணம்
- மெட்டு இலக்கம் - 41 (பக்கம் - 33)
  இராகம் :- சிந்துபைரவியை அடிப்படையாகக் கொண்டது
- மெட்டு இலக்கம் - 38 (பக்கம் - 30)
  தாளம் :- சதுஸ்ர ஏகம் (மிஸ்ரநடை)
- மெட்டு இலக்கம் - 38, 39 (பக்கம் - 30, 31) பாடல்களின் இறுதி இரு வரிகளும் எஸ். ஏ. அழகராஜாவால் எழுதப்பட்டவை.
- மெட்டு இலக்கம் - 89 (பக்கம் - 73)
  தாளம் :- (வீரம்) சதுஸ்ர ஏகம் (மிஸ்ரநடை), (சோகம்) மிஸ்ரசாபு
- மெட்டு இலக்கம் - 95 (பக்கம் - 79)
  தாளம் :- (வீரம்) சதுஸ்ர ஏகம் (மிஸ்ரநடை), (சோகம்) மிஸ்ரசாபு
- மெட்டு இலக்கம் - 98 (பக்கம் - 82)
  தாளம் :- (சோகம்) மிஸ்ரசாபு, (வீரம்) சதுஸ்ர ஏகம் (மிஸ்ரநடை)
- மெட்டு இலக்கம் - 106 (பக்கம் - 89)
  இராகம் :- ஹம்சத்வனி, கீரவாணி இராகங்களின் கலப்பு
- மெட்டு இலக்கம் - 153 (பக்கம் - 126)
  இராகம் :- நடபைரவியை அடிப்படையாகக் கொண்டது.

85184 L
200519

முன் அட்டை ஓவியம் :- ஓவியர் ரமணி
(கலைமுகம் சித்திரை - ஆனி 1992)
முன் அட்டை ஓவியம் கணினி வடிவமைப்பு :- அ. ஜுட்சன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Design & Print - Judeson. Jaffna. 0777 446973

வெளியீடு: திருமறைக் கலாமன்றம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org